கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

100/-

# ஜீவநதி

94 பிரதம ஆசிரியர் : க.பரணீதரன் ஆடி 2016





சி.ரமேஷ். க.சட்டநாதன். பெருமாள் சரவணகுமார்.
டென்மார்க் வி.ஜீவகுமாரன். மன்னார் அமுதன். அலெக்ஸ்பரந்தாமன்.
கொற்றை பி. கிருஷ்ணானந்தன். கே.ஆர்.டேவிட்.
கருணாகரன். சி.சிவசேகரம். ஸ்ரீ.பிரசாந்தன். சுமன்.
றிஸ்மியா. புலோலியூர் வேல்நந்தன். மஞ்சுமோகன்.
க.முத்துராஜா. ஆன் யாழினி

NOOLAHAM
FOUNDATION

ஈழத்தின் எண்ணிம நூலகம்

# நூலகம்

www.noolaham.org

noolahamfoundation@gmail.com

ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்களின்
பல்லாயிரம் ஆவணங்களைக் கொண்ட
எங்கிருந்தும் எவரும் எந்நேரமும் பயன்படுத்தக்கூடிய
மாபெரும் அறிவுக்களஞ்சியம்.

* 18000 ஆவணங்கள் * 5606 நூல்கள்
* 7120 சஞ்சிகைகள் * 3584 பத்திரிகைகள்
* 1792 பிரசுரங்கள் * 2782 எழுத்தாளர்கள்
* 1999 பதிப்பாளர்கள்
* 1705 நிறுவனங்கள் பற்றிய தகவற்தொகுப்பு
* 2702 ஆளுமை விபரங்கள் * 300 கையெழுத்துப்பிரதிகள்
* 100 புகைப்படங்கள் *4 நூல் வெளியீடுகள்
* 27கோர்வைகளில் இருந்த 5736 சுவடிகள்

அழிந்து போகும் நிலையிலுள்ள ஆவணங்களையும் ஒருபிரதிகளே
உள்ள ஆவணங்களையும் எண்ணிம வடிவங்களில் பாதுகாப்பதே
அவற்றை அடுத்த சந்ததிக்கு கொடுப்பதற்கான
சிறந்த வழிமுறையாகும்.

உங்கள் நூல்களை மின் வருடி எமது நூலகத்தில்
இணைக்க அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு:
Noolaham Foundation
No - 7, 57th lane colombo - 06
Tel: +94 112363261

Noolaham Foundation
95, Vaddakulathady
Pointpedro Road, Kaddaiprai
Kopay, Jaffna

# ஜீவநதி

கட்டுரைகள்

**பேராசான் பெருந்தகைச்சான்றோன் இரா. வை. கனகரத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சரிதமும் புலமைத்துவமும்**
சி. ரமேஷ்........................................................ 03
**குந்தவையின் யதார்த்தமும் புனைவும்**
க. சட்டநாதன்.................................................... 15
**பூகம்பமாய்ப் பலித்துவிடும் பெருங்கனவு (சந்திரலேகா கிங்ஸ்லியின் கவிதைகள் பற்றிய அறிமுகக்குறிப்புகள்)**
பெருமாள் சரவணகுமார்........................................ 40

**சிறுகதைகள்**

டென்மார்க் வி. ஜீவகுமாரன்................................ 09
மன்னார் அமுதன்.................................................. 19
அலெக்ஸ் பரந்தாமன்............................................ 45

**குறுங்கதை**

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்............................ 24

**உருவகக்கதை**

கே.ஆர். டேவிட்.................................................... 43


**நேர்காணல்**

கருணாகரன்......................................................... 26

**கவிதைகள்**


சி.சிவசேகரம்........................................................ 13
ஸ்ரீ.பிரசாந்தன்...................................................... 14
சுமன்................................................................... 14
றிஸ்மியா............................................................... 14
புலோலியூர் வேல்நந்தன்...................................... 14
மஞ்சுமோகன்........................................................ 18
க.முத்துராஜா....................................................... 23
ஆன் யாழினி........................................................ 48

**பேசும் இதயங்கள்**



பேராசான் பெருந்தகைச்சான்றோன் இரா.வை. கனகரத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சரிதமும் புலமைத்துவமும்

- சி.ரமேஷ் -



**நேர்காணல்**

- கருணாகரன் -



**அட்டை ஓவியம்**

நன்றி இணையம்

# ஜீவநதி

**2016 ஆடி இதழ் - 94**



**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



**இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.**



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## வேலியே பயிரை மேய்ந்தால்...

சமூகத்தில் நிலவும் கொடுமைகளுள் பாரிய கொடுமையாக பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்று வருவதைக் கண்டு, மனித சமுதாயமே வெட்கித் தலைகுனிய வேண்டும்; இக்கொடுமைக்கு எதிராக போர்க்கொடி உயர்த்த வேண்டும். ஆனால், அண்மைக்காலங்களில் வெளிவரும் பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும் போது மனிதாபிமானமும் நீதியும் நேர்மையும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டனவா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டிய பாடசாலைகளிலேயே பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெறுவதான நிலைமைகளைக் காணுகின்றபோது உள்ளம் கொதிக்கின்றது. அப்பாவிப்பாடசாலைப் பிள்ளைகளை ஆசிரியர்களே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதும் உட்படுத்த முயற்சிப்பதும் மன்னிக்கப்பட முடியாத குற்றங்கள். அவ்வாறு குற்றங்கள் புரியும் ஆசிரியர்கள் கையும் களவுமாகப் பிடிபட்ட நிலையிலும் அந்த ஆசிரியர்களைக் காப்பாற்ற நினைப்பது மடத்தனம். உண்மை நிலவரத்தை அறிந்து கொள்வதற்கான நீதியான விசாரணைகளை மேற்கொண்டு சட்டத்தின் முன் குற்றவாளிகளை நிறுத்த வேண்டியது கல்விச் சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

"ஆசிரியர்" என்பதன் அர்த்தமே மாசற்றவர் என்பது தான். பாடசாலைகளில் பிள்ளைகளுக்குப் பெற்றோராக விளங்க வேண்டிய ஆசிரியர்களில் சிலரின் துர்நடத்தைகளால் ஆசிரியம் எனும் உயர் தொழில் சிறுமைக்குள்ளாவது விரும்பத்தக்கதன்று. கல்விச்சமூகமும் எழுத்தாளர்களும் பாலியல் துஷ்பிரயோகம் எனும் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய தருணம் இது. நாம் எல்லோரும் இதில் இணைவோமாயின் முழுச்சமூகமும் எம்முடன் கைகோர்த்து நிற்கும்.

- க.பரணீதரன்


### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
படிப்பகம் - ஆரியகுளம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி

■ சி. ரமேஷ்

# பேராசான் பெருந்தகைச்சான்றோன் இரா.வை.கனகரத்தினம் அவர்களின் வாழ்க்கைச் சரிதமும் புலமைத்துவநோக்கும்

பேராசிரியர் கனகரத்தினம் கடின உழைப்பாளி. எந்த நூலையும் ஆழ்ந்து படிப்பவர். அறிவாற்றலும் தெளிவாற்றலும் ஆன்ற புலமையும் ஒருங்குறப் பெற்றவர். இதனால் இவருடைய ஆய்வடங்கல்கள் ஈழத்து இலக்கியத் துறைக்கு வளம் சேர்ப்பவை.



இந்து நாகரீகத்தை தெட்டத் தெளிவாகக் கற்றுணர்ந்தவரும் சைவ சமயத்தின் பாற்பட்டு அறப்பணி செய்தவரும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தினைத் துறை போகக் கற்றவரும் அவ்விலக்கியத்தில் ஆற்றல் பொருந்திய வல்லாளருமான இர.வை.கனகரத்தினம் அவர்கள் தன்னிகரில்லாத் தமிழ்ப் பணியாலும் சமயப்பணியாலும் தமிழ் உலகம் போற்ற வாழ்ந்தவர். ஆறுமுகநாவலர் மீது கொண்ட பற்றினால் பைந்தமிழை ஆய்ந்து கற்றவர். அதனால் அவர் பாதம் பணிந்து தமிழ்ப் பணியாற்றியவர். களனி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசானாகவும் பெரும் பண்பாளனாகவும் விளங்கிய இரா.வை.கனகரத்தினம் அவர்கள் வாழும் காலம் வரை கண்ணியம் மிக்க கருணா சீலனாகவும் காத்திரமிக்க நூல்களைத் தந்த தகைசார் தமிழாசானாகவும் திகழ்ந்தவர். "பேரிலங்கும் ஆராய்ச்சி நூல் பலவும் வடித் தளித்த பெருமை மிக்கோன்" என அண்ணா மலைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி சாமிஐயா அவர்களால் சிறப்பிக்கப் பட்ட பேராசிரியர் கனகரத்தினம் அவர்கள்

"நல்லை நகர் ஆறுமுக நாவலரை ஆர்வத்துடன்
நயந்தினிது பாராட்டவும்
நவையற்ற அன்னவர் சுவைமிக்க நற்புலமை
நண்ணியே ஆராயவும்
இல்லை இனி வேறொருவர் இவற்கு நிகராகவென
எண்ணுமாறுழைக்கும் தொண்டன்
இரா.வை.கனகரத்தினம் என ஈழம் போற்றிட
இசை பரந்தியன்ற ஆசான்"

எனக் கவிஞர் முருகையனால் விதந்து போற்றப்பட்டவர்.

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் தென் மேற்கேயுள்ள நெடுந்தீவில் வைத்திலிங்கம், சிவகாமிப்பிள்ளை தம்பதியினருக்கு 23.08.1946 அன்று மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் கனகரத்தினம் ஆகும். ஆயினும் வீட்டில் இவரைச் சின்னக்கிளி என்றே

அழைத்தனர். சின்னக்கிளி பிறக்க முன்னரே இத்தம்பதியினர் விஜய ரத்தினம், சிதம்பரநாதன் என இரு புதல்வர்கள் இருந்தனர். இவர் பிறப் பின் தவப் பயனால் வைத்திலிங்கம் சிவகாமிப் பிள்ளை தம்பதியினருக்கு தில்லை நாயகி, புவனேஸ்வரி, வைத்தி கனகரத்தினம், குண சிங்கம், இரா ஜேஸ்வரன், கிருஷ்ண மூர்த்தி, பரமேஸ்வரி, தயாசீலி போன்ற அரிய இணையில்லாச் செல்வங்கள் பெறுதற்கரிய பேறாகக் கிடைக்கப் பெற்றன.

தமது ஆரம்பக்கல்வியை 1951ஆம் ஆண்டு நெடுந்தீவு கோட்டைக்காடு மகேஸ்வரி வித்தி யாசாலையில் கற்ற கனகரத்தினம் அவர்கள் 1952 ஆம் ஆண்டு நெடுந் தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை யில் தம் கல்வியைத் தொடர்ந்தார். இதனைத் தொடர்ந்து 1953ஆண்டு யாழ்/முத்துத்தம்பி வித்தியா சாலைக்கு கல்வி பயிலச் சென்றார். இங்கு கல்வி பயின்ற காலங்களே இவர் வாழ்வின் பொற்காலங்கள் எனலாம். இப்பாடசாலையே இவருக்கு அன்பே சிவம் என்பதைப் போதித்தது. மனிதனை மனிதன் நேசிப்பதைக் காட்டிக் கொடுத்தது. மற்றவனுக்காய் வாழ் என்பதை எடுத்துரைத்தது. மனிதன் நீதியுடன் நிற்கவேண்டும், நெறியோடு வாழவேண்டும், நியாயத்துக்கு குரல் கொடுக்கவேண்டும் என்பதை வலி யுறுத்தியது. வேலுப்பிள்ளை வாத்தி யார், பண்டிதர் பசுபதி, குருவிச் சட்டாம்பியார், புங்குடுதீவு கார்த்தி கேசு, உடுப்பிட்டி செல்லத்துரை வாத்தியார், புத்தூர் இரத்தினம் வாத்தியார், இராசம்மா டீச்சர் (கோப்பாய்), சங்கீத ஆசிரியை புவனேஸ்வரி, தலைமை ஆசான் சரவணமுத்து, திருகோணமலை நவரத்தினம் வாத்தியார் என இப்பாடசாலைக்கு வாய்த்த அத்தனை ஆசிரியர்களும் தனித் திறமை பெற்றவராகக் காணப் பட்டனர். தமிழிலும் சமயத்திலும் நன்கு பாண்டித்தியம் பெற்ற இவர் பூமி சாஸ்திரத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். ஓய்வு நேரங்களைப் புத்தகம் வாசிப்பதிலும் விளை யாட்டிலும் செலவிட்டார்.

1960 வரை முத்துத்தம்பி வித்தியாசாலைக்குச் சென்று சமயப் பிரசங்கங்களை நடாத்தும் ஒருவராக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளைக் காணப்பட்டார். அவரது தமிழ், சமயப் பண்ணையில் படித்த மாணவர்கள் பலர் முத்துத்தம்பி வித்தியாசாலையின் ஆசிரியர்களாகவும் அறிவுரை வழி காட்டியாகவும் இருந்துள்ளனர். அத்துடன் முத்துத்தம்பி வித்தியாசாலையின் மாணவர்களுக்குப் பிரத்தியேகமாகக் கல்வி கற்பிக்கும் ஒருவராகவும் பண்டிதமணி காணப்பட்டுள்ளார். அவ்வகையில் பேராசான் கனகரத்தினம் அவர்களுக்கு நன்னூல், யாப்பியல் முதலான நூற்களைக் கற்பித்தவராகவும் சைவசித்தாந்தம் பற்றிய அடிப்படை அறிவை வழங்கியவராகவும் பண்டித மணி காணப்பட்டார். கனகரத்தினம் அவர்களின் சமய, தமிழ் அறிவுக்கு வித்திட்டவராக மட்டுமன்றி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவரை நாவலர்பால் வழிப்படுத்தியவராகவும் காணப்பட்டுள்ளார். 1985 ஆம் ஆண்டு "ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு ஓர் ஆய்வு" என்ற நூலை வெளிக் கொண்டு வந்த போது இந்நூலுக்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த ஆசியுரை ஒன்றையும் வழங்கினார்.

"பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு இரா.வை.கனகரத்தினம் அவர்கள் ஆலயந்தோறும் நடைபெற்று வந்த நடைபெறுகின்ற புராணப் படிப்பு உள்ளிட்ட படிப்புக்களைப் பற்றி விரிவானதொரு ஆராய்ச்சி செய்திருக்கின்றார். ஆராய்ச்சி பெரிதும் பயனுடையதாயிருக்கும்"

இவ்வாசியுரை இந்நூலுக்கான சிறந்த மணி மகுடமாக விளங்குவ துடன் இந்நூல் ஈழத்தில் பெறுகின்ற சிறப்பினையும் எடுத்துரைக்கிறது. பண்டிதமணி மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாக பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமும் ஆய்வடங்களும் என்னும் நூலை எழுதிய பேராசிரியர் கனகரத்தினம் 2004ஆம் ஆண்டு பேராசிரியர் சுசீந்திரராஜாவின் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறித்த பார்வைப் பேதங்களைச் சுட்டி மறுதளித்து பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் புலமையியல் : ஓர் ஆய்வு என்னும் நூலையும் எழுதினார்.

1962ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்காக யாழ்/செங்குந்தா இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டார். புவியியல், வரலாறு, அரசியல், தமிழ்ப் பாடங் களைக் கற்றார். இக்கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில் இவரின் கற்றல் நடவடிக்கைகளுக்கு நாகலிங்கம் குழந்தைவேலு மாஸ்டரும் பேராசான் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களும் சிற்பி ஐயா என அன்புடன் அழைக்கப்படும் சி.சரவணபவன் ஆசிரியரும் உதவினர். அயராத முயற்சி யாலும் சலிப்படையாத உழைப்பினாலும் க.பொ.த.உ.தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று 1968 இல் கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டு 1972 இல் பல்கலைக் கல்வியை நிறைவு செய்து கொண்டார். 1968 காலப்பகுதியிலேயே தமிழ் இந்து பண்பாட்டுத்துறை என்னும் புதியதுறை கொழும்பு பல்கலைகழகத்தில் உருவாக்கப்பட்டது. இத்துறையின் தலைவராக பேராசிரியர் சதாசிவம் விளங்கினார். பேராசிரியர் சதாசிவத்தின் வழிகாட்டலின் கீழ் இந்துநாகரீகத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்று இப்பல்கலைக்கழகத்தில் இருந்து முதல் முதல் வெளியேறியவர்களாக பேராசிரியர் கலைவாணி இராமநாதன், பேராசிரியர் கனகரத்தினம், சிரேஸ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் முதலியோர் காணப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சமயத்தில் பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் கோ.சுந்தரமூர்த்தி, கலாநிதி திருமதி தியாகராஜா, சமஸ்கிருத விரிவுரையாளர் தனபாக்கியம் அருட்செல்வம் அவர் களின் விரிவுரைகளுக்குத் தவறாது சமூகமளிக்கும் ஒருவராகக் காணப்பட்டார்.

பல்கலைக்கழகத்தில் கற்கும் சமயத்திலும் அங்கு விரிவுரையாள ராகக் கடமையாற்றிய சந்தர்பத்திலும் பேராசிரியர் ஆ.சதாசிவம் மீது மிக்க அன்புடையவராகவும் அவருடைய விசுவாசமிக்க மாணவராகவும் திகழ்ந்தார். சதாசிவம் அவர்களின் மொழியறிவு குறித்தும் அவருடைய

ஈழத்து ஆய்வியல் முயற்சிகளும் குறித்தும் பிறரிடம் சிலாகித்துப் பேசுபவராகவும் காணப்பட்டார். சதாசிவம் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக 1988 இல் பேராசிரியர் சதாசிவம் அவர்களின் ஆக்கங்கள் பற்றிய ஆய்வடங்கலைத் தயாரித்து வெளியிட்டார். இக்காலப்பகுதியிலேயே இவரின் "மொழிநூல் வல்லுனர் பேராசிரியர் சதாசிவம்" என்ற கட்டுரையும் வெளிவந்தது. அத்தோடு "ஏழாலை அத்தியடி அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு ஒரு நோக்கு" என்ற நூலையும் பேராசிரியர் சதாசிவம் அவர்களுக்கே சமர்ப்பணம் செய்திருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

1975 ஆம் ஆண்டு கெலனியா பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்த இவர் 1980 வரை அப்பல்கலைக் கழகத்திலேயே கடமையாற்றினார். இப்பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய பேராசிரியர் தனஞ்செயராஜசிங்கத்தின் நட்பு இவரை நுண்ணாய்வு மிக்க சிறந்த கல்விமானாக்கியது. சிங்கி எனப்படும் பேராசிரியர் தனஞ்செயராஜசிங்கம் ஒரு விடயத்தை கூர்ந்து ஆழ்ந்து நோக்கும் தன்மையும் ஒரு நூலை அலசி ஆய்வு செய்யும் திறனும் பேராசிரியர் கனகரத்தினத்தைக் கவர்ந்தன. தனஞ்செயராஜசிங்கத்தின் ஆறுமுக நாவலர் குறித்த பார்வை அப்பணியில் இவரை மேலும் முன்னேற வைத்தது. அது மாத்திரமன்றி நாட்டாரியல் தொடர்பான கள ஆய்வுகளை பேராசிரியர் தனஞ்செயராஜசிங்கத்துடன் சேர்ந்து முன்னெடுத்த ஒருவராகவும் இவர் காணப்பட்டார்.

1980 – 2012 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாகத் தமிழ், சமயப்பணி செய்த ஒருவராகக் கனகரத்தினம் அவர்கள் காணப்படுகின்றார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1980களில் விரிவுரையாளராகத் தொடங்கிய அவர் வாழ்வு 1989களில் சிரேஷ்ட விரிவுரையாளராக மாற்றமுற்று 1996 காலப் பகுதியில் துணைபேராசிரியராகி (Marid) 2009களில் பேராசிரியராகப் (Marid) பரிணமித்தது. இக்காலப் பகுதியில் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். 1994 – 2000 காலப்பகுதியில் இலங்கை அரச பாடசாலை நூற்களுக்கான பாடநூல் ஆலோசனைக் குழுவில் இருந்த கனகரத்தினம் அவர்கள் தரம் ஐந்து முதல் தரம் பதினொன்று வரையுள்ள சைவநெறி நூற்களை சிறப்பாக பதிப்பித்து வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டினார். இக்காலப்பகுதியில் சைவநெறி ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதிலும் வெளியிடுவதிலும் தம்மாலான அனைத்துப் பணிகளையும் செய்தார்.


ஏழாலை மேற்கினைச் சேர்ந்த சி.இரத்தினம் அவர்களின் மகள் மீனலோஜினி 1981 ஜனவரி மாதம் 25ஆம் திகதி கரம் பிடித்தார். கணவனுடைய அனைத்துப் பணிகளிலும் அவருடன் கைகோர்த்து உழைத்த இவர் ஆசிரியர் பணியில் அர்பணிப்புடன் செயற்பட்டவராவார். இவரின் குடும்பத்தினரின் உதவியுடன் வெளிவந்த "ஏழாலை அத்தியடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு ஒரு நோக்கு என்ற நூல் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மதிப்புரையைத் தாங்கி வெளிவந்த நூலாகும். "ஈழத்துத் தமிழர் ஆராய முயல்வோருக்கு முக்கிய ஆய்வுக்களங்களாக ஆலயங்கள் அமைகின்றன" பேராசிரியர் சு.வித்தியானந்தன் முதலானோரின் கூற்றாகும். அவ்வகையில் இந்நூல் சைவப்பாரம்பரிய மிக்க ஏழாலை அத்தியடிக் கிராமத்தில் இருநூறு வருடங்களுக்கு மேலாக எழுந்தருளியிருக்கும் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாற்றை ஐந்து இயல்களில் சித்திரிக்கின்றது. இந்நூலின் முதல் இயல் ஆலயத்தின் முக்கியத்துவத்தையும் இரண்டாம் இயல் ஏழாலைக் கிராமத்தையும் ஏழாலை மக்களின் பண்பாட்டு பாரம் பரியத்தையும் மூன்றாம் இயல் புவனேஸ்வரி அம்பாள் மகத்து வத்தையும் நான்காம் இயல் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாற்றையும் ஐந்தாம் இயல் கோயிலில் எழுந்தருளி யிருக்கும் பரிவார தெய்வங்களையும் ஆலயத் தில் நடைபெறும் விழாக்களை யும் எடுத்துரைக்கின்றது. நூலில் இடம்பெறும் பின்னிணைப்புக்கள் திருவூஞ்சல், ஐம்மணி மாலை, போற்றித் திருப்பதிகம், அம்பாள் ஆலய தரிசன நெறி, நால்வர் சுவாமிகள் துதிகள், இசையும் இறைவனும், சைவத்திருமுறைகள் ஓதும் நெறி, தமிழ் மறையோர் பாடிய பண்களும் அவைபாட வேண்டிய பொழுதும், சைவத்திருநூல்கள், திருப்பள்ளி எழுச்சி, ஆலய விழாக் காலத்திற் பேணப்பட வேண்டிய பண், வாத்தியம், நாட்டியம் முத லானவற்றையும் எடுத்துரைக்கின்றன.


1994 ஆம் ஆண்டு கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம் நூலுக்கு மேலும் சில விளக்கக் குறிப்புக்களை எழுதி பதிப்பித்து வெளியிட்டார். இந்நூல் நாவலர் காலத்தோடு சம்பவங்களைக் கோத்துச் செல்கின்றது. அச்சம்பவங்கள் பேராசிரியர் கனகரத்தினம் அவர்களால் விடயதானங்களாகக் கருதப்பட்டு அடிக்குறிப்பு வழியாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. ஆயினும் இந்நூலைக் கனகரத்தினம் அவர்கள் மூலநூலாசிரியரின் மொழிநடையில் எவ்வித மாற்றத்தையோ திருத்தத்தையோ ஏற்படுத்தாது கச்சிதமாகப் பதிப்பித்துள்ளார். அத்துடன் நூலாசிரியன் வரலாற்றையும் முதன் முதலான ஆராய்ந்து எழுதியுள்ளார். மூல நூலில் இடம்பெறும் தமிழ் ஆண்டுகளுக்கு ஒப்பான ஆங்கில ஆண்டுகளைக் பேராசிரியர் கனகரத்தினம் அவர்கள் அடைப்புக்குறிக்குள் இட்டுக் காட்டுவது சாதாரண மனிதனும் இந்நூலைப் படிப்பதற்கு ஏதுவாக அமைகிறது. இதனாலேயே 1995ஆம் ஆண்டு சாகித்திய மண்டல விருதை இந்நூல் தட்டிச் சென்றது.

1996ஆம் ஆண்டு சி. செல்லையாப்பிள்ளையின் யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் சரித்திர சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமலையும் என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டார். இந் நூலினை முதன் முதலில் 1914 ஆம் ஆண்டு கொழும்பு கொம்பனித் தெரு மீனாம்பாள் அச்சியந்திரசாலை அச்சிட்டு வெளியிட்டது என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. இந்நூல் ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திர சுருக்கம், நாவலரவர்கள் பரிசோதித்தும் புதிதாய் இயற்றப்பட்டும்

புத்துரை எழுதப் பட்டும் வெளிப்படுத்தப்பட்ட நூல்கள், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலை, அநுபந்தம் முதற் பகுதி - யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைக் குறித்த துதிமாலை என்னும் தலைப்பிலும் அமைந்துள்ளது. இந்நூலில் இடம் பெறும் இணைப்பு1 : நாவலர்கள் மீது பாடப்பெற்ற தனிப்பாடல்களையும் இணைப்பு 2 : மகாவித்துவான் வடகோவை சபாபதி நாவலர் இயற்றிய தசகம், மு. ஆறுமுகம் உபாத்தியாயர், சுவாமி விபுலாநந்தர் பாடிய பாடல்களையும் 3 : ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்கள் ஆய்வடங்களையும் கொண்டமைகிறது. நாவலர் அவர்களின் வரலாற்றில் இந்நூல் முக்கிய நூலாக அமைகிறது. 1996 ஆம் ஆண்டு இந்து சமயப் பண்பாட்டு கலாச்சார அமைச்சு இந்நூலுக்கு விருது வழங்கி கௌரவித்தது.

பேராசிரியர் கனகரத்தினம் அவர்கள் எழுதிய முக்கிய நூல்களில் ஒன்று "நாவலர் உரைத்திறன்" ஆகும். தமிழ் உரைநடையின் தோற்றத்தையும் வரலாற்றையும் தமிழக, ஈழத்துச் சூழலுடன் விரிவாக ஆராயும் இந்நூல் நாவலரின் பல்துறைப்புலமையையும் நாவலரின் உரை, உரைநெறிகள் குறித்தும் நுட்பமாக ஆராய்கிறது. 1957ஆம் ஆண்டு பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் தமிழ் உரைநடை வரலாற்றைத் தொடர்ந்து 1960களில் ம.பீதாம்பரம் எழுதிய "ஈழநாட்டு உரையாசிரியர்கள்" என்ற கட்டுரையும் அதே காலப்பகுதி யில் F.X.C.நடராசா எழுதிய "ஈழம் வளர்த்த உரை" என்ற கட்டுரையும் வெளிவந்துள்ளன. அதைத் தொடர்ந்து ஈழத்தில் உரைநடை குறித்து வெளிவந்த மிகச் சிறந்த நூல் இது எனலாம். நாவலர் உரைத்திறனை அறிந்து கொள்ள உதவும் இந்நூல் நாவலர் எடுத்தாண்ட நூல்கள், மேற்கோள் விளங்காப்பாடல்கள், நாவலரின் அருஞ் சொல் விளக்கம், நாவலர் தொகை விரித்தல், நாவலர் உரை அகராதி போன்றவற்றையும் பின்னிணைப்பாகத் தருகிறது.











தனது தம்பி கிருஷ்ணமூர்த்தியை நினைவுகூரும் வகையில் மு.ஆறுமுகம்பிள்ளை அவர்கள் இயற்றிய சிறுத்தொண்டர் நாயனார் புராணத்தைப் பதிப்பித்தார். இந்நூலின் பின்னிணைப்பாக இடம்பெறும் "அன்புத் தம்பி மூர்த்தி(கிருஷ்ணா) எங்கள் குலக்கொடி, எங்கள் தருமர், தருமராஜா என்ற கட்டுரை தனது குடும்பத்தின் மீது இவர் வைத்திருந்த பேரன்பையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது. தம்பியின் பிரிவு தாங்காது வருந்தி வாடிய அண்ணனின் உள்ளத்தை இதில் காணலாம்.

ஈழத்தில் சமயம், இலக்கியம் தனித்துவமுடையதாக வளர்ச்சியுற்று விளங்குவதற்கு நாவலர் மரபு முக்கியமானதொன்றாக அமைந்தது. சமய நோக்கமும் இலக்கிய நோக்கமும் மக்கட்சார்பும் கொண்ட நாவலர் மரபை ஆதாரபூர்வமாக எடுத்து விளக்கும் முகமாகவும் இம்மரபை ஈழத்தில் தொடர்ந்தும் வளர்த்துச் செல்லும் வகையிலும் எழுதப்பட்ட நூலே நாவலர் மரபு என்னும் நூலாகும். நாவலர் மரபில் தோன்றி நாவலர் நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டவர்களான காசிவாசி செந்திநாதையர், நடராசையர், ஆறுமுகத்தம்பரான், அம்பலநாவலர், த.கைலாசப்பிள்ளை முதலானோரையும் நாவலரின் இலக்கிய நோக்கினை மனங்கொண்டு செயற்பட்டவர்களான வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப் பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றவர்களையும் நாவலரின் மக்கட் சார்பினை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டவர்களான சி.வை.தாமோதரம்பிள்ளை, சிற்.கைலாசப்பிள்ளை, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, பாவலர் துரையப்பாப்பிள்ளை முதலானோரையும் எடுத்துரைக்கும் வகையில் எழுந்ததே இந்நூலாகும்.

ஆறுமுகநாவலர் வரலாறு ஒரு புதிய பார்வையும் பதிவும் என்ற நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மக்களின் விடிவெள்ளியாக இருந்து தமிழ் இலக்கிய வரலாற்றின் பல்வேறுதுறைகளை வளர்த்துச் சென்ற ஆறுமுநாவலர் அவர்களின் பணிகளை புதிய கண்ணோட்டத்தில் நோக்கும் நூலாகும். பாடசாலைகளை அமைத்தல், பாடவிதானங்களைத் திட்டமிடல், பாட நூல்களை எழுதுதல், ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பித்தல், தமிழ் வாக்கியங்களுக்கு நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தல், வசனநடையின் உள்ளீட்டுத் தன்மையை வெளிக்கொணர்தல், ஒப்பீட்டுக்கல்வியை வளர்த்தல், தலபுராணபடன முறையை மீட்டுருவாக்கம் செய்தல், சைவசமயக் கொள்கைகளை நிறுவனமயப்படுத்தல், தமிழ்க் கல்வி இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தல் முதலான துறைகளின் வளர்ச்சியில் நாவலர் காட்டிய காத்திரமான ஈடுபாட்டினை நுண்ணாய்வு செய்யும் நூலாகும். நாவலர் குறித்து இவர் எழுதிய நூல்களில் மிகச் சிறந்த நூலாக இந்நூல் அறியப்படுகிறது. 2007 ஆம் ஆண்டு செங்கையாழியான் முதலானோரால் பரிந்துரைக்கப்பட்டு சம்பந்தர் விருதைப் பெற்ற நூல் இதுவாகும். சம்பந்தன் விருது வழங்கும் விழா மண்டபத்தில் கலாநிதி ம.சண்முகலிங்கம், கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் முதலானோரால்

விதந்துரைக்கப்பட்ட நூலாக இந்நூல் காணப்படுகின்றது. இந்நூல் வெளிவந்த காலப்பகுதியில் நாவலர் குறித்து வெளிவந்த பிறிதொரு நூல் நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும் என்ற நூல் ஆகும்.


நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும் என்னும் நூல் நாவலர் அவர்களின் சமூகப் பணிகளையும் பதிப்பு முயற்சிகளையும் பத்திரிகை பணிகளையும், அவரது தனித்துவமான உரைநடைத் திறனையும் நன்கு ஆராயும் நூலாகும். இந்நூலில் இடம்பெறும் ஈழநாட்டின் உரையும் தோற்றமும் வளர்ச்சியும், ஆத்திசூடியும் ஆறுமுகநாவலரும், நாவலரின் கொன்றைவேந்தன், நாவலரின் பணிகளும் சைவ சித்தாந்தம் பற்றிய கருத்துநிலைகளும் முதலான கட்டுரைகள் சிறப்பானமுறையில் ஆழமான முறையில் நுண்ணாய்வு செய்யப்படுகின்றன. மேலும் இந்நூல் நாவலரின் கோயில் புராணஉரையையும், திருமுருகாற்றுப்படை உரையையும் சிறப்பாக ஆராய்கிறது.


கனகரத்தினம் அவர்கள் கலாநிதி பட்டத்தைப் பெறும் நோக்கில் எழுதப்பட்ட ஆய்வே "ஈழத்துச் சைவ சமய வளர்ச்சியில் சிதம்பரத் செட்டியாரின் பங்களிப்பு" என்ற நூல். அவர் இறுதியாக எழுதி வெளிவந்த நூலும் இதுவேயாகும். பசுபதிச்செட்டியாரின் வாழ்க்கை வரலாற்றை சைவபரிபாலனசபையுடனும் திருக்கேதீஸ்வரத்துடனும் தொடர்புபடுத்தி ஆராயும் இந்நூல் செட்டியாரின் கல்வி, சமுதாயப் பணிகளுடன் செட்டியாருக்கும் புலவோர்க்கும் இருந்த தொடர்பையும் விரிந்து நோக்குகிறது.


கனகரத்தினம் அவர்கள் முந்நூற்றுக்கும் அதிகமான, விரிவான ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதியவர் ஆவார். அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் பல நூலுருப் பெறவில்லை. சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவந்தது போக எஞ்சிய பல, கையெழுத்துப் பிரதிகளாகவே இன்னும் உள்ளன. சமயம், வரலாறு, கோட்பாடுகளை விளக்கும் வகையில் இவரெழுதிய சம்பாவில் இந்துப் பண்பாடு, வீரசைவக் கோட்பாடும் அதன் சமுதாய நோக்கும், ஈழத்து பக்தி இலக்கியப் பரப்பு, இந்து சமயம் ஒரு கண்ணோட்டம், அத்வைதக் கோட்பாடு, சைவமும் தமிழும் என்னும் கருத்துநிலை ஒரு விமர்சனக் குறிப்பு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய சைவ சமய இயக்கங்கள் (1840 – 1858), தமிழ்மறை வழிபாடு, ஈழ நாட்டில் ஓலைச் சுவடிகளின் பாதுகாப்பு முதலான கட்டுரைகள் இந்து சமயத்தின் வேர்களைக் கண்டறிய துணை செய்வதுடன் அதன் தோற்றம் வளர்ச்சி முதலானவற்றையும் மதிப்பிடவும் உதவுகின்றன.


தமிழ்ச், சமயப் புலமையாளர்களை மையப் படுத்தி இவ ரெழுதிய கட்டுரைகள் தகைசார் சான்றோர்களின் வரலாற்றை அறியத் துணை செய்வதுடன் தமிழ், சமய இலக்கியத்தில் அவர்கள் பெறும் இடத்தினை மதிப்பிடவும் உதவுகின்றன. தமிழறிஞர் கு.முத்துக் குமாரசாமி, சைவப் பெரியார் வைத்தியலிங்கம் துரைச்சாமி, சைவப் பெரியார் சுதுமலை வி.விசுவநாதன், வரலாற்றுப் பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் சதாசிவம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், பண்டிதமணியும் சைவப் பாரம்பரியமும், தமிழ்மொழி வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் வே. கனகரத்தினம் உபாத்தியாயரின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம் பெறும் முக்கியத்துவம், தமிழறிஞர் சுன்னாகம் கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை (1900 – 1987), யாழ்ப்பாணம் காரைதீவு தந்த இரு கண்மணிகள், பீற்றர் பேர்சிவல் பாதிரியார் ஓர் அறிமுகம், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் சி. தில்லைநாதன், விபுலானந்த அடிகளும் நவநீதகிருஸ்ண பாரதியும், சி.வை தாமோதரம்பிள்ளையின் ஒரு பண்பாட்டியியல் நோக்கு, சுவாமிநாத பண்டிதர் ஓர் அறிமுகம், சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு பண்பாட்டியல் நோக்கு, இருபாலை சேனாதிராச முதலியார் ஓர் அறிமுகம், கூழங்கைத் தம்பிரான் ஒரு மதிப்பீடு, காலிங்கராஜாவின் ஓர் அறிமுகம், இணுவில் சின்னத்தம்பிப் புலவர் ஒரு குறிப்பு, ஒல்லாந்தர் கால தமிழ் இலக்கிய வரலாற்றில் பிலிப்பு டீமெல்லோவின் பங்களிப்பு, ஒல்லாந்தர்கால தமிழ் இலக்கியத்தில் அனந்த சுப்பையர், சூரியனார் கோயில் ஆதினத்தின் சிவாக்கிரக யோகிகள், யாழ்ப்பாண பருத்தித்துறை தும்மைநகர் சபா.சுப்பிரமணிய சாஸ்திரியார், இலங்கைத் தமிழ் சுடர் மணிகள், இ.நம.சிவசம்பு அவர்களின் யாழ்ப்பாண மல்லாகம் வி.விசுவநாதபிள்ளை அவர்களினதும் அவரது புத்திரர் வி.கனகசபைப் பிள்ளை அவர்களினதும் வாழ்க்கை வரலாறு, ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் சிதம்பரத.மு.பசுபதிச் செட்டியா ஒரு மதிப்பீடு, ஈழநாட்டில் ஒல்லாந்தகால தமிழியல் வளர்ச்சியில் கொன்சாள்ஸ் அடிகளார், சைவப்பெரியார் ச.அருணாசல உபாத்தியாரும் இந்துபோட். ச.இராசரத்தினமும், ஈழத்து செம்பறைச் சிதம்பர சுவாமிகள் ஓர் அறிமுகம், வரத பண்டிதரும் வரத பண்டிதமும், கணகட்டி மடம் மறை ஞான சம்மந்தரும் ஆன்மானந்த வாதமும், வடகோவை சபாபதி நாவலர் ஓர் மதிப்பீடு, ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் சிதம்பரத.மு.பசுபதிச் செட்டியார் ஒரு மதிப்பீடு, ஈழநாட்டில் ஒல்லாந்தகால தமிழியல் வளர்ச்சி





யில் கொன்சாள்ஸ் அடிகளார், கொக்குவில் சபாரத்தின முதலியார் ஒரு நோக்கு, சைவவித்தியா விருத்திச் சங்க வளர்ச்சியில் இரா சரத்தினம் அவர்களின் பங்களிப்பு, சைவசிகாமணி ஆறுமுகம்பிள்ளை ஓர் ஆய்வு, தமிழ் நாட்டில் சதாவ தானி மேலைப் புலோலி நா.கதிர வேற்பிள்ளை, யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையின் தோற்றமும் வளர்ச்சியும், ஆறுமுகநாவரும் விபுலானந்த அடிகளும், சைவப் பெரியார் சு. இராஜரட்ணமும் ஈழ கேசரிப் பொன்னையாவும், சைவப் பெரியார் மகாவித்துவான் இணுவில் அம்பிகைபாகர், சங்க இலக்கியத் தில் ஈழத்து அறிஞர் பங்களிப்பு, கொக்குவில் சபாரத்தின முதலியார் ஒரு நோக்கு, கைலாசப்பிள்ளையும் விபுலானந்த அடிகளும், பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை அவர் களின் வாழ்வும் பணியும், வி.கனக சபைப்பிள்ளைய அவர்களினதும் வாழ்க்கை வரலாறு, தமிழ் நாட்டில் நாவலரின் சைவமுயற்சிகள், மாதகல் மயில்வாகனப்புலவர் ஒரு நோக்கு, நல்லூர் தம்பு கைலாயப் பிள்ளையின் சமயப் பணிகள், தமிழ் நாட்டில் சதாவதானி மேலைப் புலோலி நா. கதிரவேற்பிள்ளை, ஈழ நாட்டில் சதாவதானி மேலைப் புலோலி கதிரவேற்பிள்ளை சைவப் பெரியார் திரு.மு.மயில்வாகனம், பாரதியார் போற்றும் யாழ்ப் பாணத்துச் சுவாமி யார்? ஞானப் பிரகாசர் ஆய்வுக்குறிப்பு, யாழ்ப் பாணம் நல்லூர் ஞானப்பிரகாச முனிவர் என ஏராளமான கட்டுரை கள் ஈழத்து அறிஞர்களின் பெரு வாழ்வைச் சித்திரிக்கின்றன. தமிழ்ச் சான்றோர்களின் வாழ்வியலைத் துல்லியமாக விளக்கி நிற்கும் இக்கட்டுரைகள் நூலுருப் பெறுமே யானால் தமிழ் கூறும் நல்லுலகம் நிச்சயம் பயன் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஈழத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன், கலாநிதி இ.பாலசுந்தரம் ஆகியோருக்குப் பின்னர் நாட்டுப்புறவியல் துறையில் அதிகம் உழைத்த ஒருவராகப் பேராசிரியர் கனகரத்தினம் காணப் படுகின்றார். நாட்டார் வழக் காற்றியல் துறையில் ஏற்படும் புதிய வளர்ச்சிப் போக்குகளைக் கண்டறிந்து அதனை உள்வாங்கி ஆய்வுகளை மேற்கொண்டார். நாட்டறியல் தெய்வங்கள் குறித்து மேற்கொண்ட ஆய்வுகள் ஆழ்ந்து நோக்கத்தக்கவை. அவ்வகையில் வன்னியில் கண்ணகி வழிபாடு, ஈழத்தில் கண்ணகி அம்மன் வழிபாடு, ஐயனார் வழிபாடும் ஈழத்து வன்னிமை மக்களும், ஈழத்து வன்னிமைகளில் சிறுதெய்வ வழியாடு, நாட்டார் வழக்காற்றில் கொத்தித் தெய்வம், நாட்டார் வழக்காற்றில் பெரியதம்பிரான் வழிபாடு, நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் பெரியதம்பிரான் வழிபாடு ஓர் அறிமுகம், வதனமார் வழிபாடு, ஈழத்து வன்னிமைகளின் நாச்சியார் வழிபாடு, மாரிப்பாட்டு அல்லது கண்ணகையம்மன் கப்பற்பாட்டு முதலான கட்டுரைகள் இவர் இறந்த பின்னரும் பேர் சொல்லும் கட்டுரைகளாகும். இது தவிர வன்னி மக்களின் மரபும் பண்பாடும், வன்னி மக்களின் விவசாயச் சடங்குமுறை, சமயச்சடங்குகள் உயிரோட்டமுள்ள வாழ்க்கைப் படிமங்கள், ஈழத்தின் நாட்டார் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ஈழத்து வன்னிமை நாட்டுப்பாடல் முதலான கட்டுரைகள் ஈழத்து நாட்டார் இலக்கியத்துக்கு வளம் சேர்ப்பவையாக அமைகின்றன.

பேராசிரியர் கனகரத்தினம் கடின உழைப்பாளி, எந்த நூலையும் ஆழ்ந்து படிப்பவர். அறிவாற்றலும் தெளிவாற்றலும் ஆன்ற புலமையும் ஒருங்குறப் பெற்றவர். இதனால் இவருடைய ஆய்வடங்கல்கள் ஈழத்து இலக்கியத் துறைக்கு வளம் சேர்ப்பவை. அவ்வகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பேராசிரியர் சி.தில்லைநாதன், பேராசிரியர் சதாசிவம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சைவப்பிரபந்தங்கள், ஈழத்து நாட்டார், சைவப் பெரியார் இந்து போட் சுப்பிரமணியம் இராசரத்தினம் குறித்து செய்த ஆய்வடங்கல்கள் அவரின் அரிய தேடல்களையும் ஆழ்ந்த உழைப்பையும் தமிழ் உலகுக்கு பறைசாத்தி நிற்கின்றன.

நூலாசிரியர்கள் பலரின் நூலுக்கு முன்னுரைகள் பலவற்றை வழங்கி நூலாசிரியர்களை கௌரவப்படுத்தியவர். அவ்வகையில் பேராசிரியர் தில்லைநாதனின் பண்பாட்டுச்சிந்தனை செல்லத்துரை பேரம்பலத்தின் மழலைப்பூங்கா, முதலான நூலுக்கு இவர் வழங்கிய முன்னுரைகள் நூல்களின் கனதியை கச்சிதமாக அளவிடும் முன்னுரைகள் ஆகும். பரா.ரதீஸின் சிலப்பதிகாரமும் ஈழத்து இசை நாடகமும் என்னும் நூலுக்கு இவர் எழுதிய நிறைவுரை மிக நீண்டது.

பேராசிரியர் கனகரத்தினம் பல சஞ்சிகைகளின் மலர் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இவர் தனித்து நின்று வெளிக்கொண்டு வந்த ஆய்விதழாகப் பண்பாட்டியல் விளங்குகின்றது. பண்பாட்டியல் சஞ்சிகையில் கலாநிதி கலைவாணி இராமநாதன், எம்.ஐ.எம்.அமீன், மல்லிகா இராசரத்தினம், பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, ச.அமிர்தாம்பிகை முதலானோர் எழுதினார்கள். இச்சஞ்சிகையில் சி.வைத்தீஸ்வரன் என்ற புனைபெயரில் ஈழத்து நாடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் சடங்கிலிருந்து நாடகம் வரை என்னும் கருத்துநிலையும் ஒரு விமர்சனக் குறிப்பு என்ற கட்டுரையையும் எழுதியிருந்தார். இது மாத்திரமன்றி பேராசிரியர் தில்லைநாதன் மணிவிழா மலரின் ஆசிரியராக இருந்தும் உழைத்த கனகரத்தினம் அவர்கள் பத்மநாதன் அவர்களின் மணிவிழா மலரான பத்மம் இதழுக்கும் ஆசிரியராகவும் இருந்து உழைத்தவர். அத்துடன் இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்பு மலரின் அங்கத்தவர் குழுவில் ஒருவராக இருந்து அம்மலர் சிறப்பான முறையில் வெளிவருவதற்கும் காரணமாக இருந்தவர்.

கற்றலையும் கற்பிப்பதையும் தனது வாழ்நாள் கடமையாகக் கொண்டு உழைத்த புலமைநலம் சார்ந்த பேராசிரியர் பெருமகன் கனகரத்தினம் அவர்கள் மீளாத் துயில் கொண்டு விட்டார். ஆனாலும் மு.கௌரிகாந்தன், ஸ்ரீ.பிரசாந்தன், செ.சுதர்சன், m.m.ஜெயசீலன், பரா.ரதீஸ், பெ.சரவணகுமார், Ann.யாழினி, மு.தயாநிதி என சிறப்பான மாணவர் பரம்பரை ஒன்றை ஈழத்தில் உருவாக்கிச் சென்றுள்ளார். அப்பரம்பரை தளைக்கும். அவரின் புகழை உலகறிய ஓங்கச் செய்யும். அதுவுள்ள வரை அவரின் எழுத்துள்ள வரை அவர் கீர்த்தி செழிக்கும். அதனால் நம் தமிழ் இலக்கியம் வளம்பெறும்.

டென்மார்க் வி. ஜீவகுமாரன்

# நானும் எனது திருமணமும்

திரையில் அந்த நான்கு இளைஞர்களையும் பொலிஸ் காரர்கள் பச்சை பனை மட்டை யால் விளாசித்தள்ளும் போது பார்த்துக் கொண்டு இருந்த எனக்கே உடல் படபடத்தது என்றால் அந்தக் குற்றவாளிகள்... இல்லையில்லை.... குற்றவாளி களாகப் பதிவு செய்ய பொலிசார் முயன்று கொண்டிருந்த அவர் களுக்கு எப்படி இருந்திருக்கும்.

சிலவேளை கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டு காது களை மூடிக்கொண்டும்... சில வேளைகளில் காதுகளை திறந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டும் விசாரணை என்ற அந்த திரைப்படத்தை பார்த்து முடித்தேன்.

வன்முறை... கொடுமை... நான்காம் மாடி விசாரணைகள்... இயக்கங்களின் தனியறை விசாரணைகள் என பலப்பலவற்றை போருக்குப் பின்னான பதிவுகளில் வாசித்திருந்தாலும் இந்தக் காட்சிப் படுத்தல்கள் என்னை மிகவும் பயமுற வைத்தது.

கோல்பேசில் உப்பும் மிளகாயும் தடவிய மாங்காயும் அன்னாசிப்பழமும்; சாப்பிட்டபடி காற்று வாங்கிய சந்தோசத்துடனும் பிரேமாவுடன் வைப்பரில் மணிக் கணக்காக பேசிக்கொண்டிருந்த சுகமான அனுபவத்துடனும் அறைக்குப் போயிருக்கலாம்.

வீணாக நேரம் போவதற் காக ஏன் அந்தப்படத்திற்கு போய்த் தொலைத்தேன் என இருந்தது.

ஏதாவது குழந்தைகளுக் கான ரொம் அண்ட் செறியோ அல்லது மிஸ்டர்.பீனோ படம் பார்த்திருக்கலாம்.

மகிழ்ச்சியாவது நிலைத் திருக்கும்!

காலையில் கோயில் பக்கத்தைப் பார்த்துக் கும்பிட்டு விட்டு பகலில் பாடசாலைக்கும் பின்னேரத்தில் ரியூசன் வகுப்பு களுக்கும் வகுப்பு எடுத்து விட்டு இரவில் வீட்டு முற்றத்தில் இருந்து பக்கத்து வீட்டு அண்ணாமார் களுடனும் நண்பர்களுடனும் ஊர் அரசியல் கதைத்துக் கொண்டும் 304 சீட்டாட்டம் ஆடிக்கொண்டும் வளர்ந்த எனக்கு இந்த உலகங்களின் நிகழ்வுகள் நம்பமுடியாதவை யாகவே இருந்தன.

அறம் செய்ய விரும்பை யும்... ஆறுவது சினத்தையும்... இரண்டாம் வகுப்பிலேயே



சிவதீட்சை போல காதில் ஓதி பொய் சொல்லக் கூடாத பாப்பாவாக வளர்க்கப்பட்ட எனக்கு இந்த உலகத்தின் மறுபக்கங்களை பார்க்கும் மனத்தைரியத்தை எந்த மந்திரமும் கற்றுத் தந்திருக்கவில்லை.

"நான் கடவுள்" படத்தை பார்த்து விட்டு நித்திரையை தொலைத்த நாட்கள் பல உண்டு.

எங்களைத் தாண்டிய அல்லது எங்களுக்கே தெரியாத சில உலகங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பதனை சில திரைப்படங்கள் காட்டி விட்டுத்தான் கடந்து செல்கின்றன.

கொழும்பு விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் பொழுதும் சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கிய பொழுதும் காக்கிச் சட்டைக் காவலர்களை கண்ட பொழுது என்னையே பச்சைப் பனை மட்டையால் அவர்கள் விளாசித் தள்ளுவது போன்ற மனநிலைதான் இருந்தது.

இயற்கை மரணம், அகால மரணம் என்ற இரு மரணவகைகளைத் தாண்டி... போர்க்காலத்தில் யாரைப்பார்த்து எந்த தலையாட்டிகள் தலையாட்டி னாலும் அவர்களின் உலகம் இவ்வாறான ஒரு பாதாள உலகம் தான் என்ற பயத்தினால் மட்டும் நாடு விட்டு நாடு தாவி... அகதி என்றும்... குடியுரிமை வதியிடம் பெற்றவன் என்றும்... டென்மார்க் பிரஜை என்றும் பெயருக்கு முன்னால் உள்ள அடைமொழிகளாலும் அவை தந்த பொருளாதார வசதிகளாலும் கௌரவங் களை இணைத்துக் கொண்டவர்களில் நானும் ஒருவன்.

2006ல் நாட்டை விட்டு ஓடும் பொழுது வயது 27. இப்போது 37.

என்னைப் பற்றி நானே மற்றிமோனியல் விளம்பரத்தில் விளம்பரம் செய்து... நானே சுயம்பரம் செய்து... நான் மறுதலித்தது பாதி... என்னை மறுதலித்தது முக்கால்வாசி எனப்போக கடைசியில் ஜேர்மனில் வசித்த என்னை விட மூன்று வயது மூத்த பிரேமாவுடன் வைப்பரிலிலும் ஸ்கைப்பிலும் பேசி... அவரின் தயாருக்கு இதுவரை குடிப்பழக்கமும் புகைப்பிடிக்கும் பழக்கமும் இல்லை எனவும் எதிர் காலத்திலும் அது இராது என சத்தியம் செய்து... அனைத்தும் கூடி வர... என் திருமணத்திற்கு நானே இலங்கையில் அழைப்பிதழ் அச்சடித்து... இந்தியா வில் கூறைப்பட்டு எடுத்து... இனி இங்கே சிங்கப்பூரில் தாலிக்கொடியும் வாங்கிக் கொண்டு திரும்பிச் செல்ல வேண்டும்.

பெண் வீட்டாரும் பெண்ணும் ஜேர்மனியில் இருந்தபடி மெசேஜ் பொக்சில் ஒவ்வொன்றையும் வேண்டி வரும்படி எழுதிக் கொண்டு இருப்பார்கள்.

அல்லது "சுகமாக இருக்கின்றீர்களா?"; என என மெல்லிய சிரிப்பொலியுடன் ஒரு வரி தொலைபேசி அழைப்பில் சுகம் விசாரித்து விட்டு ஒரு பந்திச் சாமான்களின் லிஸ்ற் வரும்.

37 வயது மணமகன் என்று இளக்காரமாய் போய்விட்டதா என என் மீதும் எனக்கு கோபம் வரும்.

பெண்ணிடமும் பெண் வீட்டார் மீதும் கோபம் வரும். ஆனால் காட்டிக் கொள்வதில்லை.

இனியும் பிந்திப் போனால், "இன்னமும் பிள்ளை இல்லையோ", என ஒரு வருடத்துக்குள் என்னையும் மனைவியையும் துளைத்து எடுக்கப் போற உறவினர்கள் மற்றும் நண்பர்களின் கேள்விக்கு பதிலே இல்லாமல் போய்விடக் கூடும்.

முதிர்கன்னிகள் போல முதிர்ஆண்களுக்கும் வேதனைகள் உண்டு என்பதனை அதிகமாக உலகம் மறந்து போகின்றது.

இன்று ஞாயிற்றுக் கிழமை.

சிங்கப்பூரில் வருடத்தில் எந்த சந்தர்ப்பத்தில் வந்தாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் சிரங்கூன் என்ற குட்டி இந்தியப் பகுதிக்கு வரவே கூடாது.

பத்து நல்லூர் திருவிழாவுக்கு... அல்லது இறுதிக்கட்ட தி.மு.க. , அ.தி.மு.க. பிரச்சாரக் கூட்டத்திற்கு சமனான கூட்டத்தால் சிறங்கூன் பிரதான தெருவும் பக்கத்து தெருக்களும் நிரம்பி வழியும்.

காலை பத்து மணி தொடக்கம் இரவு பதினொரு மணி வரை மஹாமக கூட்டம் தான்.

வீடுகளில் வேலை செய்யும் பணிப்பெண்கள் - இந்திய பங்களேஷ் கட்டிட தொழிலாளர்கள் - மற்றும் இதர இதர காரணங்களுக்காக சிங்கப்பூரில் தொழில் விசாப் பெற்றவர்களின் சந்திப்புகளினதும் பிரிவு களினதும் சாட்சி அந்த ஞாயிறு.

சிங்களச் சிரிப்பொலிகளை தாராளமாகக் கேட்கலாம். இனத்துவேசமே தெரிவதில்லை.

அங்கீகரிக்கப்பட்ட சிவப்புவிளக்குப் பகுதியைக் கூட அத்தனை பேரும் அன்று தான் பங்கு கொள்ள வேண்டும். அந்த அனல் பறக்கும் வெயிலில்....

ரைகர் பியர் சிங்கப்பூரில் அதிகமாக விற்கும் ஞாயிறும் அன்றுதான்.

எனது கெட்ட காலம் - நான்கு நாட்களுக்கு முன்னால் வந்திருந்தாலும் தாலிக்கொடியை நான் தங்கியிருந்த ஹோட்டலில் வைக்கப் பயந்து இன்று அதனை வாங்கிக் கொண்டு இரவு பயணம் செய்யக் காத்திருந்ததுதான்.

நகைக்கடைகளில் எல்லாம் அவ்வளவு சனக்கூட்டம்.

வேண்டுமென்றே உரசல்கள்.... களவுக்கு அத்திவாரமா? அல்லது ஏதோ ஒன்றிற்கான அழைப்பா?? எனப் பிரித்தறிவது மிகக் கடினம்.

திருப்பிப் பார்த்தால் ஒரு புன்னகை.

முறைத்துப் பார்த்தால் ஒரு "சொறி".

இத்தனையிடையேயும் சீன நகைக்கடை வியாபாரி என்றாலும் சரி... தமிழ் நகைக்கடை வியாபாரி என்றாலும் சரி... செய்கூலியில் எம்மிடம் உள்ள பணத்தை எல்லாம் பிடிங்கிக் கொள்ள பார்ப்பார்கள்.

இலவசமாய் கிடைக்கும் கூல்ரிங்ஸ்சின் விலை எல்லாம் சேதாரக் கணக்கிலும் செய்கூலிச் செலவிலும் அடங்கிவிடும்.

"முஸ்தபாவில் செய்கூலி மலிவல்லவா"

“சார் அங்கு பவுண் விலை அதிகமாக போடுவார்கள்… சார் கிட்டவாக வாங்க! உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்ல வேணும்…. உங்க நாட்டுப் போராட்டத்துக்கு நாங்கள் எவ்வளவு உதவி செய்தனாங்கள் தெரியுமா?. முஸ்தபாவா செய்தார்??”

மௌனமாகி விட்ட போராட்டத்தை எவன் எவன் எல்வாம் வைத்து எப்பிடி எப்பி பிழைப்பு நடாத்துறான்கள் என மனம் சொன்னது.

நெருங்கிக் கொண்டு இருக்கும் பயண நேரம் என் வாயைக் கட்டி என்னைக் கட்டிப் போட்டது.

“சரி! கணக்கை முடியுங்கோ”

கணக்கை முடித்து நகைப்பெட்டியை வெங்கடேஸ்வராக் கோயில் பக்கம் திரும்பி நின்று கும்பிட்டு விட்டு தன் இரு கைகளாலும் என்னிடம் ஒப்படைத்தார்.

நானும் கடவுளை நினைத்தபடி என்னிரு கைகளாலும் வாங்கிக் கொண்டேன்.

சேட் பொக்கற்றில் இருந்த ஐபோன் அதிர்கிறது.

“சொல்லுங்கோ”

“நான் பிரேமாவின் அம்மா கதைக்கிறன்”

“விளங்குது… சொல்லுங்கோ”

“பிரேமாக்கு கொடியிலை புறோச்சர் கொளுவிப்போட சரியான விருப்பம். அது தான்…..”

“சரி! நான் பாத்துக் கொள்ளுறன்”

“நான் சொன்னனான் எண்டு பிரேமாக்கு சொல்லிப் போடாதையுங்கோ மாப்பிள்ளை”

“சரி”

இது மிகப்பழைய ரெக்கினிக், மகள் சொல்வதாக மாமி அப்பிளிக்கேசன் போடுவது.

மீண்டும் 1½-2 பவுண் எடையுள்ள புறோச்சரின் பேரம் தொடங்கியது.

”சார் இந்த புறோச்சர் மிக அழகாக இருக்கிறது. தாலியை எடுங்கோ கோர்த்தே தருகிறன்”

எனக்கு “திக்” என்றது.

இப்பொழுது வாங்கிய தாலியைக் காண வில்லை.

அழகான அந்த தாலிப்பெட்டி மிக இலகுவில் தவறுவதற்கு வாய்ப்பில்லை.

கடைக்காரரும் சேர்ந்து என்னுடன் தேடினார்.

இப்போது இன்னும் அதிமாக ஞாயிற்றுக் கிழமை கூட்டம் கடையில் சேர்ந்திருந்தது.

எங்கள் பரபரபரப்பு மற்றவர்களை சங்கடப் படுத்தியதை என்னால் உணரக் கூடியதாய் இருந்தது.

ஆனாலும் 21 பவுண் கொடி.

கடைக்காரரும் என் கவலையில் உண்மையாகவே பங்கு கொண்டதை அவதானித்தேன்.

ஆனால் தேடுதல் முயற்சி எவ்வித பலனையும் தரவில்லை.

இறுதியாக கடையில் பொருத்தப்பட்ட வீடியோ கமராவில் இரு பெண்கள் அதனுடன் கடையில் இருந்து வெளியேறுவது பதிவாய் இருந்தது.

அவர்களின் பின் பக்கம் மட்டும் தெரிந்தது.

எத்திசையால் தேடி ஓடி அவர்களைத் தேடுவது?

இச்சமயம் தங்கள் உடையையே மாற்றியிருப் பார்கள். அல்லது மலேசியாவுக்குள் நுழைந்திருப் பார்கள்.

எங்கு போவது?….

தலை சுற்றிக் கொண்டு வந்தது.

கடைக்காரர் ஒரு கரையில் ஒரு கதிரையை தந்து என்னை ஆறுதலாக இருக்க வைத்து மீண்டும் ஒரு கூல்ஸ் ரிங் தந்தார்.

மனம் மாமியாரை சபித்தது.

புறோச்சர் வாங்க வெளிக்கிட்டுத்தான் தாலிக்கொடியே போனது.

இனி தாலிக் கொடிக்கு காசுக்கு எங்கே போவது.

இரண்டாம் சீட்டையே அறாக்கழிவுக்கு எடுத்துத்தான் இவ்வளவும் நடந்தது.

வட்டிக்கு கூட நம்பி காசுதார யாரும் அங்கு இல்லை - வங்கிகள் உட்பட.

அடிச்சட்டி வழித்தெடுத்து சாப்பிடுவது போல எல்லாப் பக்கத்தாலும் காசு வேண்டியாயிற்று.

திருமணம் கூட கிடைக்க இருக்கின்ற மொய்ப்பணத்தை நம்பித்தான் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றேன்.

இனி?….

“சார்… உங்களுக்கு ஒரு ஆலோசனை சொல்லட்டா?”

நிமிர்ந்து பார்த்தேன்.

கடைக்காரர்தான்.

“சொல்லுங்கோ…”

“இரண்டு வழி இருக்கு… ஒன்று உங்க ஐரோப்பாவிலை யாரும் தாலிக்கொடியை விக்கிறதோ அடைவு வைக்கிறதோ இல்லை. அது கலியாணத்துக்குப் பிறகு பாங் லொக்கருக்குள்ளைதான் இருக்கும். அதுபடியாலை பக்கத்திலை இருக்கிற பத்தர் கடையிலை திறமான கிலிற் கொடி இருக்கு. 5 வருசம் தாங்கும். அதை இப்ப கட்டிப் போட்டு பிறகு காசு இருக்கேக்கை மனைவிக்கே தெரியாமல் மாத்திக் கொள்ளுங்கோ”

மனம் தயங்கியது - வாழ்வினை ஒரு பொய்யில் தொடங்க வேண்டுமா என்று.

இப்போதும் இரண்டாம் வகுப்பில் என் கண் முன்னே அன்னலட்சுமி ரீச்சரும்;… முன் வாங்கு வரிசையில் நன்கு தோய்த்து அயன் பண்ணிய அரைக் கால் சட்டையுடனும் வெள்ளைச் சேட்டுடன் நானும்… மேசைக்



கரையில் தொங்கும் தண்ணீர்ப் போத்தலில் அம்மா கரைத்து தந்த தோடம்பழத் தண்ணியும்.

கடைக்காரர் தொடர்ந்தார்...

"மற்றது நீங்கள் எடுத்து வைத்திருக்கும் புறோச்சர் தாலிக்கும் 2 பவுண் காசுகளுக்கும் போதும். அதை ஏன் மஞ்சள் நூலிலை கோர்த்து கட்டக் கூடாது"

மன அடிவானில் ஒரு வெள்ளிக்கீற்றுப் போலப்பட்டது.

அவரை நிமிர்ந்து பார்த்தேன்.

"பிறகு ஒரு காலத்திலை நீங்கள் பவுணிலை தாலி செய்து அதிலை கோர்க்கலாம் தானே"

எனக்கு அது நல்ல யோசனையாக பட்டதோ இல்லையோ அதனை விட வேறு வழியில்லை என்பது மட்டும் உறுதியாய் பட்டது.

"அப்படியே செய்வம் அண்ணை"

அடுத்த பத்து நிமிடத்துள் மஞ்சள் கயிற்றில் தாலியும் இரண்டு ராஜா ராணிக்காசுகளும் இடையே ஒன்றுடன் ஒன்று முட்டாமல் தடைகளும் வைத்துப் பொருத்தப்பட்டது.

பிரேமா மஞ்சள் தாலியிலும் குங்குமப் பொட்டிலும் தலைநிறைய மல்லிகைப்பூவிலும் அழகாகத்தான் இருந்தாள்.

மீண்டும் அவர் வெங்கடேசலப் பெருமானின் கோயில் பக்கமும் தற்பொழுது பிரத்தியேகமாக வீரகாளி அம்மன் கோயில் பக்கமும் கும்பிட்டு விட்டு அவற்றை என்னிடம் கையளித்தார்.

சனக்கூட்டத்தை விலத்திக் கொண்டு றோட்டில் இறங்கினேன்.

இப்போ இன்னமும் சனக்கூட்டம் அதிகமாய் இருந்தது.

நகை வாங்க முதல் பார்த்து ரசித்த வேறு வேறு இன ஜோடிகளை எல்லாம் இப்போ பார்த்து ரசிக்க முடியவில்லை.

அவர்களின் காதல்களைக் கூட "ஏதோ அலையுதுகள்" என்ற குறுகிய கண்ணோட்டத்துடன் நான் பார்ப்பது போல இருந்தது.

இதில் யாரோ ஒருவர்தானே என் தாலிக்கொடியை திருடியது என்ற வெப்பிகாரத்துடன் அறைக்கு வந்து சேர்ந்தேன்.

சாப்பிட வேறு பிடிக்கவில்லை.

முதன் நாளிரவு வாங்கி வைத்திருந்த தாய்லாந்து கொய்யாக்காயையும் மலேசியா இனிப்பு மாங்காயையும் மட்டும் சாப்பிட்டு விட்டு வெளிக்கிடத் தயாரானேன்.

ஐபோன் அழைத்தது.

இப்போ முகம் பார்த்து பேச பிரேமா அழைத்திருந்தாள்.

"அம்மா ஏதோ சொன்னாவாம். அதுவும் வாங்கினீங்களா?"

என் முகம் மாறியதை அவள் அவதானித்திருக்க வேண்டும்.

"என்ன ஒரு மாதிரி இருக்கிறீங்கள்?... நான் வேண்டாம் என்று தான் சொன்னனான் அம்மா தான் கேட்கல்லை"

நடந்தது எல்லாத்தையும் சொன்னன்.

"மஞ்சள்கயிற்றிலை கட்டுறதோ! நோ சான்ஸ்"

பிரேமா சொல்லி முடிக்க முதல் "எங்கடை பரம்பரையிலேயே கேள்விப்படாத கதையாக கிடக்கு" என்ற தாயாரின் பல்லவி தொடர்ந்தது.

"நானே எந்தப் பெரிய கொடி போட்டிருக்கிறன். என்ரை பிள்ளை மஞ்சள் கயிற்றிலை கட்டுறதோ?"

நானே தொலைபேசியின் இணைப்பைத் துண்டித்துக் கொண்டேன்.

அறைக்குள் அமைதியில்லாது அங்கும் இங்கும் திரிந்தபடி அறையை ஒதுக்கினேன்.

விமான நிலையத்திற்கு டக்ஸி ஏறும் நேரம் நெருங்கின்றது.

தாயிடம் இருந்து சரி... மகளிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை.

இன்னும் அவர்களுக்கு கோபம் தணிய வில்லைப் போலும்.

அல்லது இந்த அத்தியாயத்துக்கு அவர்கள் முடிவுரை எழுதியிருக்க வேண்டும்.

கிலிற் தாலியைக் கொண்டுபோய் கட்டியிருக்கலாமோ என் ஏழை மனமே எனக்காக இரங்கியது.

பாம்பும் ஏணியில் சறுக்கி கீழே வந்த கட்டையாக இனி 37 வயதில் மீண்டும் மற்றி மோனியல்... திருமணப் பேச்சுகள்... ஜாதகப் பொருத்தம்... ஜாதிப் பொருத்தம் இவற்றுடன் இனியொரு பவுண் பொருத்தம் - புறோச்சர் பொருத்தத்துடன் ஒரு பெண் தேடும் படலத்தை ஆரம்பிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் பணம் தேடவேண்டும்.

அல்லது சிங்கப்பூரின் சில பக்கங்களை நியாஜப்படுத்திக் கொண்டு ஐரோப்பாவில் வாழத் தொடங்க வேண்டும்.

அந்த அனல் பறக்கும் ஞாயிறு வெய்யிலில் அத்தனை பேரும் அந்த தெருவை பங்குபோட இடிபட்டுக் கொண்டு நின்றார்கள்.

காலைக்காட்சி கண்முன்னே வந்து போனது.

ஏதோ ஒரு பிரமையுள் ஆழ்ந்து போகின்றேன் போலும்.

டென்மார்க் தலைநகர வீதிகளின் சந்துகளில் சிதறிப்போன ரஸ்யா நாட்டுப் பெண்கள் நின்று கை அசைக்கின்றார்கள்.

பத்து பிரேமாக்களின் அழகு.

நானும் காரின் வேகத்தைத் குறைத்து அவர்களுடன் அளவளாவுகின்றேன்.

மிக அழகான ஒருத்தி காரின் முன் சீட்டில் ஏறி அமர்ந்து கொள்கின்றாள்.

கார் புறப்படுகின்றது.

சிறிது நேரத்தில் காரின் பின் சீட்டில்

சிரிப்பொலிகள் கேட்கின்றன.

பின் சீட் நிறைய ரஸ்யப் பெண்மணிகள்.

இரவுச் சாப்பாடும் பியரும் வாங்கித் தந்தால் போதும் என்கிறார்கள்.

கார் டென்மார்க்கின் பெரிய தொங்கு பாலத்தில் பயணிக்கின்றது போலும்.

அடுத்த வினாடி....

ஏதோ ஒரு மருத்துவமனையில் சிகிச்சைக்குப் பலனின்றிய என் உடல்.

எனது நகரமே சூழ்ந்து நிற்கின்றது.

எல்லோர் கைகளிலும் எனது கண்ணீர் அஞ்சலிகள்...

"எலும்பொடு நரம்புகொண்டு இடையில் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்கு விழுங் குடிலைச்
செழும்பெழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை,
மலவுடல் குடத்தைப் பலவுடல் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியை...

ஓதுவார் பலத்த குரலில் பாடிக்கொண்டு நிற்கின்றார்.

பிரேமா தடித்ததொரு தாலிக்கொடியுடன் இரு பக்கம் இரு புறோச்சர்கள் தொங்க என்னை விட அழகான ஓர் ஆடவனுடன் வந்து எனக்கு பூங்கொத்து வைத்துப் போட்டு போகின்றாள்.

என் சவப்பெட்டியைத் தாங்கிய இறுதி ஊர்வல நீண்ட கறுத்தக் கார் நான் ரஸ்ய பெண்களுடன் பயணம் செய்த தொங்கு பாலத்தில் பயணிப்பது போல இருக்கின்றது. போலும்...

காற்று வேகமாக வீசுகின்றது.

பாலம் அறுந்து விழுகின்றது.

சனங்கள் அலறுகின்றார்கள்.

நான் மட்டும் பெட்டியுள் இருந்து எழுந்து மணவறையை நோக்கிப் போகின்றேன்.

அதில் இருப்பது பிரேமா போலும் இருக்கின்றது. வேறு யாரோ போலும் இருக்கின்றது

கதவு தட்டப்படுகிறது.

நினைவுகள் தாறுமாறாக ஓட திடுக்கிட்டு எனது பிரேமையில் இருந்து மீழ்கின்றேன்.

"சார்... டக்ஸி இஸ் வெயிற்றிங் போ யூ"

அறையினுள் ஓடிக்கொண்டிருந்த தொலைக்காட்சியை நிறுத்தச் சென்றேன்.

தொலைக்காட்சியில் சட்டவிரோதமாக பாலியல் தொழில் புரிந்து கொண்டிருந்த தாய்லாந்து, மலேசியா, இந்தியா, இலங்கைப் பெண்களை பொலிசார் பெருமளவு கைது செய்து தங்கள் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு இருந்தார்கள்.

அவர்களை இனி அந்த நாட்டுக் காவல் துறை எங்கு கொண்டு செல்வார்கள்? என்ன செய்வார்கள்??

எப்போதும் எங்களால் அறியப்படாத ஒரு உலகம் இருக்கத்தான் செய்கிறது - விசாரணை படம் போலவும்... நான் கடவுள் படம் போலவும்...


இதனிடையே ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் அன்னலட்சுமி ரீச்சரும் நானும் என் திருமணமும்...

(தொடரும் அல்லது முற்றும்)

---

# நீதியின் பாடல்

## செரபண்ட ராஜவு



மலைகளை உடைத்தோம். பாறைகளை நொருக்கினோம்
எமதுதசைக் கற்களால் அணைகளைக் கட்டினோம்
செல்வமடைந்தோரெவர், உழைப்பு எவருடையது?

கற்களைக் களைந்து, தரிசு நிலத்தை உழுதோம்.
எமது வியர்வையாற்றால் பயிர்கட்கு நீரிறைத்தோம்.
உணவை எவர் பெற்றார், விதைகள் எவருடையவை?

எம் தறிகளை அமைத்தோம். ஒவ்வொரு நூலையும் இழைத்தோம்.
எம் நரம்பு நூலிழைகளால் துணிகள் மிகநெய்தோம்
கால வண்ணமாய் அணிவோர் யார், முயற்சி எவருடையது?

பொறிகளை இயக்கினோம். மிகுதியாய்ப் படைத்தோம்.
நமது குருதியோட்டத்தில் ஆலைகள் இயங்கின.
மாளிகையை எவர் கட்டினார், குடிசையில் எவர் வாழ்ந்தார்?

காரணமறிந்ததால் ஆயுதங்கள் தாங்கினோம்.
ஒழிவிலா ஓர் சண்டைக்கு ஒன்றாய் நாம் எழுவோம்.
வெற்றி எமதாகும். மரணம் உமதாகும்.

தெலுங்கிலிருந்து ஆங்கிலத்துக்கு முனைவர் ஏ. ராமமூர்த்தி ; தமிழில் சி. சிவசேகரம்

## கதிரை ஒரு குதிரை

கனைத்துப் பிடரி மயிர் சிலிப்பி
ஓடுங் குதிரையில்,
நெஞ்சு நிமிர்த்திய பயணம்.

அது ஒரு புளகாங்கித வேளை.
அப்படித்தான் சொன்னார்கள்,
சோதிடர்கள்.

உத்தம, உத்தமோத்தம கௌரவங்கள்
பூச்சூடிய தருணம்.

என்ன நினைத்ததோ குதிரை,

சோதிடன் நாள் குறித்தவேளையில்,
வேகத்தின்பேரில் பழிபோட்டபடி,
முதுகிலிருந்து விழுத்திவிட்டது
புழுதியில்..

புழுதி நதியில் கரையத் தொடங்கியது,
உத்தம, உத்தமோத்தம முலாம்.

உண்மை முகம் தெரிவதற்கிடையில்,
தேவை மற்றொரு குதிரை,
அது பொய்க்கால் குதிரை எனினும்.

– ஸ்ரீ. பிரசாந்தன்


## உச்சி முகப்பு

முக்காடு விலக்கி
உச்சிமுகந்த நினைவலைகள்
நெஞ்சில் முட்ட
மனச்சிறையில்
உனையிருத்தி உறங்குகிறேன்.

அந்திக் கருக்கலில்
ஒற்றையடிப் பாதைதனில்
கைகோர்த்து நடக்க
ஒரு தட்டில் சோறுண்ண
கற்றூண்களின் அடியில்
மண்டியிட்டுக் கிடக்க
வகுப்பறைப் பாடங்களைப்
பங்கு போட்டுப் பயில
இன்னுமோர் காலை புலராதோ
இது கனத்துப் பெருத்த மனதின் கேள்வி.

வினாக்களின் கீழ் தொங்கும் வாழ்வு
நெஞ்சை எரிக்கும் வார்த்தைகள்
"நீ – நான்"
மொழிதல்கள் மறுத்து . . .
மனச்சிறையில் விரிகிறது
"நமக்காக நாம்".

– சுமன்



## உரிமைச் சீட்டு

உரிமைச் சீட்டுக்கள்
காலாவதியாகிவிட்ட பின்பு
காதலித்த மண் கூட காணாது
நிற்பது போல்
ஓர் உணர்வு
சரி ஓர் உணர்வு தானே என்று
சாலைக்குள் நடைபயில
அறிமுகமான
சில முகங்களைத் தவிர
அரவணைத்த
கைகளைக் காணவில்லை

உறவுகள் உதாசீனம் செய்யவில்லை
ஆனால்
ஒத்துக்கொள்ள மட்டும்
மனம் தரவில்லை இடம்
ஒதுக்கப்பட்டுவிட்டாய் என்றே
ஓயாது ஓலமிடுகிறது
எல்லாச் சுமைகளையும் இறக்கி வைக்க
ஒரு தத்துவத்தைத்
தேடிப்பார்க்கிறேன்
சிக்கியவன் முசோலினி,
மனிதன்
பிறக்கிறான் வளர்கிறான் இறக்கிறான்
ஒருவன் இடம்
இன்னொருவனால் நிரப்பப்படுகிறது
அரசு ஒன்றே நிலையானது
எனும் அவன் தத்துவத்திலே
அமைதி காண்கிறது மனம்
சொன்னவன் எவனாய் இருந்தால் என்ன
சொன்னதில் மெய் கண்டால்
வழி கொள்வதில் பிழையில்லையே

– நிஸ்மியா

## குறும்பாக்கள்

1

விழிநோக்கி அவள் பார்த்தவேளை
விழப்பாத்தான் இளம் சிட்டுக்காளை
விழுந்துவிட்டால் அவள் மனதில் நாளை
எழ மாட்டான் இனி அதிகாலை.

2

பொலிகண்டியில் கந்தசாமி மாண்டார்
மலிவாகக் காணியெல்லாம் ஆண்டார்
படலையிலே கூடி நின்று உறவுகள் தாம் அழ
சுடலையிலே பொடிசாம்பல் ஆனார்.

3

படிப்பிலே அவன் பல மாணி
குடியிலே அவன் ஒரு கேணி
ஈரல் கருகி அவன் மாண்டபோது
இரங்கற்பா எழுதினார் வேணி.

4

படிப்பித்தார் வாத்தியார் பாடம்
பரீட்சையோ புரியாத கேள்விக்கூடம்
வெளியாலே வந்த மாணவர் சொற்கேட்டு
ஒளியாமல் விட்டோடினார் பள்ளிக்கூடம்.

5

பாலியல் என்ற சொற் கேட்டே
வேலியால் பாய்ந்தார் எம் ஆசான்
முகநூலில் வந்த (பட) விளக்கம் கண்ஆட
மூர்ச்சையாகிப் போனார் அவர் அன்றே.

– புலோலியூர் வேல்நந்தன்

■ க. சட்டநாதன்

# குந்தவையின் யதார்த்தமும் புனைவும்

குந்தவை தமிழுக்குக் கிடைத்த நல்ல படைப்பாளிகளில் ஒருவர். ஈழத்தில் பெண் எழுத்தாளர் என்று வரும்போது கவிதைக்கு ஊர்வசியும்; சிறுகதைக்கு குந்தவையும் தான் எனக்கு உடன் ஞாபகம் வருபவர்கள். இவர்கள் இருவரது எழுத்தும் எனக்கு நிரம்பிய சந்தோஷத்தையும் திருப்தியையும் தருபவை. இவர்களில் குந்தவை சற்றுத் தூக்கலாகவே எனது வாசக அனுபத்துக்கும் ரசிப்புக்கும் தெரிகிறார்.

இவருடைய திறமைக்கு வெறும் இருபத்திரெண்டு கதைகள் மட்டும் போதுமா? இன்னும்... இன்னும் சற்றுக் கூடுதலாக இவர் தந்திருக்கலாமே என்ற ஆதங்கம் எனக்கு உண்டு. இவருடைய முதலாவது சிறுகதை நூலான 'யோகம் இருக்கிறது' தொகுதியில் பதின்மூன்று கதைகளும் இரண்டாவது தொகுதியான 'ஆறாத காயங்கள்' இல் ஒன்பது கதைகளும் உள்ளன. இதுபோதுமா? மௌனி போல என நினைத்து ஆறுதல் அடைவோம்.

இவரது எழுத்தில் பயின்று வரும் புத்தம் புதிய சொற்கள், யதார்த்தத்தை வழிய விடும் அவற்றின் இயல்பு என்பன படித்த மாத்திரத்தில் பெரிதும் கவர்கின்றன. படைப்புக்களுக்கு ஒரு மெல்லிய திரையாக, போர்வையாக மனோரதியக் கசிவு, அழகுக்கு அழகு சேர்ப்பதை நாம் அறிவோம். ஜெய காந்தனும், ஜானகி ராமனும் ஜெயமோகனும் இவ்வகையில் சமர்த்தர்கள். இந்த ரசத் துளிர்ப்பு எதுவுமில்லாமல் புதுமைப்பித்தனைப் போல காறாராக யதார்த்தத்தை இறுக்க மாகப் பற்றி நிற்பது குந்தவையின் பெரிய பலம் என நினைக்கின்றேன்.



இவரது பெரும்பாலான கதைகள் தன் அனுபவச்சரடு இழையோடப் பின்னப்பட்ட படைப்புகளாகும். அத்துடன் அவை மனித வாழ்வுடன், மனித வாழ்வின் சோபிதங்களை யல்ல அதன் அவலங்களை, பாரிய நெருக்குத லுக்கு சமூக நிலையில் - உட்படும் மனித மனதின் தூரங்களை மிகையான சித்திரிப்பு ஏது மில்லாமல் பிரசங்கிப்பவையாக அமைந்துள்ளன.

கதைகள் உருவாகிவரும்போதே புற உலகத்தோற்றங்கள் புலனுணர்வின் லகரியில் சிறைப்பட்டு, அதில் ஸ்தம்பித்து, ஆலாபனை ஏதும் செய்யாது பழுதற்ற முழுமையுடன் பிறப்பெடுத்து விடுகின்றன. இதனை இவரது பாரிய கலை வெற்றி என்றே நினைக்கின்றேன். இவ்விஷயத்தில் வண்ணதாசன் - பல கதை களில் சந்திக்கும் தோல்விகளை இவர் சந்திப்ப தில்லை இது மிகவும் ஆறுதலான விஷயம்.

இதுமட்டுமல்ல, கதாமாந்தர்களின்

சிறுசிறு மன உணர்வு வெளிப்பாடுகளையும் உணர்ச்சி வசப்பட்ட மனோ நிலை மாற்றங்களையும் கதைகள் நெடுகிலும் இவர் பெய்து வருகிறார். இந்த Nuances அவற்றிற்கு மிகுந்த அழகைத் தருகின்றன.

இவரது தொகுதிக் கதைகளில் மிகச் சிறப்பானவையாக: பெயர்வு, யோகம் இருக்கிறது, இணக்கம், இடமாற்றலுக்காய், பயன்படல், வீடு நோக்கி, திருவோடு போன்றவற்றைக் கூறலாம்.

நல்ல கதைகளாக: கோழிக்கறி, புழுக்கம், ஊழியமும் ஊதியமும், நாடும் நம்மக்களும், பாதுகை ஆகியவற்றைக் கொள்ளலாம். ஏனைய கதைகளும் எடுத்துச் சொல்லும் விதத்தில், கதை பின்னப்பட்ட முறையில் மொழித்திறனில் சோடை போனவையல்ல.

இவருடைய முதலாவது தொகுதி யோகம் இருக்கிறது, ஓரளவு சிறப்பான வடிவமைப்புடன், அடக்கமான அளவில் நல்ல கதைகளைக் கொண்டுளது. இரண்டாவது தொகுதி- ஆறாத காயங்கள், அழகிய வடிவமைப்பு ஏதுமில்லாமல், ஏதோ பாடப் புத்தகம் மாதிரி வந்துளது.




அத்துடன் மிகுதியான எழுத்துப் பிழைகள்; அப்பிழைகள், கதைகளைப் படிப்பதற்கு மிகுந்த சிரமத்தைத் தருவதுடன், வாசகர் ரசனையையும் மட்டுப்படுத்துபவையாகவும் உள்ளன. மிக மோசமான தொகுதிக்கு கதைகளை நான் கூறவில்லை - இது அசல் உதாரணம்.

இவற்றுடன் இன்னுமொரு குறைபாட்டையும் இத்தொகுதி பற்றி நான் கூற வேண்டும். தொகுதியில் உள்ள கதைகளின் தலைப்புகள் பற்றியது அது. சில கதைகளின் தலைப்புகள் ஏதோ கட்டுரைகளின் தலைப்புகள் போல அமைந்துள்ளன. உதாரணத்துக்குத் சில : காலிழப்பும் பின்பும், ஊழியமும் ஊதியமும், நாடும் நம்மக்களும்.

கதையின் மையத் தடத்தை, வலுவை, அதனுள் இழையும் அழகை சுட்டுபவையாகத்தான் கதைத் தலைப்புகள் அமைய வேண்டும். அந்த வகையில் ஆசிரியர் - இத்தொகுதியைப் பொறுத்தவரை பொறுப்புடன் செயற்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. இந்த இரண்டாவது தொகுதிக்கு ஒரு திருத்திய பதிப்பு மீள வரவேண்டுமென்பதே எனது விருப்பம்.

இவரது நல்ல கதைகள் பற்றி இனிச் சிறிது பார்ப்போம். பெயர்வு இவருடைய மிகச் சிறந்த கதையென்று துணிந்து கூறலாம். தொண்ணூறுகளின் நடுக்கூறில் - உள்நாட்டு யுத்தத்தால் - இடம் பெயர்ந்த குடாநாட்டு மக்களின் துயரத்தைப் பகைப்புலனாகக் கொண்ட கதையிது. கதை ஒரு குடும்பத்தின் அவல நிலை பற்றிய சித்திரிப்பு. இது ஒரு குடும்பத்தின் கதை மட்டுமா? இல்லை, இடம்பெயர்ந்த சகல குடும்பங்களின், துயர் பகிரும் கதையும் கூட.

கதையின் முதன்மைப் பாத்திரங்கள் சிவரஞ்சனி, அவளது கணவன் மகேந்திரன், அவர்களது குழந்தை அமுதன் ஆகியோராவர்.

வீட்டை இழுத்து மூடிக்கொண்டு புறப்பட்ட அவர்களது கைகளில் சில உடைமைப் பொருள்களைத் தவிர சிறிதளவு குழையல் சோறு, பிஸ்கட் பக்கெட்டுகள் சில, ஒரு அங்கர் மாப்பெட்டி ஆகியவையும் இருந்தன. உணவுப்பண்டங்கள் என்றவகையில் இவை எல்லாமே அமுதனுக்குத்தான். பயணத்தின் போது இப்பண்டங்கள் தீர்ந்த நிலையில் மீதமாய் இருந்தது ஒரு பாணதுண்டு மட்டுந்தான் - அது கூட பிரயாணத்தின் இடைநடுவில் வாங்கியது - அதனைச் சிவரஞ்சனி மகனுக்குத்

இவரது எழுத்தில் பயின்று வரும் புத்தம் புதிய சொற்கள், யதார்த்தத்தை வழிய விடும் அவற்றின் இயல்பு என்பன படித்த மாத்திரத்தில் பெரிதும் கவர்கின்றன. படைப்புக்களுக்கு ஒரு மெல்லிய திரையாக, போர்வையாக மனோரதியக் கசிவு, அழகுக்கு அழகு சேர்ப்பதை நாம் அறிவோம்.



தருவதற்கு பாதுகாத்து வைத்திருந்தாள்.

அவர்கள் சென்ற படகு கிளாலியைக் கடந்து, வன்னி நிலப்பரப்பை அடைந்த நிலையில், கிளிநொச்சியில் ஒரு மரநிழலில் அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். அப்பொழுது குழந்தை பசியால் துடித்தான்; பாண் சாப்பிடுவதற்கு இசைவு கொண்டான். இடியப்பத்துக்கும் சொதிக்கும் மட்டுமே வாய்திறப்பவன் பழைய பாண் துண்டுக்கு வாய்திறந்தது பெற்றவளைப் பொங்க வைத்தது. பாணின் ஒரு துண்டைப் பிய்த்து அவனுக்குத் தந்தாள். அவன் சாப்பிட்டதும் - பிறிதொரு துண்டைப் பிய்த்தெடுத்த பொழுது யாரோ அவளைப் பார்ப்பது போலிருந்தது. நிமிர்ந்து பார்த்தாள். அவர்களோடு மரநிழலைப் பகிர்ந்து கொண்ட பிறிதொரு குடும்பத்தின் சிறுவன்! அமுதனின் வயதை ஒத்தவன். சற்று விலகி நின்று அவளது கையில் இருந்த பாணைப் பார்த்தபடி... அந்தக் குழந்தைக்கு ஒரு துண்டுப் பாணைத் தந்தவள், மீதிப்பாணை மகனுக்கு மீதப்படுத்திக் கொண்டாள். அவ்வேளை அவளது முதுகுப் பக்கமாக ஏதோ குறுகுறுப்பு. அவள் திரும்பியபோது தாயின் பின்னாலிருந்து அவளது கையில் இருந்த பாணைப் பார்த்தபடி இன்னொரு குழந்தை!

சிவரஞ்சனி துயரத்தால் நிலைகுலைந்து துடித்துப் போகிறாள்; வாசக மனதிலும் அவளது

மௌனித்த துடிப்பு அப்பிக் கொள்கிறது.

இடப்பெயர்வும் - அதனால், பசிப்பிணியால் அவதியுறுபவர்கள் பற்றியும் - குறிப்பாகக் குழந்தைகள் பற்றியதுமான ஓர் அவலச் சித்திரமே இக்கதை.

அடுத்தகதை யோகமிருக்கிறது. நம்மிடையே வாழ்ந்து மரித்த எழுத்தாளரும் - குந்தவையின் பல்கலைக்கழக சக மாணவர் பற்றியதுமானதே இக்கதை. அவர் பட்டம் பெற்ற பின்னர், உயர் பதவியில் இருந்த வேளை, வேலையில் இருந்து இடைநிறுத்தப் படுகிறார். அவரது தில்லுமுல்லுகளை அம்பலப் படுத்தும் கதையாக மட்டும் இதனை நான் பார்க்க வில்லை. வேலை இழந்திருந்த காலத்தில் அந்த மனிதரின் மன உளைச்சல்களையும் மன அழுத்தங் களையும் இக்கதை கூறுவதோடு, அத்தொல்லைகளில் இருந்து மீறிவர முயற்சிக்கும் அவரது எத்தனங்கள் கூறுவதாகவும் இக்கதை.

நண்பன் ஒருவனது உதவியால் வேலை மீளவும் கிடைக்கும் எனும் நம்பிக்கைத் துளிர்ப்பு அவரை மகிழ்ச்சியடைய வைக்கிறது. இது கதையின் இறுதிப்பகுதியில் வருகிறது.

இருவேறு மனநிலைகளில் அந்த மனிதரை நுண்ணுணர்வுடன் படம் பிடித்துள்ளார் ஆசிரியர்.


இந்த மையப்புள்ளியையொட்டி முன் பின்னாக, யுத்தகால உயர் நகரத் தோற்றத்தையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் சந்தித்து உறவு கொண்ட மனிதர்களைப் பற்றியதுமே இக்கதை.

வீடு நோக்கி, என்பது இன்னொரு நல்ல கதை. இக்கதை இழந்து போன முன்னைய வாழ்வு பற்றிய, அதன் தாபங்கள், அவலங்கள், ஏக்கங்கள் பற்றிய Nostalgia தன்மையுடைய கதை. ஊரைப் பற்றிய, வீட்டைப்பற்றிய பழைய நினைவுகள் கதையில் செறிவாகப் பின்னப்பட்டுள்ளது. குறிப்பாக இக்கதையில் வீட்டின் வலப்பக்கம் அமைந்துள்ள விசாலமான படுக்கை அறை பற்றிய குறிப்புக்களும் விபரங்களும் துயரம் தரும் வகையில் வருகின்றன.

கதை முடிவில், அப்படியென்ன அவசரத்துடன் கதையின் நாயகியினது கால்களைக் காவு கொள்வது போல அந்த மிதிவெடி வெடிக்க வேணும். ஆசிரியர் பரிதாப உணர்வை ஓஹென்றி பாணியில் உருவாக்க முயற்சித்துள்ளாரா? இம்முயற்சி கதையுடன் ஒட்ட வில்லை. அப்படியெல்லாம் இக்கதை முடிய வேண்டுமா என்ன?வேண்டாமே!



கதைகள் உருவாகிவரும்போதே புற உலகத்தோற்றங்கள் புலனுணர்வின் லகரியில் சிறைப்பட்டு, அதில் ஸ்தம்பித்து, ஆலாபனை ஏதும் செய்யாது பழுதற்ற முழுமையுடன் பிறப்பெடுத்து விடுகின்றன. இதனை இவரது பாரிய கலை வெற்றி என்றே நினைக்கின்றேன்.




அடுத்தது இணக்கம். இக்கதையில் சின்னச் சின்ன செய்திகள் காட்சிப்படிமங்களாகக் கதையை நிரப்பி அழகு செய்கின்றன. சுற்றுப் புறச்சூழலும் காட்சிகளும் மனிதர்களும் அவர் தம் விசித்திரமான .யல்புகளும் கதையில் படமாகிறது. புத்தளம் நகரம், அங்குள்ள கடை கண்ணிகள், சந்தைத்திடல் என்ப வற்றை நம் கண் முன் முழுமையாகக் கொண்டு வரும் கதை இது. மனிதர்களின் இணங்கிப் போகும் சுபாவத்தை நெடுகிலும் பேசும் இக்கதை அதனுடைய இறுதிப் பகுதியில் இணக்கமின்மையின் சல சலப்பையும் பதிவு செய்கிறது. இந்த முரண்கூட, கதைக்கு அழகு சேர்ப்பதாகவே அமைந்துள்ளது.

யாழ்.வைத்தியசாலை கண் சிகிச்சைப்பிரிவில் தனது கண்களைக் காண்பிக்க வந்த பெண்ணின் (ஆசிரியர் தான்) அனுபவங்களைக் கூறும் கதை பயன் படல்.

கண் மருத்துவ நிபுணர் டொக்டர் பரநாயகம் நோயாளியின் கண்களைப் பரிசோதித்துப் பரிகரிப்பதி லும் பார்க்க மருத்துவ மாணவ மாணவியர்களுக்குப் பாடம் நடத்துவதிலேயே அதிக அக்கறை காட்டுகிறார். அவராலும், மாணவர்களாலும் அவஸ்தைக்குள்ளாகும் நோயாளியின் மனோநிலையும், பரிதவிப்பும், பத களிப்புமே இந்தக்கதையின் பிரதான மையப்புள்ளி.

திருவோடு எனும் கதை மனித மனோபாவங்களை குறிப்பாக பெண் களின் குணநல விவகாரங்களை விரிக்கும் கதை. கதையில் வரும் பிரதான பாத்திர மான சந்திரா(ஆசிரியர்தான்) எதிலுமே பட்டுக் கொள்ளாமல் நல்லியல்புகளுடன் நடந்து கொள்வது கதைக்கு வலு சேர்க்கிறது. அத்துடன், கதைக்குத் திருவோடு என்று தலைப்பு இட்டது கூட அருமையிலும் அருமை. வெளி நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள நம்மவர்கள் அங்கு அகதிப் பணம் பெறக் கையேந்துவதைக் கதைத் தலைப்பு Suggestive ஆகச் சுட்டுவது மிக நேர்த்தி!

கல்யாணப் பலகாரம் சுடும் வித்தாரம் விலாவாரி யாக விபரிக்கப்படும் கதையே புழுக்கம். இது சொந்த பந்தமும் அயலவரும் திரண்டு வந்து பலகாரம் சுடும் விதம் பற்றியும் அவர்களது வாய் வல்லபம் பற்றியும் சொல்லும் கதை. சூழலின் புழுக்கத்தை மட்டுமல்ல, பலகாரம் சுட வந்த பெண்களின் மனப்புழுக்கத்தையும் கதை வெளிச்சமாக்குகிறது. குறிப்பாக நான்கு பெண் களின் தாயான நாகம்மா அடுப்பில் எண்ணெய்ச்

சட்டியை வைக்க அழைக்கப்படுகிறாள். அவள் சட்டியை வைப்பதற்கு முன்பாக விளக்கேற்றி முருகனை வழிபடுகிறாள். அப்பொழுது அவளது உணர்வுகள் இவ்வகையில் வெளிப்படுகிறது.

"அப்பனே! முருகா என்ரை வீட்டிலை எண்ணெய் சட்டி வைக்க எப்ப விடப் போறாய்...?"

குந்தவையின் நல்ல கதைகள் எல்லாவற்றைப் பற்றியும் நான் இங்கு பதிவிட வேண்டுமென்பதில்லை. அவற்றை வாசகர்கள் இனங்கண்டு இரசிப்பதற்கு வழி விடுகிறேன்.

கட்டுரையை நிறைவு செய்வதற்கு முன்ன தாக, குந்தவையின் படைப்பாற்றல் பற்றி இரு பெரும் இலக்கிய ஆளுமைகள் தந்த குறிப்புகளை இங்கு தரலாமென நினைக்கின்றேன். முதலில் நமது எஸ்.பொ., அடுத்து விமர்சன ஜாம்பவான் வெங்கட சாமிநாதன்.

**"இந்த நூலின் ஊடாகப் பயணிக்கும் போது, குந்தவையின் இலக்கிய நோக்கும் வாழ்க்கைமுறையும் வேறுபட்டு அமைந்தனவாக எனக்குத் தோன்றவில்லை. தமிழ்ச் சமூகத்தை ஆட்டிப் படைக்கும் அவலங்கள், அவசரங்கள், விசனங்கள், விக்கினங்கள், துக்கங்கள், துயரங்கள் ஆகிய வற்றிலிருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொள்ளாமல், அதில் வாழும் ஒரு உயிர்ப்புள்ள காட்சியாகக் கதைகளை நகர்த்து கிறார். தாமரையிலைத் தண்ணீர்! அத்தகைய ஒரு நிதானம் அந்த நிதானந்தான் குந்தவையை மற்றைய சமகால ஈழத்து கதைஞர்களிலிருந்து வேறுபடுத்தி, தனித்துவப் படுத்திக் காட்டுவதாக எனக்குப் படுகிறது"**

அத்துடன் அவர் இன்னொரு விடயத்தையும் கூறுகிறார்:

**"குந்தவை எந்தக் கட்டத்திலும் தம்மை ஒரு பிரசாரகாராய் தாழ்த்திக் கொள்ளாமல், தாம் ஒரு கலைஞன் என்கிற பிரக்ஞையை வலியுறுத்திப்(தன்னை) புகுத்திக் கொள்ளாமலும் லாவகமாக கதை நிகழ்ச்சிகளினூடாக அழைத்துச் செல்லுதல் உண்மையில் கலை நயத்துடன் தனித்துவமாய் அமைகிறது"**

அடுத்து வெங்கட் சாமிநாதனின் கருத்துக்கள்:

**"குந்தவை எழுதியது அதிகமில்லை. ஆனால், மிகுந்த தேர்ச்சிபெற்ற எழுத்து. அபாயங்கள் நிறைந்த சூழலில் நீண்ட பல வருடங்களாக, போரின் அழிவுகளையும் மீறி அங்கு பிடிவாதமாக வாழ்ந்து வரும் குந்தவையின் அடங்கிய குரலும் அமைதியும் நிதானமும் விஷேசமானவை. அவரது எழுத்தும் அலங்காரங் களோ, உரத்தகுரலோ, ஆவேச உணர்வோ அற்றது. குந்தவை மிக விஷேசமான எழுத்தாளர். அவரது எழுத்தும் அவரைப் போலவே விஷேசமானது. அவரது நிதானம் அலட்டலின்மை, தேர்ச்சி எல்லாம் என்னைக் கவர்ந்தன. அவரிடம் ஒரு பரிகாச உணர்வும் இழையோடுகிறது."**

நல்ல சிறுகதைகளை தமிழுக்குத்தந்தவர் குந்தவை. அவர் எழுத உத்தேசித்து இதுவரை எழுதாமல் இருக்கும் நாவலை எழுதி முடிக்க வேண்டும் என்பதே தரமான தமிழ் வாசகர் பலரது எதிர்பார்ப்பாகும்!

---

# என்னை நான் விடுவிப்பேன்...

கண்ணீரால் உனையெண்ணி
கவிதைகள் பலவரைந்தேன்.
காரிகை என் வாழ்க்கையிலே,
கவலைகள் தான் மிச்சமா?

கண்ணே மணியே கிளியே என்றாய்.
காதல் மொழிகள் பேசியே வென்றாய்.
கன்னிப்பருவங் கொள்ளை கொண்டாய்.
கனவிலும் கண்ணீரில் மிதக்க வைத்தாய்.

வஞ்சியவள் நானும் உந்தன் – ஆசை
வலையினில் விழுந்துதான் போனேன்.
பத்தோடு பதினொன்றாக – என்னை
பதம் பார்த்துத்தான் சென்றுவிட்டாய்.

எண்ணி எண்ணி ஏங்குகிறேன்.
ஏமாந்த மனமதை தேற்றுகிறேன்.
உன்னைச் சொல்லிக் குற்றமில்லை..
உணர்வதற்கு ஒரு வழி சமைத்தாய்.

புதுமைப் பெண்ணைப் பாடிய,
பாரதியும் ஆண்தானடா!
பெண்விடுதலை நிதமும் பேசிய,
விவேகானந்தனும் தாய்மகன்தானடா!



அவ்வழி வந்த நீயும் தான் யாரடா?
எவ்வழி சிந்திய நீயுமோர் பேயடா?
எப்பிறப்பில் நீவந்திருந்தாலும்,
என்னெழுச்சி இனி மாறாதடா!

தடுமாறித் தடக்கி விழுந்ததும்,
தடையென்று எண்ணேனடா
என்னை நான் மாற்றுவேன்!
என்னை நான் விடுவிப்பேன்!

என்னருமை தெரியும் நாளது,
வெகுதூரத்தில் இல்லையுனக்கு.
அன்று நான் உன்னைவிட்டு,
தொலை தூரம் போயிருப்பேன்.

மந்தமோகன்

■ மன்னார் அமுதன்

# ஒற்றை யானை

தலை கிறுகிறுக்க அருகில் இருந்த பிளாஸ்டிக் கதிரையைப் பிடித்தாள். கதிரையில் ஒட்டியிருந்த செலோடேப்பில் ஈரக்கைபட்டு வழுக்கியது. கதிரை சாய்ந்துவிட நெற்றி போய் சுவரில் மோதிக் கொண்டது. வலித்த நெற்றியைத் தடவிய போது விரலில் இரத்தம் பிசுபிசுத்தது. சுவரோடு சாய்ந்து கொண்டாள். கால்கள் வலுவற்று தரையில் நிலை கொள்ள மறுத்தன. அப்படியே இருந்துவிட்டால் சுகமாயிருக்கும் போலிருந்தது. அது ரணமாக விருந்தாலும் வேறு வழியில்லை... சிறிது நேரம் அப்படியே இருந்து தான் ஆகவேண்டும். உதவிக்கு ஆளில்லாத வீட்டில் எவ்வளவு நேரம் அப்படியே இருந்திருப்பாள் என தெரியாது. முழிப்பு வந்த போது பசித்தது. எழுந்து கொள்ள முடியாதபடி கால்கள் வலித்தன. பிளாஸ்டிக் கதிரையை நம்ப முடியாது. ஊன்றி எழும்பும் போது திரும்பவும் வழுக்கிவிடும். மெள்ளத் தவண்டு சாய்மானக் கதிரைக்கு கிட்ட போனால் ஊன்றி எழும்பி விடலாம். கோயிலுக்கு போன மூத்தவள் வாறதுக்குள்ள எப்படியாவது எழும்பிரனும்.

முதுமைக்கென்றே இருக்கும் அழகில் ஒரு முறை முக்கியெடுக்கப்பட்ட தோற்றம் டெய்சி யாச்சிக்கு. மலையிலிருந்து தலைவிரிகோலமாய் இறங்கும் ஆற்றின் வகிடினைப்போல சுருக்கங்கள் நிறைந்தது அவள் முகம். இடுங்கிய கண்களுக்குள் இன்னும் ஒளி இருந்தது. கண்களினடியில் பைவிழுந்து விட்டது. செத்துவிட ஆசைப்படும் வயது. இரண்டு உலகப் போர்களையும் கண்டவள். அம்பத்தியாறாம் ஆண்டு மொழிப்பிரச்சினையில் புருசன் வேலையைத் தூக்கியெறிந்துவிட்டு வந்தபோது அய்ந்தாவது பிள்ளையாக அவரையும் ஏற்றுக்கொண்ட கருணை இன்னும் வடியாமல் இருந்தது. ஒவ்வொரு சனிக்கிழமையும் சுடுதண்ணீர் வைத்து முழுகிவிடுவாள். ஞாயிற்றுக் கிழமை ஏழுமணிப்பூசைக்கு அவள் போகும் போது அறுவதை நெருங்கும் ஆச்சிகளுக்கு அசிட் குடித்ததைப் போல வயிறு எரியும். சாகிறகாலத்துல சென்ட் அடிச்சிட்டு திரியுறா பாரென துப்பிக்கொள்வார்கள்.

ஊன்றி எழும்பிய போது தலை சுற்றுவதைப் போலிருந்தது. கைத்தடியை எடுத்துக்கொண்டால் தேவலாம். கனடாவில் இருந்து வந்திருக்கும் மூத்தவள் வாங்கியனுப்பியது. கை பிடிக்கும் இடத்தில் ஒரு வாய் திறந்த யானை தும்பிக்கையை உயர்த்தி பிளிறிக் கொண்டிருந்தது. எண்பதாவது வயதுவரை கைத்தடியை பாவிக்கவில்லை.

ஆனால் வெளியில் எங்கும் போகும்போது தனது கையில் கொழுவிக்கொள்வாள். மகளை ஒத்த வயதுடையவர்கள் வரும் போது பெருமையாகக் காட்டுவாள். அவளுக்கு கைத்தடியை ஊன்றுவதும் கண்ணாடியைப் பாவிப்பதும் கௌரவக்குறைச்சல் தான். ஆனால் தனித்த இரவுகளில் கைத்தடியை அருகில் வைத்துக்கொள்வாள். அந்த யானை தன்னை தும்பிக்கையை உயர்த்தி ஆசிர்வதிப்பதைப் போல இருக்கும். சில இரவுகளிலும், நீண்ட பகலிலும் யானையின் பிழிறல்கள் கூட கேட்டதுண்டு.



முன்வாசலில் இருந்து சாலையைப் பார்த்தபடி யானையின் தலையைத் தடவிக்கொண்டிருப்பதில் அவளுக்கு நிறைய விருப்பம். அது தனது கனடா பூட்டனின் முன் தலையைத் தடவியதை ஞாபகப்படுத்தும்.

பாக்கு போட்டதைப் போல தொண்டை அடைத்துக்கொள்ள செருமிக்கொண்டாள். வழிந்த கண்ணீரை துடைக்கவில்லை. முகத்தைக் கழுவிக்கொண்டாள். இரத்தம் நின்றிருந்தது.

இரண்டு இடியப்பத்தை போட்டுக்கொண்டு குசினிக்குள் இருந்த கதிரையை இழுத்துப்போட்டு இருந்தாள். நேரத்தைக் கடத்துவதற்காக ஒவ்வொரு நாளும் சமைக்கிறாள். வர வர சாப்பாட்டில் நாட்டமில்லை. குசினிக்குள் வியர்த்து வடிந்தது. இரத்த அழுத்தம் கூடியிருக்கலாம். மனம் ஒரு இடத்தில் நின்ற பாடில்லை. நடுசாலைக்குள் சென்றால் சுகப்படும் என அங்கு வந்து காற்றுப்படுமாறு அமர்ந்து கொண்டாள்.

கணவன் அரசாங்க வேலையிலிந்து விலகி அரசியலிற்குள் இறங்கிய போது குடும்பம் ஆட்டம் கண்டிருந்தது. நான்கு பிள்ளைகளையும் படிப்பிக்க அவள் தான் உடுப்பு தைக்கத் தொடங்கினாள். இனப் பிரச்சினை தொடங்கிய காலத்தில் பெரியவன் இந்தியாவிற்கும், ஒருத்தி கனடாவிற்கும் புலம் பெயர்ந்து விட மற்றைய இருவரும் நகரத்துக்குள் முடித்துக்கொண்டு போய்விட்டனர்.

பேரப்பிள்ளைகள் பிறந்த போது கனடாவில் இருப்பவள் பிள்ளைகளை வளர்ப்பதற்காக கனடாவிற்குக் கூப்பிட்டாள். இரண்டு பிள்ளைகள் பிறந்த போதும் இவள் தான் போயிருந்து பத்தியம் பார்த்தாள். பேரப்பிள்ளைகளோடு இருப்பது கணவனின் சாவிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வசதியாயிருந்தது. மகனின் பிள்ளைகள் பிறந்த போது இந்தியாவிற்கும் சென்றாள். ஆனால் எங்கும் வசதிப்படவில்லை. கனடாவில் கறியைச் சூடாக்கி சாப்பிட வேண்டிருந்தது. கிழமைக்கு ஒருக்கா சுடுதண்ணி போட்டு தலைமுழுகிறவக்கு அங்க கிழமைக்கு ஒருக்கா சமைச்சு ஒவ்வொரு நாளும் சூடாக்கி சாப்பிடறது அரியண்டம் தான். அதைச் சொல்லி போகப்போறன் புள்ள டிக்கட் போடு என்ற போது மகள் பேசினாள். அடுப்பணைக்க மறந்த ஒருநாளில் சட்டியும் எரிந்து குசினிக்குள் புகை மூண்டபோது மகள் சொன்னாள் "எங்களைக் கொண்டிராதனை... நீ அங்கயே போயிரு"

அம்மா நாட்டுக்கு வந்த கொஞ்ச காலத்தில கனடாக்காரிக்கு மனசு கேக்கல... அம்மாவுக்கு ஏதாவது உபகாரம் செய்யணுமெண்டு நினைச்சு வருசா வருசம் ஏதாவது ஒரு பொருளை வாங்கிக் குடுங்கன்னு நாட்டுக்கு வர்ரவங்களிட்ட காசு குடுத்துவிடுவா... இப்ப வீடு நிறைய சாமான்... ஒத்தயா டெய்சியாச்சி.

***

கனடாக்காரி நாட்டுக்கு வந்தா சகோதரங்களையும் கூப்பிடுறது வழமை.. இந்தியாவில் இருக்கும் தம்பிக்கு தானே டிக்கட் போடுவா... இவ கொண்டு வார சொக்லட்டுகள் டின்பால் குடிக்கிற மாதிரி இனிப்பும் கொஞ்சம் கசப்புமா இருக்கும். ... உடுப்பும் நல்ல வாசம்... எப்பவுமே வராத சின்னவனும், சவுந்தரியும் கூட வருவாங்க...

வீட்டுக்கு வந்த இளைய மகனும், மகளும் சாமான்களை கண்டு திகச்சு போயிட்டாங்க... அம்மா செத்தா இதையெல்லாம் யாரு எடுக்கிறது... இளையவனின் மனுசி கராராக சொல்லிவிட்டாள், சாமான் தராட்டி "மாமி செத்தா, எங்கட வீட்டுல வைக்க முடியாது".

மகளுக்கு அப்படி சொல்ல முடியல. "சீதனம் தந்த வகையில எனக்கு எல்லாமே கொறச்சல் தான்... அதனால மர அலுமாரி, ஆறுபிளாஸ்டிக்கதிரை, சாப்பாட்டு மேசை, சாய்மானக்கதிரை, தையல்மெசின், பிரசர் பொக்ஸ், கியாஸ் அடுப்பு, சிலிண்டர் எல்லாத்தையும் எனக்குத் தான் தரனும்.

வாய்த்தர்க்கம் கைக்குஎட்ட முன்ன கனடாக்காரி தான் சொன்னா, அம்மா சாகிற வரைக்கும் யாரும் ஒரு பொருளையும் எடுக்கக்கூடாது. அம்மா யாருக்கு குடுக்கனும் எண்டு விரும்புறாவோ அவங்களுக்கு குடுக்கலாம்.

சாப்பிட்டுவிட்டு ஆச்சி அறைக்குள் சென்றவுடன் இளையதம்பி தொடங்கினான்... அம்மாவுக்கு முன்னப்போல இல்லை... இப்ப எத்தன தரம் விழுந்துட்டா. போன முறை டொக்டர்ட கொண்டு போன நேரமே சொன்னவர் , "தொடர்ந்து தையல் மெசின்லயே இருந்ததால காலில தேய்மானம் கூடவாம், நிக்க நடக்க கஷ்டமெண்டு.

எங்கட நாட்டுல ஒருத்தர் உழைச்சு ஒருத்தர் வாழுறதே பெரும்பாடெண்டு உனக்கு நான் சொல்லியா தெரியனும் என்றவாறே சாப்பாட்டுக் கோப்பைக்குள் கையைக் கழுவினான் பெரியவன்.

இவ்வளவு காலமும் நீங்களா பாக்கிறீங்கள். உங்கட பிள்ளைகளையும் அம்மா வளத்துவிட்டவா தானே... உங்களுக்கும் கடமை இருக்கெண்டுறத யாரும் மறக்காதிங்க. விளங்கிச்சோ... நீங்க செய்யாட்டியும் மாசாமாசம் நான் காசு அனுப்புவன்.

அம்மாவ வச்சிப்பாக்க எங்களுக்கு விருப்பம் தான் அக்கா. ஆனால் என்ற மனுசனை உனக்கு தெரியும் தானே... அவருக்கும், இவவுக்கும் ஒவ்வாமை கிடக்கு... ஆளில்லாத நேரத்துல அடிச்சு சாக்காட்டினா நாளைக்கு உனக்கென்ன பதில் சொல்றது...

அம்மா இருக்கிற மாதிரியே இங்க இருக்கட்டும். இந்த பாங்க் கணக்க மட்டும் என்னோட பேருக்கு மாத்திட்டுப் போ... இல்லாட்டி எண்ட கணக்குக்கு காசை போடு. நாளைக்கு செத்தா கனடாவிலருந்து வந்தா அடக்கம் செய்யப்போற. கையில காசில்லாம இங்க ஒரு வேலையும் செய்ய முடியாது.

சின்னவன்... பாங்க் கணக்கு அப்படியே இருக்கட்டும். அதுதான் அவக்கு சுகப்படும். உனக்கு கொஞ்சம் காசு தந்திட்டு போறன்.. இடையில எதுவும் நடந்தாலும் கடனை வாங்கியாவது செஞ்சு போடு.

நானும், பெரியவனும் நினைச்ச உடன வரமுடியாதெண்டு உனக்கு தெரியும் தானே. பிறகும் காசு அனுப்புவன்...

"எல்லாரும் நிக்கிற நேரமே எதுவும் நடந்திட்டால் நல்லம் போலக் கிடக்கனை... காரியத்தை எல்லாரும் சேந்து செஞ்ச மாதிரி போயிருமே... இதேன் ஒராள ஒராள் பாத்துக்கொண்டு... கடைசி நேரத்துல முகம்பாக்க முடியாம நீயுமல்லா நொந்து சாகனும்... அம்மாவுக்கும் அதொரு கொடுப்பினையா போயிரும்..."



பெரியதம்பி நித்திரைக்கு போகமுதல் அக்காவிடம் கேட்டான் "அந்த டிஜிட்டல் பிரசர் பொக்சை மட்டும் நான் எடுத்துட்டுப் போகவா."

ஆச்சிக்கு அன்றிரவு நித்திரையில்லை. கண்மூட முடியாமல் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. தன்னை யாரும் கூட்டிக்கொண்டு போவ தாக சும்மா கூட ஒரு வார்த்தை சொல்லவே யில்லையே... ஏன் பிள்ளை.... உங்களுக்கு அவ்வளவு பாரமாவ போயிட்டன் என தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். அருகிலிருந்த யானையைப் பார்த்தாள். அது ரௌத்ரமாக பிளிறிக்கொண்டிருந்தது.

***

நாலு மணிக்கே கனடாக்காரி எழும்பிட்டா... அவவுக்கு நித்திரை போகலை... வாசலைதிறந்து படியில் இருந்தாள். நொஸ்டாலஜியாக இருந்தது. அப்பா மடிக்குள் வைத்துக்கொண்டு பல்லுத்தீட்டி விட்டதும், குளிப்பாட்டியதும் ஞாபகத்தில் வந்தது. அப்பா வேலைக்கு போகாத காலத்துல கூட அம்மா அப்பாவை எதற்கும் கோவித்துக்கொண்டதில்லை. அம்மா நல்ல வடிவு... சாயலில் அம்மாவைப் போலிருப்பதில் பெருமை தான். எதுவும் வேணு மெண்டு அம்மா கேட்டதில்லை..

இளம்பனியும் குளிரும் மனதை இலேசாக்கியது... புழுதி மணம்... வீட்டைச் சுற்றி நிறைய பூக்கள் பூத்துக்கிடந்தன. ஒரு பூவைக் கொண்டு வந்து அப்பாவின் படத்தின் முன் வைத்தாள். அப்பா சிரிப்பது போலிருந்தது. அப்பா உயிரோடு இருந்திருந்தால் அம்மாக்கு தனிமை இருந்திருக்காது. எங்களை நினைச்சு தான் வேதனைப்பட்டிருப்பார்.

அம்மாவின் அறை மங்கல் வெளிச்சத்தில் திறந்துகிடந்தது. உள்ளே நுழைகையில் மூத்திரவாடை அடித்தது. கதிரையை அருகில் இழுத்து தலகாணியில் கையூன்றி அமர்ந்தாள்... அம்மா அழுதிருந்தது தலகாணி ஈரத்தில் தெரிந்தது. கண்ணீரும் பீழையும் சேர்ந்து ஒரு வகிடாய் மூக்குவரை உறைந்து கிடந்தது. கைகளால் தலையை வருடினாள். உறைந்து போன பீழையைத் தடவி எடுத்தாள்... அம்மா முழித்துக் கொண்டாள். என்ன பிள்ள காத்தாடி இல்லாம நித்திரை போகலையோ... தேத்தண்ணி போடவா... என மெல்லிசாய் கேட்டபடி கண்களை மூடிக்கொண்டாள்.

மெல்லிய இரவுடையில் அம்மா வெறும் கூடாகத் தெரிந்தாள். கூன் உடம்பில் கழுத்து எழும்புகள் துருத்திக்கொண்டிருந்தன. மார்புகள் தொங்கி வயிற்றைத் தொட்டிருந்தன. மெல்லிய உடலிற்கு சம்மந்தமில்லாமல் வயிறு தனியாக சரிந்து கிடந்தது. மெல்ல வயிற்றைத் தடவிப்பார்த்தாள்... மிருதுவாக இருந்தாலும் பேறுகாலத் தழும்புகளை கையில் உணரமுடிந்தது. இந்த வயிற்றில் தானே எங்களைச் சுமந்தாள்... எத்தனை ஆசைகளோடு வளர்த்திருப்பாள்...

"வேலை முடிஞ்சதும் எழும்பிப் போயிருவீர்... நானல்லா சுமக்கனும்..." என இரண்டாவது கருவைக் கலைத்துக் கொண்டது ஞாபகம் வந்தது. எழுந்து கண்ணாடியில் ஒரு முறை வயிற்றைப் பார்த்துக் கொண்டாள். அதுவும் வெளியில் தான் தள்ளிக் கிடந்தது.

படுக்கையறைக்குள் இருந்த மூத்திரவாளியை தூக்கிக்கொண்டு வெளியேறினாள். புழக்கடையில் பன்னாடைகளைப் போட்டு சுடுதண்ணி வைத்த அடையாளம் இருந்தது. எரிச்சல் பட்டாள்... கியாஸ் அடுப்பு இருக்க இவ ஏன் புகையில கிடந்து சாகிறா...

சலித்தபடி வீட்டிற்குள் வந்தாள்...

அம்மா எழும்பியிருந்தாள்... அவளிடம் கதைத்து எதுவும் மாறிவிடப்போவதில்லை. தேத்தண்ணி போட்டாள். அம்மாவிடம் குடுக்கும் போது சுடு தண்ணி வைக்கிறன் ... குளிக்கிறீங்களா... என்றாள்.

வேணாம் பிள்ளை... கஷ்டப்படாதை... என்ற படி நடுங்கும் கைகளுடன் தேத்தண்ணியை வேண்டிக்கொண்டாள்.

திருந்தாதி மணி அடித்தது. குருசு போட்டுக்கொண்டாள். பூசைச் சத்தம் மைக்செட்டில் தூரத்தில் கேட்டது. ஒரு கட்டு செபப்புத்தங்களை எடுத்துக்கொண்டுவந்து செபம் சொல்லத் தொடங்கினாள். அம்மாவின் பழக்கங்கள் எதுவும் மாறியிருக்கவில்லை. பெரியவளும் இங்கிருந்து போகும் வரை காலைச் செபம், மதியச் செபம், மூனு மணிச் செபம், இரவுச்செபம் என எல்லாம் சொன்னவள் தான்.

வெளிநாட்டிற்கு போனபிறகு காசிருந்தா காணும் என நினைத்துக்கொண்டாள். வருடத்திற்கு ஒரிரு முறை உல்லாசப்பிரயாணம் போல கோயிலுக்கு போறது தான். கோயிலுக்கு போனால் பழைய ஆக்களை எல்லாம் பார்க்கலாம் என நினைத்துக் கொண்டாள்.

விடிந்திருந்தது.... டோஸ்டரில் இரண்டு பாண் துண்டுகளைப் போட்ட படியே அம்மாவிடம் சொன்னாள் "பெரியவனோ, சின்னவனோ, சவுந்தரியோ யாரு கேட்டாலும் எதையும் குடுக்க வேணாம். ஆனா... யாருக்கு எதைக் குடுக்கலாம் என யோசிச்சு எழுதி வையுங்க.. வீட்டை மட்டும் யாருக்கும் குடுக்காதீங்க.. பிறகு நானோ, பெரிய வனோ நாட்டுக்கு வந்தா ரோட்டுல தான் நிக்கனும்... வீட்ட இதுல வச்சுக்கொண்டு ஹோட்டலில தங்கினா நல்லாவா இருக்கும்... கேட்டீங்களோ அம்மா... அப்பாட பேருக்கு தான் மரியாதயில்லாம போயிரும். வீட்டை என்னட பேருல எழுதிவிடுங்கோ... யாரெண்டாலும் இருக்கட்டும். நாங்க வந்தாலும் தங்கலாம்..

எங்கட கடசிக் காலத்துக்கு நாங்க எப்படியும் இங்க தானம்மா வரனும்.. பிள்ளைகள் பாக்கும் எண்டு எதிர்பாக்கமுடியாது. வீடு கைமாறினா இந்தச் சந்ததி இருந்ததுக்கு அடையாளம் இருக்காதெண்டு தெரியும் தானே..

லோயர்ட கதைச்சிட்டன்... டொக்கு மெண்ட்ஸ் எல்லாம் சரி... பின்னேரமா போய் கையெழுத்து போட்டா சரி என்றபோது டெய்சியாச்சி ஜன்னலைத் தாண்டி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

***


டெய்சியாச்சி பிறந்து சில நாட்களில் அப்பா இறந்திருந்தார். பதிமூன்று வயதிருக்கும் போது அம்மாவும் இறந்துவிட திருமணம் முடித்த அக்கா தான் வளர்த்தாள். வீட்டிற்கு பின்புறமிருந்த காணியை அக்கா தந்த போது காடுமண்டிக்கிடந்தது. 18 வயதில் டெய்சியாச்சிக்கு ஆங்கில ஆசிரியையாக வேலை கிடைத்தது. முதல் மாத சம்பளமெடுத்து காடு திருத்தினாள். மாதச் சம்பளத்தை சேர்த்து கொஞ்சம் கொஞ்சமாக வீட்டைக் கட்டினாள். அத்திவாரம் முடித்தபோது மழை கொட்டியது. அக்காவுடைய மேட்டுவீடே தண்ணீருக்குள் மூழ்கி கிடந்தது. டெய்சி யாச்சியின் அத்திவாரத்தைக் காணவேயில்லை. நிலம் காய்ந்தவுடன் அத்திவாரத்தை உயர்த்திக் கட்டினாள். ஆறடி உயரத்தில் அத்திவாரம் போட்டாள். வாசலில் நின்று பார்த்தால் நாலு ரோடும் தெரியும் உயரம். வீடு இரண்டு அறையும், குசினியும்,விறாந்தையும் பின்னுக்கு கக்கூஸ் என கட்டிக்கொண்டாள். அந்த நாட்களை நினைத்தால் ஆச்சிக்கு இன்னும் அழுகை வரும்.

***

கண்களைத் துடைத்துக்கொண்டாள். பெரிய மகளுக்கு வீடு எழுதியாச்சு. மிச்சம் இருக்கிறதுகள சின்னவங்கள் ரெண்டு பேருக்கும் சரி பாதியா பிரிச்சா சரி. பேப்பரில் பேர் எழுதி விடுபட்ட பொருட்களில் செலோடேப் போட்டு ஒட்டினாள். பிரசர்பொக்ஸ்சில் பெரியமகனின் பெயரை ஒட்டினாள்.

நெஞ்சு கனப்பது போலிருந்தது. மூச்செடுக்கவும் முடியவில்லை. சுடுதண்ணி வைக்க நேரமில்லை.. குளித்தாள்.. தன் சின்ன சூட்கேசை எடுத்து கல்யாண சீலையை உடுத்திக்கொண்டாள். அதில் தன் கணவனின் வாசம் அடிப்பதைப் போலிருந்தது. முந்தானையை திரும்பத் திரும்ப மணந்து பார்த்தாள்... காலுறையும், கையுறையும் அணிந்து கண்ணாடியில் ஒருமுறை பார்த்தாள். மணக்கோலம் மனதில் நிழலாடியது. கையில் சுற்றிவிட ஒரு செபமாலை, வாசனைத் திரவியம் என அருகில் அருகில் எடுத்து வைத்துக் கொண்டு கட்டிலில் படுத்தாள்.

மார்போடு அணைத்திருந்த யானையைப் பார்த்தாள்... அதன் தலையைத் தடவினாள்... கண்களில் இருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது... அதில் ஒட்டப்பட்டிருந்த துண்டில் எழுதிக்கிடந்தது "இன்றே அடக்கம் செய்யவும்". ●




## நூல் அறிமுகம்

நூல் - பொழிவு(சிறுகதைத்தொகுதி)
ஆசிரியர் - க.சட்டநாதன்
வெளியீடு - ஜீவநதி
பக்கம் - 176
விலை - 300/-

12 சிறுகதைகளை உள்ளடக்கிய க. சட்டநாதனின் 6 ஆவது சிறுகதைத்தொகுப்பு. பெண்கள். சிறுவர்கள். உள நலம் என்பவற்றை மையப்படுத்தி எழுதப்பட்ட கதைகளின் தொகுப்பு.



# வந்த வழிகாண் துளி

இனிய நட்புகளே ! உறவுகளே !
எனக்கு
மலசலகூடத் தூய்மைத் தொழிலாளி
தொடக்கம்
பேராசிரியர்வரை
அறிமுகம் சிநேகம் அன்புவழி உண்டு

தமக்குத்தாமே
தலையில்
இரண்டு கொம்புகள் செருகிக்கொண்டு
அசைந்து செல்லும் அழகிய மேகங்களின்
பிரபஞ்ச வெளிகளிலே . . .

உங்களுக்குத் தெரியுமா?
நான் ஒரு
குழந்தைத் தொழிலாளியாய் வாழ்ந்தேன்

எட்டு வயதிலேயே
– இரண்டு வேலை –

அதிகாலையில் வியர்வை சிந்தும் பிழைப்பு
பின்பு பாடசாலைக்கு ஓட்டம்
மாலை முழுவதும் பிழைப்பு
இரவில் ஆழ்ந்த தூக்கம்
மீண்டும்
அதிகாலையில் . . . .

இதுவே என் மணிக்கூடு . . .

தலை நிமிர்ந்ததும்
உதவியென்று வந்தோர்க்கு
ஏணியானேன்
உறவுகள் நட்புகளுக்கும்
ஓடமானேன்.

இயன்றளவு பெற்ற அழிவற்ற கல்வியின்
அடுக்குத் தொடர்ச்சியில்
உலகப்பயிருக்கும்
ஊடக வாய்க்காலுக்கும்
அறிவுநீர் சிறிதளவேனும் பாய்ச்சுகின்றேன்.

என்னை
அரவணைப்போரைப் போற்றுகின்றேன்
என்னை
ஒதுக்குவோரையும்
வாழ்த்துகின்றேன்.


இனிய உயிர் பிரியும்போது
உறவை நட்பை உலகை
புகழைப் பொருளைப் புத்தகத்தைக்
கையில் எடுத்துக்கொண்டா
பயணம்
போகப்போகிறோம்..?

க.முத்துராஜா

# பாசம்

மீராவுக்கு கடந்த ஒரு வாரமாக ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் தந்துகொண்டேயிருக்கிறது அக்காவின் செயற்பாடுகள்.

"சே... அக்காவை எத்தனைநாள் மனதிற்குள் திட்டியிருப்பேன், சபித்திருப்பேன். பாவம்... அவளுக்கும் மனம் இருந்திருக்கும். வீட்டு வேலை பிள்ளைகள் தொல்லை, உத்தியோகம் என்று அவளுக்கு இயலாமல் போயிருக்கும். ஏதோ இப்ப நேரம் வசதியள் கிடைச்சிருக்குப் போலை. அதுதான் இப்ப ஒரு கிழமையாகத் தொடர்ந்து அம்மா



வோடையே கூடுதல் நேரத்தைச் செலவழிச்சிட்டுப் போறாள். இனியும் இப்பிடியே வருவாளாம்."

மீரா நாலைந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாடசாலையில் படிப்பிக்கிறாள். அக்கா சங்கீதா அருகிலுள்ள பாடசாலையில்தான் படிப்பிக்கிறாள். மீரா தாய் தகப்பன் கட்டித்தந்த வீட்டில் குடியிருக்கிறாள். சங்கீதாவும் அப்படித்தான். ஆனால் அயலில் நான்கு வீடுகள் தள்ளி.

மீராவுக்கு கணவன் மத்திய கிழக்கு நாடொன்றில் வேலை. இரண்டு வருஷங்களுக்கொருமுறை மூன்றுமாத லீவில் வருவான். இரண்டாம் வகுப்பும் நேஷறியுமாக இரண்டு பிள்ளைகள். பாரிசவாத நோயாளியான அம்மாவும், இவளோடுதான் இருக்கிறாள். அப்பா இப்போது உயிருடன் இல்லை.

சங்கீதாவின் கணவன் அஞ்சல் அலுவலகத்தில் சிற்றூழியர். இவளுக்கும் இரண்டு பிள்ளைகள்தான். ஒன்று எட்டாம் வகுப்பில் மற்றது ஆறாம் வகுப்பில். இவளுக்கு உதவிக்கும் ஒத்தாசைக்குமாக இவளுடைய கணவனின் அக்கா. இவளது வீட்டிலேயே இருக்கிறாள்.

இருவருமே காதலித்துக் கல்யாணம் செய்தவர்கள்தான். மாப்பிள்ளைகளுக்குத் தகுதி போதாது என்று நின்ற தாய் தகப்பனின் எதிர்ப்பின் மத்தியிலும் விடாப்பிடியாக நின்று பின்னர் அவர்களுடைய வலிந்த சம்மதத்துடன் சீதனபாதனம், நகைநட்டு வீடு என்றெல்லாம் வாங்கி முறைப்படி திருமணம் செய்த வித்துவாட்டிகள்.

இவர்களுடைய அண்ணனானவன் கனடாவிலிருக்கிறான். திருமணம் முடித்தவனாயிருந்தும் கூட மாதாந்தம் இருவருக்கும் தலா பதினையாயிரம் அனுப்பிக்கொண்டேயிருக்கிறான். தீபாவளி, தைப்பொங்கல், பிள்ளைகளின் பிறந்தநாட்கள் என்றால் தொகை கொஞ்சம் கூடும்.

அப்பா போய் மூன்று வருஷங்களாகிவிட்டன. அப்பா போன பெருந்துயரில் அடுத்த வருஷமே அம்மா பாரிச வாதத்தில் முடங்கிப்போய்விட்டாள். வயதான காலத்திலும் அப்படி அந்நியோன்னியமாக வாழ்ந்தவர்கள் அவர்கள்.

அப்பா இருந்திருந்தால் அம்மாவோடு மீரா இவ்வளவு கஷ்ரப்பட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. காலை எழுந்தால் காலிலை சில்லுப் பூட்டிக்கொண்டு வீடுவாசல் கூட்டி, பாத்திரங்கள் கழுவி, சாப்பாடு தயாரித்து, அம்மாவைக் குளிப்பாட்டி(மாலைக் குளிப்பு அம்மாவுக்கு ஒத்துவராது) படுக்கை சுத்தம் செய்து, சாப்பாடு மருந்து கொடுத்து, பிள்ளைகளைத் தயார்பண்ணி, பக்கத்து வீட்டுப் பரிமளம் அன்ரியைக் கூப்பிட்டு அம்மாவை இடைக்கிடை கவனியுங்கோ என்று சொல்லிக்கொண்டு ஒன்றை நேசறியில் விட்டுவிட்டு மற்றையதைத் தன்னோடு கூட்டிக்கொண்டோடிப் பாடசாலை போய்ச்சேரவும் அதிபர் மூஞ்சையை இறுக்கமாக வைத்திருப்பதும் ஏனைய ஆசிரியர்கள் இவளை ஒருமாதிரிப் பார்ப்பதும் நாளாந்த நிகழ்ச்சி நிரல்.

ஒரு வேலைக்காரியும் ஒரு மாதத்திற்குமேல்

நிலைத்து நிற்கவேயில்லையே. மீராதான் என்ன செய்வாள்.

இத்தனைக்கும் சங்கீதா நான்கு வீடு தள்ளியிருந்தாலும் வந்து அம்மாவுக்கு ஒரு சிறுபணி விடை செய்தது கிடையாது. வாரத்தில் ஒருமுறை ஒரு formality visit. அவ்வளவுதான். மீரா ஏதும் குறைப்பட்டுக் கொண்டால் வீட்டு வேலை அது இது என்று ஒரே சாக்குப்போக்கு. இத்தனைக்கும் சங்கீதாவின் பிள்ளைகள் ஓர் அளவிற்குத் தங்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்யக்கூடிய வயதில் இருப்பவர்கள்.

அன்று ஒருநாள் சனிக்கிழமை சங்கீதாவின் வாராந்த வருகையின்போது மீரா கேட்டாள்

"அக்கா நாளைக்கு நான் சங்கானைக்குப் போறன். மாமிக்கு நேற்று ஹேர்னியா ஒப்பிரேசன் நடந்ததாம். என்ரை இவர் இப்ப எடுத்துச் சொன்னவர். என்னையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய் தாயோடை ஒருநாள் நிண்டிட்டு வரட்டாம். அக்கா நீ வந்து நாளைக்கு மத்தியானத்திலையிருந்து அம்மாவோடை நில். நான் நாளையிண்டைக்கு மத்தியானத்திற்கிடையில் வந்திடுவன். திங்கள் ஒருநாள் மட்டும் நீயும் நானும் லீவு எடுக்கவேண்டியிருக்கும். என்ன சொல்லுறாய்?

"ஐயோ கடவுளே... என்னை உதைமட்டும் கேளாதை. எனக்கு வீட்டில் அசைய முடியாத வேலை. அதோடை கனநாள் நான் லீவு எடுத்தும்போட்டன். இப்ப லீவு எடுக்கேலாது. நீ ஏதோ சமாளி".

இந்தப் பதிலைக் கேட்டதும் மீராவுக்கு அழுகை வந்துவிட்டது.

முன்பு ஒரு ஞாயிற்றுக்கிழமை சங்கீதா வந்து இருந்தபோது அம்மாவுக்குத் திடீரென வயிற்றோட்டம் வந்துவிட்டது. சங்கீதாவை மீரா உதவிக்கு அழைத்தபோது அவள் முகத்தை இங்காலே திருப்பிக்கொண்டு குமட்டலுடன் தவிர்க்கமுடியாமல் உதவி செய்துவிட்டு ஓடியதும் மீராவால் மறக்கமுடியாத சங்கதிகள்.

இத்தனைக்கும் இருந்திட்டு ஒரு முறை ரெலிபோன் எடுக்கும் அண்ணா "இரண்டுபேரும் அம்மாவை ஒரு குறையுமில்லாமல் பார்க்கிறியள் தானே... என்ன..." என்று கேட்கும்போதெல்லாம் மீரா ஒருமுறைகூட அக்காவைப் போட்டுக்கொடுத்தது கிடையாது.

நினைவுகளிலிருந்து திரும்பிய மீரா "சரி இப்போதாவது தன்னை உணர்ந்து வந்து அம்மாவைப் பராமரிக்கிறா... அதுபோதும். எனக்கும் இனி கொஞ்சம் ஆறுதல்" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. ஒரு கிழமைக்கு வீட்டிற்கு தேவையான சாமான் சக்கட்டுக்களை வாங்கி வைப்பதற்காக மீரா தனது மோட்டார்சைக்கிளில் நெல்லியடிச் சந்தைக்குச் சென்றுகொண்டிருக்கிறாள். கொஞ்சத் தூரம் போக, தனது அக்காவின் மைத்துனி அதாவது அக்காவின் கணவனின் சகோதரியைக் கண்டதும் மரியாதைக்காக நின்று கதைக்கிறாள்.

"உங்களுக்கென்ன... இனி அண்ணன் வாற சந்தோஷம். அந்தச் சந்தோஷத்திலை அம்மாவுக்கும் கொஞ்சம் நோய் குறைஞ்சிடும்.



மீராவுக்கும் ஒன்றும் புரியவில்லை."அண்ணா வாற சந்தோஷமா... ஏன் அப்படிச் சொல்லுறியள்"

"என்ன மீரா... ஏன்... சங்கீதா இன்னும் உங்களுக்குச் சொல்லேல்லையா... உங்கடை அண்ணா இன்னும் இரண்டு கிழமையிலை ஊருக்கு வாறாரெல்லே. போன கிழமை எங்கடை பெரியண்ணாதான் இதைச் சொன்னவர். உங்கடை அண்ணாவிட்ட எங்களுக்கு Laptop ஒண்டு குடுத்து விடுகிறன் எண்டு. உங்கடை அண்ணா வாறது சங்கீதாவுக்குத் தெரியுந்தானே..."

மீராவுக்கு மனதில் திரையோடியது. அம்மாமீது அக்காவுக்குத் திடீரென வந்த பாசமும் கரிசனையும், செய்துகொண்டிருக்கிற பணிவிடைகளும்...!

# நேர்காணல்

ஈழத்தின் வடபுலத்தில் உள்ள இயக்கச்சி கிராமத்தில் பிறந்தவர் கருணாகரன். தற்பொழுது கிளிநொச்சியில் வசித்து வருகிறார். கவிஞராகவே ஈழத்து இலக்கியப் பரப்பில் அடையாளப்படுத்தப்பட்டவர். இருந்த போதிலும் ஒரு கதைசொல்லியாகவும், ஊடகவியலாளராகவும், தொடர் இலக்கியச் செயற்பாட்டாளராகவும், பதிப்பு முயற்சிகளில் ஈடுபடுகின்றவராகவும் பொது வெளியில் வெளிப்படுத்திருக்கின்றார். இவர் "வெளிச்சம்" கலை இலக்கிய இதழின் ஆசிரியராகவும் "காட்சி" ஊடகத்திலும் பணியாற்றியிருக்கிறார். 1980 களில் ஈழ விடுதலைப்போராட்டத்தில் தன்னை ஒரு போராளியாக இணைத்துக்கொண்ட கருணாகரன், விடுதலைப்போராட்டம் உச்சம் பெற்ற வேளையிலும், வீழ்ச்சி அடைந்த காலகட்டத்திலும் சமகாலத்தில் பயணித்த ஓர் போராளியாவார்.


இதுவரையில், "ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்", "ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்", "பலியாடு", "எதுவுமல்ல எதுவும்", "ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்", "நெருப்பின் உதிரம்", "இரத்தமாகிய இரவும் பகலுமுடைய நாள் - மற்றும் படுவான்கரைக்குறிப்புகள்" என்று ஏழு கவிதைத்தொகுதிகள் வெளியாகியுள்ளன. தவிர, "இப்படி ஒரு காலம்" என்ற கட்டுரைத் தொகுப்பும் "வேட்டைத்தோப்பு" சிறுகதைத் தொகுதியும் இவருடையவை.

சமூகவியலாளராகவும், அரசியல் ஆய்வாளராகவும் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் இயங்கி வரும் கருணாகரன், இலக்கியம், ஈழத்தின் சமகால அரசியல், சமூக நோக்கு போன்ற பல விடயங்களை "ஜீவநதி" வாசகர்களுக்காகப் பேசியிருக்கிறார்.

பலகட்ட மின்னஞ்சல் பரிவர்த்தனைகள் மூலம் இந்த நேர்காணல் செய்யப்பட்டது.

- கோமகன்





## "குரலற்றவரின் குரல்"

### நேர்காணல் - கருணாகரன்

**உங்களை எப்படியாக தெரிந்து கொள்வது?**

அவரவர் தாம் விரும்புகிற மாதிரியாக அளக்காமல். உண்மைகளின் வழியாக. வாழ்வை அறிந்து கொள்வதன்மூலமாக.

**இந்தப் பதிலை கவிஞர்களுக்கே உரிய ஞானக் கிறுக்காக எடுத்துக்கொள்ளலாமா?**

அப்படியல்ல. இது எல்லோருக்கும் பொதுவான - நியாயமான ஒன்றே. ஒருவரை அறிந்து கொள்வதும் மதிப்பிடுவதும் பொறுப்பு மிக்கமுறையில் இருப்பது அவசியம். ஆனால், தமிழ்ச் சூழலில் இது குறைவு. ஒருவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை தாங்கள் விரும்புகின்ற மாதிரியாகவே ஏற்றி வாசிக்கிறார்கள். ஒருவரை உன்னிப்பாகக் கவனிக்காமல், அவருடைய வாழ்க்கையை உணர்ந்து கொள்ளாமல், அவரைப்பற்றிப் பிறர் சொல்லும் வதந்திகளையும் தகவல்களையும் பகுத்தாராயாமல், அவருடைய நிலைப்பாட்டையும் நியாயத்தையும் புரிந்து கொள்ள முற்படாமல், மாற்றுக்கருத்துப் பற்றிய எண்ணமில்லாமல் தங்கள் நிலைப்பாடே 'சரி யென்று வாதிடும் போக்கு இது. இதைத் தலைமுறைகளின் வாய்ப்பாடாகத் தமிழ்ச்சாதி தொடருகிறது.

இது அதிகாரம். அநீதி. தவறு. இந்தத் தவறு, பிழையான இடத்துக்கே எல்லோரையும் வரலாற்றையும் கொண்டுபோய் விடும். பிழைகள் அந்தச் சமூகத்தை நிச்சயமாக அழித்தே தீரும். உய்விக்காது.


**ஆரம்பகால கட்டங்களில் ஓர் போராளியாக உங்களை இனங்காட்டிய நீங்கள், ஓர் கவிஞராகவும், கதைசொல்லியாகவும் வர வேண்டிய அழுத்தங்கள் எப்படி உருவாகின?**

அரசியல்வாதிகள் தங்களை இனங்காட்டுவதைப்போல, போராளியாக இனங்காட்டினேன் என்று சொல்வது சரியெனப்படவில்லை. போராளிகள் தங்களை முதன்மைப் படுத்துவதில்லை. அவர்கள் தவிர்க்க முடியாத ஒரு சூழலின் விளைவு அல்லது உருவாக்கம். நானும் அன்றிருந்த சூழலில் அப்படி உருவாகினேன் என்பதே சரி. அன்றைய சூழலின் விளைவும் நியாயமும் அது.

தவிர, வாசிப்புத்தான் எழுத்தில் ஆர்வத்தை உண்டாக்கியது. ஒன்றிலும் நேரடி அழுத்தம் இல்லை. ஆனால் ஆழ்ந்து யோசித்தால் எல்லாமே சமூக அழுத்தங்களின் விளைவுகள்தான் என்று தோன்றுகிறது.

**துப்பாக்கிகள் இருந்த பொழுது பேனைகளின் வீச்சு எப்படியாக இருந்தது?**

துப்பாக்கிகளுக்குப் பணிந்த பேனைகளும் உண்டு. பணியாத பேனைகளும் உண்டு. பணியாத போது தலைகள் போனதும் உண்டு.








**அப்படியானால் விடுதலைப்புலிகள் உச்சம் பெற்ற வேளையில் மட்டிறுத்தப்பட்ட ஜன நாயகப் பண்புகளையும் விழுமியங்களையும் கொண்ட பேனைகளே உச்சம் பெற்றிருந்தன என்பதை ஆமோதிக்கின்றீர்களா?**

இல்லை. உங்களுடைய கேள்வியும் சிந்தனையும் புலிகளை மட்டுமே சுற்றிக் கொண்டிருக்கிறது. அதனால்தான், இந்த மாதிரிக் கேள்விகள் வருகின்றன. "புதியதோர் உலகம்" நாவல் புலிகளுக்கப்பாலானது. அஸ்வகோஸின் "வனத்தின் அழைப்பு", ஒட்டமாவடி அரபாத்தின் "ஸ்டேஷன் மாஸ்ரர்", ஷோபாசக்தி, சக்கரவர்த்தி போன்றோரின் கதைகள், சேரனின் "எலும்புக் கூடுகளின் ஊர்வலம்" சுகன், கற்சுறா, தமயந்தி, அற்புதன், பானு பாரதி, சி. புஸ்பராஜா, சிவரமணி, செல்வி எனப் பலருடைய எழுத்துகள், முறிந்த பனை, செழியனின் வானத்தைப் பிளந்த கதை எல்லாம் முக்கியமானவையாக இருக்கின்றன.

இதைப்போல புலிகளின் பக்கத்திலிருந்து வந்த படைப்புகளும் உண்டு. குறிப்பாக அம்புலி, மலைமகள், வசந்தன், தமிழ்க்கவி, கோளாவிலூர் கிங்ஸ்லி, புதுவை இரத்தினதுரை, குணா கவியழகன், தமிழினி, கரும்பறவை, தூயவன், மலரவன், மருதம், சுதாமதி என்று அங்கும் ஒரு நீள் வரிசை உண்டு.

இது தவிர, இன்னொரு போக்கில் பா. அகிலன், நிலாந்தன், சித்தாந்தன், எஸ்போஸ், பிரதீபா, தான்யா, த. அகிலன், கருணை ரவி, திருக்கோவில் கவியுவன், திசேரா, அனார், பஹீமா ஜஹான், சோலைக்கிளி, நௌசாத், உமா வரதராஜன், இளையவன் எனப் பலருடைய எழுத்துகளைச் சொல்ல முடியும்.

**அதிகளவு ஜனநாயகப் பண்புகள் காயடிக்கப்பட்டது புலிகளின் காலம் என்பது வரலாறு. அதனாலேயே எனது கேள்வியும் சிந்தனையும் புலிகளைச் சுற்றியே வருவதில் தவறேதும் இல்லையே?**

அப்படிச் சொல்ல முடியாது. தமிழ் அரசியல் சூழலில் மட்டுமல்ல, இலக்கியம், பொதுவாழ்வு, ஊடகம், நிர்வாகம் போன்ற பலவற்றிலும் ஜனநாயகப் பண்புகள் காயடிக்கப்பட்ட ஒன்றே. புலிகளுக்கு முந்தியும் புலிகளுக்கு பிந்தியும் கூட இதுதான் நிலைமை. தமிழ்ச்சமூகத்தில் முறையான ஜனநாயகம் இருக்குமானால் சாதியமும் பிரதேசவாதமும் ஆணாதிக்கமும் இருக்குமா? ஜனநாயக மறுப்புச் செயல்கள் தொடருமா? ஏகப் பிரதிநிதித்துவக் கதையாடல்கள் நீளுமா?

கையில் ஆயுதம் வைத்திருக்கவில்லை என்பதற்காக ஒரு சமூகத்தில், அல்லது ஒரு மனிதரிடத்தில் ஜனநாயகம் தளைத்தோங்கியிருக்கிறது என்று பொருளில்லை. துரோகி - தியாகி போன்ற சொற்பிரயோகங்களும், ஏகத்துவ மனப்பாங்கும், எதையும் கறுப்பு - வெள்ளையாகவே பார்க்க முனையும் ஒற்றைப்படைத்தன்மையும் ஜனநாயக அடிப்படைகளுக்கும் வாழ்க்கைக்கும் முரணானவை.

தமிழ்ப்பொதுமனம் என்பது பெருமளவுக்கும் ஜனநாயகப் பண்புகளை மறுக்கும் விதமாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழ்ச்சமூகமே ஜனநாயக விரோதச் சமூகம்தான். குடும்பத்திற்குள்ளிருந்து பொதுவெளிவரை பல அடுக்குகளில், பல நிலைகள் இதைப் பார்க்க முடியும். ஆகவே, ஒரு தரப்பை மட்டும் குற்றம் சாட்டுவது நியாயமில்லை. புலிகள் தமிழ்ச்சமூகத்தின் விளைபொருள். அதனால்தான் அவர்களைத் தங்களுடன் நெருக்கமாக தமிழர்கள் அடையாளம் காண்கிறார்கள்.

**'புதியதோர் உலகம்' மற்றும் 'முறிந்த பனைகள்' என்று எழுதிய பேனைகள் புலிகளுக்கப்பால் வந்திருந்தபோதிலும் அவைகளின் முனைகள் முறிக்கப்பட்டன. ஆனால் புலிகள் உச்சம் பெற்ற வேளையில் ஜனநாயக பண்புகள் என்றால் என்னவிலை என்று கேட்க வேண்டியிருந்ததே?**

உண்மை. ஆனால், ஜனநாயக மறுப்பை புலிகள் மட்டுமல்ல, ஏனைய இயக்கங்களும் தரப்புகளும் தமக்குள் கொண்டிருந்தன. புளொட் வதைமுகாமாகியதன் வெளிப்பாடே "புதியதோர் உலகம்", "தீப்பொறி" இன்ன பிற. ரெலோவுக்குள் நிகழ்ந்த உள் வெடிப்புகளும் - ஜனநாயக மறுப்புகளுமே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடந்த மோதலும் மற்றும் தாஸ் அணியின் கொலையும். ஈ.பி.ஆர்.எல்.எவ் புக்குள் நடந்த உள் முரண்பாடுகளும் ஜனநாயக நெருக்கடியுமே அது பல அணிகளாகப் பிரிந்ததும் பலர் ஒதுங்கியதும் ஒதுக்கப்பட்டதும். ஈரோசுக்குள் நிகழ்ந்த ஜனநாயகப் பிரச்சினைகளே பவானந்தன் போன்றவர்களை நியாயமற்று வெளியேற்றியதும் உள் முரண்பாடுகளில் அது நலிவுற்றதும் பின்னாளில் அந்த அமைப்பு அடையாளமே தெரியாமல் போனதும்.

எதிர் இயக்கங்களுக்கு மட்டுமல்ல, தன்னுடைய இயக்கத்துக்கே - தானிருந்த அமைப்புக்கே - பயந்து பயந்து வாழவேண்டியிருந்த நிலை எல்லா இயக்கத்தின் போராளிகளுக்கும் இருந்திருக்கிறது. சகபோராளிக்கு இன்னொரு போராளி அச்சப்படுவதும் சக போராளியாலேயே இன்னொரு போராளி கொல்லப்படுவதும் வதைக்கப்படுவதும் நடக்கவில்லையா?

அரச படைகள் உண்டாக்கியதற்கு நிகரான பயங்கர உணர்வை எல்லா இயக்கங்களும் ஏற்படுத்தியதுண்டு. இந்த ஜனநாயக மறுப்புக்காகப் போராடி மடிந்த, ஓரங்கட்டப்பட்ட போராளிகள் பலர். இப்படியெல்லாம் நடந்தபடியால்தானே நாம் வெற்றியடைய முடியாமலும் விடுதலையைப் பெற முடியாமலும் போனோம். இதில் எவரும் தாங்கள் சுத்தம் என்று சொல்ல முடியாது.

மேலும் நீங்கள் இந்த இடத்தில் ஒன்றைப் புரிந்து கொள்வது அவசியம். ரெலோ மீதான புலிகளின் தாக்குதல் நடந்து சில மாதங்களில் பிரபாகரன் சுதுமலை அம்மன்கோயிலின் முன்பாக உரையாற்ற வந்தபோது 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடினார்களே. இது எப்படி? புலிகள் மீது சுமத்தப்படும் எல்லாவகையான குற்றச்சாட்டுகளின் மத்தியிலும் அவர்களுக்கே அதிக ஆதரவு அலை உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் உள்ள தமிழர்களிடத்தில் இருந்தது.

இன்னும் இருக்கிறது. இது ஏன்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் கண்டறியும்போது பல விடயங்கள் தெளிவாகும். தமிழ்ச்சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்தக் கேள்விகளுக்கான விடை பெரிதும் உதவும்.

தவிர, இயக்கங்களில் மட்டுந்தான் இத்தகைய ஜனநாயக விரோதப்போக்கு இருந்தது என்றில்லை. முன்னரே குறிப்பிட்டிருப்பதைப்போல அரசியற் கட்சிகள், அரசியலாளர்கள், ஊடகங்கள், இலக்கியப் படைப்பாளிகளிடையே, மக்களிடத்தில் எனப் பல இடங்களிலும் இது தாராளமாக உண்டு. தமிழ்ச் சமூகமே ஜனநாயகத்துக்கு மாறான ஒன்றுதான்.

**ஏறத்தாழ 27 நாடுகள் நேரடியாக அல்லது மறைமுகமாக பங்காளிகளாகி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தமிழரின் தாயக விடுதலைப் போராட்டமானது மீண்டும் ஐந்தாம் கட்ட ஈழப்போராக என்றோ ஓர் நாள் உருவாகும் என்று சொல்வோர் பற்றி என்ன சொல்கின்றீர்கள் ?**

கற்பனைக்கு எல்லையில்லை. அல்லது யாவும் கற்பனை.

தவிர, நீங்கள் குறிப்பிடும் இந்தச் சக்திகளால் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. ஒடுக்கப்படும் மக்களுக்கான நியாயத்தை தீர்வை வழங்காமல் எவரும் ஒரு போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. போரும் புலிகள் இயக்கமும்தான் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. போராட்டம் வேறு நிலையில் வேறு வடிவங்களில் தொடரும். ஏனென்றால் அதனுடைய அடிப்படை நீதிக்கானது. உரிமைகளுக்கானது. நியாயமான மனித இருப்புக்கானது. ஆனால் அந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான திறப்பாளிகளும் திறப்புகளும் இப்போதில்லை.

**ஓர் தேசிய இனத்தின் விடுதலைப்போராட்ட உணர்வானது எப்படி 'யாவும் கற்பனை ' யாக இருக்க முடியும் ?**

செயலுக்குத் துணியாத எதுவும் கற்பனையின் கோடுகளைத் தாண்டுவதில்லை. யதார்த்தத்திற்கு பொருந்தாதவை நடைமுறைக்கு ஏற்றவையல்ல. இதை நீங்கள் இனத்தின் உணர்வை நிராகரிப்பதாகக் கொள்ள வேண்டியதில்லை. அந்த உணர்வை மெய்யாகவே மதிப்பதாக இருந்தால், அதற்கிணையாகச் செயற்பட வேண்டும். அதற்கான விலைகளையும் கொடுக்கத் துணிய வேணும். "வாய்ப்பேச்சினால் வைகுண்டம் போக முடியாது." கற்பனைக் குதிரைகள் ஓடுவதுமில்லை, களைப்பதுமில்லை. இலக்கை எட்டுவதுமில்லை.

**முள்ளிவாய்க்கால் பேரவலம் நடைபெற்று ஏழு ஆண்டுகள் கடந்த பொழுதும் பாதிக்கப்பட்ட சனங்களுக்காக சில கண்துடைப்புகளை செய்துவிட்டு செய்யவேண்டிய பல வேலைகள் கிடப்பில் கிடக்க 'தேசியப்பொங்கல்' என்ற பெயரில் மாயவித்தை காட்டும் நல்லரசுக்கு ஒத்தூதும் தமிழ் அரசியல் தலைமைகள் பற்றி என்ன சொல்கின்றீர்கள்?**

சொல்வதற்கு ஒன்றுமில்லை. அப்படிச் சொல்வதாக இருந்தால் "தமிழ் மக்களுக்குப் பொருத்தமான தலைமைகள்." என்பேன். ஏனென்றால், எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே எல்லோரும் (சனங்களும் அவர்களுடைய தலைவர்களும்) இருக்கிறார்கள். அல்லது பாசாங்கு செய்கிறார்கள். எல்லோருக்கும் உண்மைகள் தெரியும். நிலைமைகளும் புரியும்.

ஆனால், தாங்கள் அறிந்த உண்மைகளின் வழி நடப்பதற்குத் துணிச்சல் இல்லை. இதுதான் பேரவலம். பிறர் தங்களைப்பற்றி எப்படியெல்லாம் நினைப்பார்களோ என்ற தயக்கத்தினாலும் அச்சத்தினாலும்தான் பலரும் தவறான முடிவுகளை எடுத்துப் பிழையான தெரிவுகளைச் செய்கிறார்கள். இது தொடரும் தவறுகளுக்குக் காரணமாகிறது.

அரசாங்கத்தை விடுங்கள். எந்த அரசாங்கம் வந்தாலும் அதில் குறைகளும் கறைகளும் இருக்கும் என்ற அபிப்பிராயத்தை ஒருபக்கம் வைத்துக் கொண்டு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு இதுவரையில் தமிழ்த்தரப்புகளும் உலகெங்குமுள்ள தமிழர்களும் முறைப்படுத்தப்பட்ட நிலையில் என்ன விதமாகப் பங்களித்திருக்கிறார்கள்? அந்தப் பங்களிப்பு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மைகள் எதையாவது தந்திருக்கிறதா ? என்றால், எதுவுமே இல்லை. இதைப்பற்றி மக்களுக்கும் கவலையில்லை. தலைமைகளுக்கும் கவலையில்லை. கவலைப்படாத மக்களும் கரிசனையில்லாத தலைமைகளும் ஒன்றுதான். ஒன்றுக்குள் ஒன்றுதான்.

**இந்த அரசியல் தலைமைகள் விடும் தவறுகளுக்காக எப்படி தமிழ் மக்களை குறை சொல்ல முடியும் ?**

தமது தவறுகளையும் செயலின்மைகளையும் தமிழ் மக்கள் பொறுத்துக்கொள்வார்கள், பெரிதுபடுத்திக் கொள்ள மாட்டார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை தலைமைகளுக்குக் கொடுத்தது யார் ? மக்கள்தானே ! மக்கள் சரியாக இருந்தால் தலைமைகளால் தவறுகளைச் செய்ய முடியுமா ? தவறு செய்யும் தலைமைகளை நிராகரித்தால், நிமிர்ந்து கேள்விகள் கேட்டால், கூராக விமர்சனங்களைச் செய்தால், அவர்கள் தொடர்ந்து தவறுகளைச் செய்வதில் இருந்து தடுக்க முடியும்.

தவறு செய்வோரையும் செயலில்லாமல் வாய்ப்பேச்சு வீரர்களையும் தமிழர்கள் நிராகரிக்காதிருப்பது ஏன் ? இந்தத் தலைமைகளை நோக்கிக் குறைந்த பட்சம் கேள்விகளையேனும் எழுப்பாதிருப்பது எதற்காக ?

இயக்கங்களிடம் துவக்கிருந்ததால் எதிர்த்துக் கேள்விகளை எழுப்ப முடியவில்லை என்று வைத்துக் கொள்ளலாம். அரசியற் கட்சிகளிடம் கேள்வி கேட்க முடியாதா?

"தலைமைகளைக் கேள்விக்குட்படுத்துவதும் விமர்சிப்பதும் எதிரிக்கு வாய்ப்பாகி விடும். ஒற்றுமையைக் குலைத்துவிடும்" என்ற மோசமான - தப்பித்தலுக்கான கற்பிதம் தமிழ்ச்சூழலில் உண்டு. இந்த எண்ணம் பேரழிவின் வழிப்பாதையாகும்

**வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை ஓர் காலகட்டத்தில் வலியுறுத்திய நாங்கள், இன்று அது எதுவித அதிகாரங்களுமற்ற வடக்கு மாகாணசபை என்ற பெயரளவில் வந்து நிற்கிறோம். கால ஓட்டத்தைக் கூட்டிக்கழித்துப் பார்த்தால் இதற்காகவா எமது சனங்கள் 30 வருட காலத்தை விரயம் செய்தார்கள்?**

"பட்டபின் சுட்ட ஞானம்". "மக்களுக்கானதை நாமே தீர்மானிப்போம்" என்ற அதிகாரச் சக்திகளிடம் தங்களுடைய தலைகளைக் கொடுத்ததன் விளைவு இது.

இன்னும் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பைப்பற்றிப் பேசப்படுகிறது. அப்படியென்றால் வடக்கு - கிழக்கு எனத்தனித்தனியாக பிரிக்கப்பட்ட மாகாண சபைகளில் ஏன் இவர்கள் போட்டியிட்டனர் ? சட்டரீதியாக அதை ஏற்றுக்கொண்டபடியால்தானே ! பதிலாக "வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபையில்தான் போட்டியிட முடியும். அதையே ஏற்க முடியும்" என்று வலியுறுத்தியிருக்க வேண்டும்.

இப்பொழுது தமிழ் மக்களுக்கான தீர்வு யோசனைகளையும் அரசியற் சாசனத்தைத் திருத்துவதற்கான எண்ணங்களையும் வடக்கு மாகாணசபை தனித்தே கொடுத்துள்ளது. இதைக்கூட வடக்கும் கிழக்கும் இணைந்து உருவாக்க முடியவில்லை. சம்பிரதாயமாகக் கூட ஒரு முயற்சியை இரண்டு மாகாணசபைகளும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்று சிந்திக்கவில்லை. இதுதான் யதார்த்தம்.

தவிர, எதுவித அதிகாரங்களுமற்ற மாகாணசபை என்றால், எதற்காக இத்தனை போட்டிகள்? எதற்காக வாக்களிப்பு? எதற்காக முதலமைச்சர்? எதற்காக அமைச்சுகள்? எதற்காக அந்த நிர்வாக இயக்கம்? எதற்காக அதை நம்பியிருத்தல்? எதற்காக விவாதங்களும் தீர்மானங்களும் ?

ஆனால், மாகாணசபை என்பது அத்தியாவசிய சேவைகளின் அமைப்பு. கல்வி, மருத்துவம், விவசாயம், கூட்டுறவு, கடற்றொழில், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, சிறுகைத்தொழில், சமூக சேவைகள் இப்படிப் பல அத்தியாவசிய தேவைகளின் - சேவைகளின் அமைப்பு. ஆகவே இவற்றுடன் பொறுப்பற்று விளையாட முடியாது. அப்படி விளையாடினால் அந்த நிர்வாகத்துக்குட்பட்ட சமூகம் சீரழிந்து விடும். ஏறக்குறைய அப்படியான ஒரு அபாயநிலைதான் இப்பொழுதுள்ளது.

மேலதிக அதிகாரங்கள் தேவை என்பது உண்மை. அதற்காக இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் இருந்து விட முடியுமா? தவிர, இவர்கள் "மலர்ந்தது தமிழர் அரசு" என்று பெருமையுடன் பங்கேற்றிருக்கும் மாகாண சபையைப் பற்றித்தான் சொல்கிறேன்.

இனி வரும் காலத்தில் இதையும் விட மோசமான ஒன்றுக்கும் கீழிறங்க வேண்டியிருக்கும். அதைத் தடுப்பது மக்களின் கைகளில்தான் உள்ளது.

**இதன்மூலம் அப்பொழுது விடுதலைப்புலிகள் எடுத்திருந்த நிலைப்பாட்டை முற்றுமுழுதாக மறுதலிக்கின்றீர்களா ?**

புலிகள் வேறு விதமாகச் சிந்தித்தார்கள். அதை எட்டுவதற்காக செயற்பட்டார்கள் - போராடினார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள் எந்தவிதமாக சிந்தித்தார்கள் ?**

தனிநாட்டை - தமிழீழத்தை.

**அது இறுதிவரையில் கிடைத்ததா ? அதிலும் சனங்கள்தானே அடிமுட்டாள்கள் ஆக்கப்பட்டார்கள்?**

புலிகள் வலியுறுத்திய தமிழீழம் மட்டுமல்ல, பிற தரப்புகள் சொன்ன எதுவும் கூட தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை. என்றபோதும் இவர்களெல்லாம் சாவதற்குப் பந்தயம் கேட்கிறார்கள். நாமென்ன செய்ய முடியும்?

படித்த சமூகம் என்று சொல்லப்படும், பெருமை கொண்டாடும் ஒரு சமூகத்திற்கு இவ்வாறான அவலம் எப்படி ஏற்பட்டது ? இன்னும் ஒரு சரியான செல்வழியைக் கண்டறிய முடியாமல் அது தத்தளிப்பதேன்? இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகும், இத்தனை பெரிய தியாகங்களுக்குப் பின்னரும் இவ்வளவு பெரிய இழப்புகளுக்குப் பின்பும் தோல்வியின் அடிவாரத்திற் குந்திக்கொண்டிருப்பது ஏன்?

சொந்த அனுபவத்திலிருந்தும் வரலாற்றிலிருந்தும் எதையும் கற்றுணர விரும்பாதவர்கள் தமிழர்கள். எதையும் கற்றுணர முடியாதவர்கள், அடிமுட்டாள்களாகத்தான் இருக்க வேணும். வரலாறு அப்படித்தான் விதிக்கும்.

ஆனால், குறைபாடுகள் இருந்தாலும் ஒப்பீட்டளவில் பிற சமூகங்களான மலைய மக்களும் முஸ்லிம்களும் தமிழர்களை விட மேம்பட்டுள்ளனர். இலங்கை அரசியலைப் பற்றிய புரிதலும் யதார்த்த நிலையைப் பற்றிய அறிவும் தங்களுடைய சமூகத்தினரின் எதிர்காலம் பற்றிய கரிசனையும் இந்தத் தலைமைகளுக்கு இருந்ததன் விளைவே அவர்களுடைய முன்னேற்றம். தமிழர்கள் உலகம் முழுக்கச் சிறகை விரித்திருந் தாலும் மனரீதியாகத் தங்களைச் சுற்றி எழுப்பிய சுவருக்குள் சிறைப்பட்டிருக்கிறார்கள். அதை முதலில் தகர்க்க வேண்டும்.

**தமிழர்களின் சுயாட்சி தேசியக் கோட்பாடுகளை மறுதலிக்கும் விடயத்தில் இலங்கையின் இரண்டு இனவாதக்கட்சிகளும் ஓரணியில் நிற்கும் பொழுது. தமிழர் தரப்பில் பல்வேறுபட்ட ஒலிகள் மிகுந்து காணப்படுவது எதற்காக ?**

பொதுவாகவே இலங்கையின் அரசியற் சூழல் இனவாத மயப்பட்ட ஒன்றுதான். இன்வாதத்தை அடிப்படையாகக் கொண்டே அத்தனை சக்திகளும் கட்சிகளும் இயங்குகின்றன. இனவாதத்திற்குப் பலியாகிக்கொண்டே இனவாதத்தை வளர்க்கின்றன ஒவ்வொன்றும். இல்லையென்றால் எப்படித் தமிழ்க்கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், சிங்களக்கட்சிகள் என்று வரமுடியும் ?

தவிர, இனவாதத்தில் மட்டுமல்ல, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நாட்டின் ஜனநாயகச் சூழலைப் பேணுவது என்பவற்றிலும் இரண்டு கட்சிகளுக்கிடையிலும் பெரிய வேறுபாடுகள் கிடையாது.

மறுவளத்தில் "இனவாதத்திற்கு எதிராக" என்று இனவாதத்தில் நின்று கொண்டு அதிகமதிகம் தமிழர் ஒற்றுமையைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருப்பவர்களும் அதற்காகக் கூச்சல் போட்டுக்கொண்டே இருப்பவர்களும் தமிழர்களே. இந்த ஒற்றுமைக் கோசத்தை வைத்து அதிகமாகப் பிழைத்துக் கொள்வோரும் தமிழர்களே. ஒற்றுமை வேண்டும் என்று மக்களுக்குச் சொல்லிக் கொண்டு, மறுவளமாக தங்களுக்குள் உட்குத்துகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களும் தமிழர்களே. அதாவது தமிழ்த்தலைமைகளே. இதில் எங்கே ஒற்றுமை உண்டு என்று நீங்கள்தான் சொல்ல வேணும். எது உண்மை எது பொய் என்றும் கூட.

**பௌத்த மதமும் அதனை அடியொற்றிய சனங்களும் முதன்மைப் படுத்தப்பட்ட இலங்கையின் அரசியல் யாப்பில் புதிய மாற்றங்கள் என்பது தமிழர்களுக்கு எந்த வகையில் அனுகூலமாக இருக்கப் போகின்றது?**

இந்தக் கேள்விகளும் சந்தேகங்களும் பலரிடமும் உண்டு. அதில் நியாயமும் உண்டு. புதிய அரசியல் அமைப்பு எப்படி அமையும் என்பதைப்பற்றி எவரிடத்திலும் எந்தத் தெளிவும் இல்லை. புதிய யாப்பு எந்த அடிப்படையில் அமையும் என்று தெரியாத நிலையில், அதற்கான பெயரற்ற முறையில், ஏதோவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், புதிய அரசியற் சாசனத்தை உருவாக்குவதில் சிங்களவர்களுக்கு அப்பால் உள்ள பிற சமூகத்தினரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மலையகச் சமூகத்தில் உச்சகட்ட விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களிடத்திலும் பரவலான உரையாடல்களும் விவாதங்களும் நடக்கின்றன. தமிழ்த்தரப்பிலும் நிறைய உரையாடல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அதிகப்படியான இழுபறிகள் தமிழ்த்தரப்பிற்குள்தான் உள்ளது.

நீடித்து வரும் பிணக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, புதிய உருவாக்கங்களுக்கு வழியென்ன? இதற்கு மாற்று என்ன? என்று கண்டுபிடிக்க வேண்டாமா ? காலம்

முழுவதும் இப்படியே எல்லாத் தரப்பையும் குற்றம் சாட்டுவதிலும் சந்தேகிப்பதிலும் கழிந்து போக முடியுமா?

சிங்களத்தரப்பு இனவாதத்தையே அரசியல் முதலீடாக்கியுள்ளது என்பது உண்மையே. இதற்குப் போட்டியாகத் தமிழ்த்தரப்பும் இனவாதத்தைக் கையில் எடுப்பதுதான் தீர்வாகுமா ? இந்தப்போக்கு நிச்சயமாகப் பகையைத்தான் வளர்க்கும். பகையின் விளைவுகள் பயங்கர மானவை.

நல்லவை, நன்மையானவை எதுவுமே நடக்காது என்ற வாதங்களும் ஊகங்களும் பயனற்றவை மட்டுமல்ல, தீங்கானவையும் கூட.

இது அறிவின் யுகம். அறிவினாலும் மாண்பினாலும் எதையும் சாதிக்க முடியும். அறிவினால் உள்நாட்டிலும் வெளியரங்கிலும் தமிழ்பேசும் மக்களுக்குச் சாதகமான நிலைகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதன்மூலம் புதிய அரசியலமைப்பை தமக்குப் பாதகமில்லாமல் வகுத்துக்கொள்ள முடியும்.. அப்படியே இனவாதத்தை நீர்த்துப் போகச் செய்யவும் வேணும். இதற்கெல்லாம் தமிழ் பேசும் மக்களின் நுண்ணறிவும் இராசதந்திரமும் கூட்டுழைப் பும் முக்கிய பங்கைச் செய்ய வேண்டியது அவசியம்.

**எல்லாம் வெறும் ஊகங்கள் என்று எதன் அடிப்படையில் சொல்கின்றீர்கள் ?**

அரசியலில் மட்டுமல்ல பல எளிய விடயங்களிலும் தமிழ்ப்பொது மனவெளி ஊகங்களால்தான் நிரம்பிக் கிடக்கிறது. அது அப்படித்தான் கட்டமைக்கப்பட்டு முள்ளது. அதிலும் தவறான ஊகங்களின் சிடுக்கில். அதனால்தான் அது எல்லாவற்றையும் தவறாகவே கற்பிதம் செய்கிறது.

**சரி இவ்வாறு சொல்கின்றீர்கள். உங்களைப்பொறுத்தவரையில் மாற்றப் படப்போகும் அரசியல் சாசனமானது எப்படியாக இருக்கவேண்டும் என எண்ணுகின்றீர்கள் ?**

பல்லின சமூகங்களுக்கும் உரிய மாதிரி - பல்லினத் தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும். அனைத்து உரிமைகளையும் சமநிலைப்படுத்தும் பண்பைக் கொண்டிருக்க வேணும். பாதிக்கப்பட்ட, புறக்கணிக்கப் பட்ட மக்களுக்கு நீதியளிக்கும் வகையிலும் அவர்களுடைய நம்பிக்கையை பலப்படுத்தும் வகையிலும்.

சட்டரீதியான பாதுகாப்பு உத்தரவாதங்களை ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு மனிதரும் பெறத்தக்கதாக. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற விகித வேறுபாடுகளோ, மத அடையாள முதன்மைப்பாடுகளோ செல்வாக்கைச் செலுத்த முடியாத நீதியின் பாற்பட்டதாக. அறிவுக்கும் ஜனநாயகத்துக்கும் கட்டுப்பட்டதாக.

**அண்மையில் உருவாகிய தமிழ் மக்கள் பேரவையை எப்படியாகப் பார்க்கின்றீர்கள்?**

இன்னொரு வேடிக்கை என்று.

**தமிழ் மக்கள் பேரவையை நீங்கள் எப்படி 'வேடிக்கை' என்று சொல்ல முடியும்?**

தமிழ் மக்கள் பேரவை மட்டுமல்ல, எல்லாக்கட்சி களும் அமைப்புகளும் அப்படித்தான் உள்ளன. வாலிபர் காங்கிரஸ் போதாதென்று, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். அது திருப்தியில்லை என்று அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி. அதனால் இயலாதென்று தமிழரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி. அதனால் முடியாதென்று விடுதலை இயக்கங்கள்.

இயக்கங்கள் ஐக்கியப்பட வேணும் என்று புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ இணைந்து, ஈழதேசிய விடுதலை முன்னணி. பிறகு தனியாகப் புலிகள். பிறகு தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இணைந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மறுவளத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி. இப்பொழுது தமிழ் மக்கள் பேரவை. இதைத் தவிர, இவற்றுக்கிடையில் தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை உள்பட இன்னும் பல அமைப்புகளும் இயக்கங்களும் கட்சிகளும்.

இப்படி ஒவ்வொரு தரப்பும் புதிது புதிதாக வரும்போது முன்னர் இருந்தவற்றின் மீதான விமர்சனங்களை முன்வைப்பதும் அவற்றைக் குற்றம் சாட்டுவதும் வழமை. புதிதாக வரும்போது ஒரு வகையான உற்சாகத்தோடு புதிய பிரகடனங்களைச் செய்வதும் வழமையே. ஆனால், காலப்போக்கில் இதுவும் பழைய சங்கதியாகிப் புளித்து விடும். அப்படித்தான் நடந்துமிருக்கின்றது.

அதற்காக "நீங்கள் இப்படி அவசரப்பட்டு, எல்லா அமைப்புகளையும் போல பேரவையும் ஊகநிலைப்பட்டு இப்படிச் சொல்லலாமா" என்று கேட்கலாம். செயலூக்கமும் அர்ப்பணிப்பும் பன்மைத்திறனும் அடிநிலை மக்களுடனான உறவும் உள்ளவர்களிடமே நம்பிக்கை வைக்க முடியும். அத்தகைய செயலூக்கத்தை பேரவை நிரூபித்தால் அதைப் பற்றி யோசிக்கலாம்.

தரப்புகளும் தலைமைகளும் புதிது புதிதாக வருவதும் வெற்றியடைவதும் முக்கியமல்ல. மக்கள் வெற்றியடைய வேணும். அவர்களுடைய பிரச்சினைகள் தீர வேணும். அதுவே முக்கியம்.

**அடிநிலை மக்களுடனான உறவுள்ளவர்களிடமே நம்பிக்கை வைக்க முடியும் என்று சொல்கின்றீர்கள். தமிழ் மக்கள் பேரவைக்கு அப்படியான தகுதிகள் இல்லையா ?**

தமிழ் மக்கள் பேரவை மட்டுமல்ல, ஏனைய தமிழ்த் தரப்புகளுக்கும் இது பொருந்தும். தமிழ்ப்பிரதேசங்களில் இடைவிலகும் பாடசாலை மாணவர்களின் தொகை பெருகிச் செல்கிறது. ஆதரவற்ற சிறார்களுக்கான இல்லங்கள் பிரமாண்டமாக வளர்கின்றன. அவை இன்று வணிக மையங் களாக மாறியுமுள்ளன. சிறார்களை வைத்துப் பிழைக்கும் நிலையங்களாக. சிறார் பிரச்சினைக்குத் தீர்வு சிறார் இல்லங்களை உருவாக்குவதா ?

யுத்தத்தால் மிகப் பெரிய இழப்புகளைச் சந்தித்தவர்கள் மீள முடியாமல் இன்னும் தவிக்கிறார்கள். உளச்சிதைவுக்குள்ளாகி தினமும் நூற்றுக்கணக்கானவர்கள், உளவளத்துணை நிலையங்களுக்குச் செல்கிறார்கள். பெரும் பாலானவர்கள் பெண்கள். இப்படிப் பெருகி வருவோரைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறவேண்டியிருக்கிறது என உளவளத்துணை நிலையத்தினரும் துறை மருத்துவர்களும் கவலையோடு சொல்கிறார்கள். ஆண்துணை இழந்த நிலையில் இளைய பெண்கள் வாழ்க்கையின் பல்வேறு நெருக்கடி களுக்குள்ளாகியிருக்கிறார்கள். இதெல்லாம் ஒரு சமூகத்திற்கு ஆரோக்கியமா ?

யுத்தம் முடிந்து ஏழு ஆண்டுகள் முடிகின்றன. இதற்குள் மக்கள் மீள் நிலைக்குத் திரும்பியிருக்க வேணும். ஆனால், அப்படி நடக்கவில்லை. பொதுவெளியை அரசியல்

உரையாடல்களால் நிரப்புவோர் சனங்களின் துயரைப் பொருட்படுத்துவதில்லை. அது அவர்களுக்குத் தெரிவதும் இல்லை. அவர்களுடைய வாழ்க்கை வேறு (மேல்)தளங்களில் நிலைகொண்டுள்ளது. எளிய சனங்களின் வாழ்க்கை கீழ் நோக்கி, துயர்க்கொடிகளில் சிக்கியிருக்கிறது.

இந்த நிலையில் இதற்குப் பொறுப்பாக இருக்கின்ற - பொறுப்பெடுக்க விரும்புகின்ற தரப்புகளின் மீது விமர்சனங்களும் கேள்விகளும் இருக்கும்.

இதை விட அரசியல் ரீதியாக இவர்கள் எதைச் சாதிக்கப்போகிறார்கள்? அதற்கான வழிமுறையென்ன? செயற்திட்டம் என்ன?



**ஈழத்திலே உள்ள அனைத்து தரப்புப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி தலைவர் உபதலைவர் என்று பல்வேறுபட்ட படிநிலைகளை கொண்டு உருவாக்கப்பட்ட. சமகால தமிழர் தேசியக்கூட்டமைப்புக்கு மாற்றாக உருவாக்கப்பட்டதுதானே தமிழ் மக்கள் பேரவை?**

நீங்கள் பிரமுகர்களைப் பற்றிக் கதைக்கிறீர்கள். நான் சாதாரணர்களைப் பற்றிச் சிந்திக்கிறேன். தவிர, இன்னும் "தமிழ் மக்கள் பேரவை" அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கவில்லை. ஒத்த சிந்தனைப்போக்குடையவர்களே இதுவரையில் ஒன்றிணைந்திருக்கின்றனர். பேரவை புதிதாகச் சிந்தித்தால், அடிமட்டத்திலிருந்து சிந்திக்குமாக இருந்தால், அப்படிக் கட்டமைக்கப்படுமாக இருந்தால் சிறப்பு. அதாவது புதிய அமைப்பொன்றின் உருவாக்கம் என்பது ஏனையவற்றின் குறைபாடுகளைக் களைவதாகவும் புதிய சாத்தியங்களை உண்டாக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பழைய கலவையாக இருக்க முடியாது.

**அரசியல் பத்தி ஆய்வாளர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் சாதாரணர்களைப் பற்றி சிந்திக்கின்றார்கள்தானே?**

அப்படி எழுதப்படும் பத்திகளைப் பற்றிச் சொல்லுங்கள். அல்லது அப்படியான ஆய்வாளர்களைக் குறிப்பிடுங்கள், அறியலாம். எல்லோரும் அரசியலை மட்டுமே எழுதி "மயிர்" பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஈடேற்ற முடியாத அரசியலை. சனங்களோ நாளாந்த வாழ்வில் உயிர்போகும் பிரச்சினைகளால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சமூகவியலைப்பற்றி, சமூக நிலையைப்பற்றி, சனங்களின் வாழ்க்கைச் சவால்களைப்பற்றி யார் எழுதுகிறார்கள்? அப்படி எழுதினால் அரசியற் தலைமைகளுக்கு அழுத்தம் ஏற்பட்டிருக்கும். ஆனால், அது நடக்கவில்லை. இது சனங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு. அநீதி. நிச்சயமாக அவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மற்றது தன்னார்வ அமைப்புகளின் உதவிப்பணிகளும் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் பணியும் தற்காலிக "தண்ணீர்ப்பந்தல்" என்ற அளவில்தான். அதற்கு அப்பால் எதுவுமே இல்லை. அவை சனங்களை ஈடேற்றவில்லை. அப்படி ஈடேற்றியிருந்தால் அதை யாராவது குறிபிடட்டும்.

யுத்தத்திற்குப் பிந்திய இந்த ஏழு ஆண்டுகளில் இலங்கையின் பிற இடங்களை விட வடக்கிலும் கிழக்கிலும் தான் அதிகளவு நிதியை தொண்டர் அமைப்புகள் செலவிட்டிருக்கின்றன. மட்டுமல்ல, பெரிய தொகுதி ஆளணியும் பிற வளங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அரச நிதியும் அதிகளவில் இந்தப் பிராந்தியத்தில் (மக்களுக்காக ?) செலவழிக்கப்பட்டுள்ளது.

விளைவு ?

இதைப்பற்றிய மதிப்பீட்டை யாராவது செய்தார்களா? இவ்வளவு பணமும் வளமும் செலவழிக்கப்பட்ட பின்னும் மக்கள் இன்னும் வறுமையில் இருப்பதற்கான காரணம் என்ன? என்று எவரும் ஆராயவில்லை. இதைப்பற்றிய கரிசனையைக் கொள்ள வேண்டிய அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? இதைப் பற்றி எத்தனை ஆய்வாளர்கள் கருத்திற் கொண்டுள்ளனர்? குறைந்த பட்சம் பல்கலைக்கழகங்களின் சமூகவியல், அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டுத்துறை போன்றவை கூட இவற்றைப் பொருட்படுத்தியுள்ளனவா ? புலம்பெயர்ந்தவர்கள், நாடுகடந்தவர்கள் எனப்பலர் உள்ளனர். எல்லோரும் தேர்தற்கால அறிக்கைகளை விட்டால் மட்டும்போதும் என்ற அளவுக்குச் சுருங்கிக் காய்ந்து விட்டனர். அல்லது அரசியல் வியாக்கியானத்துடன் திருப்திப்பட்டுக்கொள்கின்றனர். எல்லாத் தவறுகளையும் "தமிழ்த்தேசியம்" என்ற மாயச்சொல் மறைத்து விடும் என்று நம்புகின்றனர்.

**'எல்லாத் தவறுகளையும் தமிழ்த்தேசியம் என்ற மாயச்சொல் மறைத்துவிடும்' என்று பலரும் நம்புவதாக சொல்கின்றீர்கள். அப்படியானால் தமிழ்த்தேசியத்துக்கான வரையறைதான் என்ன?**

"தமிழ்த்தேசியம் என்பது பேசிக்கடக்கும் இலகுவான ஒன்றாக உள்ளது. ஆனால், அது அப்படியானதில்லை. அது தொடக்கத்திலிருந்தே இழப்புகளையும் தியாகங்களையும் செய்யுமாறு வற்புறுத்தியிருக்கிறது. "செயலின் விளைவாகவே அதைக் கட்டமைக்க முடியும்" என்று கேட்கிறது. இந்த நிலையை உண்டாக்கியவர்கள் தமிழ்த்தேசியத்தை முன்னிறுத்தியோரே. ஆரம்பத்தில் "சிங்கள மொழியைப் படிக்க மாட்டோம்" என்று அரச உத்தியோகத்தை இழந்ததில் இருந்து தொடங்கிய தியாகச் செயல்கள், பின்னர் ஊர்களை இழக்கவும் வாழ்க்கையின் அடிப்படைகளைத் தியாகம் செய்யவும் உயிரைக் கொடையாக்கவும் வற்புறுத்தின. ஆகவே தமிழ்த்தேசியம் என்பது தியாகங்களைச் செய்யக் கூடியவரும் இழப்புகளைச் சந்திக்கத் துணிந்தவர்களும் முன்னெடுக்கும் அரசியல் வழிமுறையாகும். அதில் தியாகங்கள் செய்யாதவருக்கும் இழப்புகளைச் சந்திக்கத் தயாராக இல்லாதவருக்கும்

இடமில்லை. ஆனால், இன்று தமிழ்த்தேசியம் பேசுவோர் அல்லது தம்மைத் தமிழ்த்தேசியர்களாகக் காட்ட முனைவோர் எப்படி இருக்கின்றனர்? வெறும் வாய்ச்சொல் வீரர்களாக. இணையப் போதகர்களாக.

இவர்கள் தம்மை அர்ப்பணிக்கவும் செயலாற்றவும் தயாரா? ஜனநாயக அடிப்படையில் தங்களை விரிக்கவும் விமர்சிக்கவும் மறுபார்வைக்குட்படுத்தவும் தம்மைப் புதுப்பிக்கவும் ஆயத்தமா?

இதற்கெல்லாம் தயாரில்லாமல், தம்மை ஒப்புக் கொடுக்காமல், வெறும் பேச்சில் வீறாப்புக் காட்டுவதும் வித்தைகள் செய்வதும் மாயைத்திரை இல்லையா?

தவிர, கோட்பாட்டு ரீதியாகப் பார்த்தால் பிரயோக நிலையில் அல்லது கருதுநிலையில் இப்போதுள்ளது தமிழ்த்தேசியம் அல்ல. இது தமிழ் இன மானம் அல்லது அதனை வலியுறுத்த முனையும் தமிழ் இனவாதமாகும். இதை மாற்றி தமிழ்த்தேசியத்தை வளப்படுத்த வேண்டுமானால் அதை பன்முகத்தன்மையோடும் ஜனநாயக அடிப்படை களோடும் நெகிழ வைக்க வேண்டும். முஸ்லிம்களையும் மலைய மக்களையும் சமனிலையில் பேணவும் கரிசனை கொள்ளவும் வேணும். சிங்களவர்களைப் பகை நிலையில் பாவுக்கும் நிலையிலிருந்து விடுபட வேணும். சாதிய, பிரதேச, பால் வேறுபாடுகளை நீக்க வேண்டும்.

ஒரு சிங்கள பௌத்தரே ஜனாதிபதியாக முடியும் என்று அரசியல் சட்டத்தில் எழுதிவைத்திருக்கும் இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்கும் என்பது எவ்வளவு தூரத்துக்கு சாத்திய மானது?

அரசியல் சாசனத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்கமைவாகத் தமிழர் களிடத்திலுள்ள சக்திகளும் அரசியல் சாசனத்தைத் திருத்தி அமைப்பதற்கான முன்மொழிவுகளை மும்முரமாகத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன என்றேன். ஏனைய சமூகங்களும் இதில் இணைந்திருக்கின்றன. இப்பொழுது ஆட்சியிலிருப்பது கூட்டரசாங்கம். சிறுபான்மைச் சமூகங் களின் நம்பிக்கை இந்த அரசாங்கத்தில் முதலீடு செய்யப் பட்டுள்ளது. கூடவே இந்த அரசாங்கம் மேற்கின் அனுசரணையோடு அமைந்தது. (கூட்டரசாங்கமாக இருந்தாலும் ஜனநாயகத்தை வலியுறுத்தும் மேற்கின் அனுசரணையோடிருந்தாலும் இனவாதத்திலேயே இந்த அரசாங்கமும் ஊறியிருக்கிறது என்பது உண்மைக்கதை).

தவிர, தமிழர்கள் தங்களை நம்புவதை விட, பிற சக்திகளை நம்புவதை விட, வெளியாரை நம்புவது அதிகம். முன்பு இந்தியாவை. இப்பொழுது மேற்கை. ஆகவே இதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும், என்ன செய்ய இயலும்?

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக பல முயற்சிகள் மாற்றங்கள் என்று சனங்கள் பலதைக் கண்டதுதானே?

எதுவும் சாத்தியமாகவில்லை, நிறைவேறவில்லை என்பதற்கு மக்களும் பொறுப்பு.

எந்த விதத்தில் மக்கள் பொறுப்பாக முடியும்? மக்களை கேட்டா விடுதலை போராட்டம் நடைபெற்றது? மக்கள் இந்த விடுதலைப் போராட்டத்துக்கு கொடுத்த விலை கொஞ்ச நஞ்சமா? எப்படி நீங்கள் மக்களை மட்டும் குற்றவாளிகளாக்க முடியும்?

நான் மக்களைக் குற்றவாளிகள் ஆக்கவில்லை. அவர்கள் பொறுப்பாளிகள் என்றேன். நிச்சயமாகப் பொறுப்பாளி கள்தான். ஒவ்வொரு நியாயப்பாட்டோடும் ஒவ்வொரு விதமான அறிவிப்புகளோடும் அவ்வப்போது வரும் தரப்பு களை கைதட்டி வரவேற்பதோடு நிற்காமல் அவற்றை வழிப் படுத்த வேண்டிய பொறுப்பு மக்களுக்குண்டு. ஏனென்றால் சுமைகளைச் சுமப்பவர்களாக அவர்களே உள்ளனர். காயங்களையும் வலிகளையும் ஏற்பவர்களாகவும் அவர்களே இருக்கின்றனர். அப்படித்தான் நடந்து கொண்டுமிருக்கிறது. இந்த அனுபவங்களை மக்கள் தங்களுக்கான படிப்பினை களாகக் கொள்ள வேண்டாமா? ஆகவே குருட்டு நம்பிக்கை களில் தலையைப் புதைக்காமல், ஒவ்வொரு தரப்புகளின் பின்னும் இழுபடாமல் சிந்திக்க வேண்டும். தெளிய வேண்டும். புதியன தெரிய வேணும்.

ஆயுதந்தாங்கிய தரப்புகளின்போது மக்களின் செயற்பாடுகள் சில வேளை விதிவிலக்காக இருக்கலாம். வரை யறுக்கப்பட்டிருந்திருக்கலாம். அப்பொழுது அவர்கள் குரலற்றிருந்திருக்கலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் இருக்க வேண்டியிருந் திருப்பது உண்மை. ஆனால், அதைத் தவிர்ந்த பின், தேர்தல் முறைகளின்போதும், பிற அரசியற் செயற்பாடுகளின்போதும் மக்கள் விழிப்பாகவும் சரியாகவும் இருப்பது அவசியம். மக்களுக்கு இந்த விழிப்புணர்வையும் துணிவையும் ஏற்படுத்த வேண்டியது, மக்கள் சார்ந்த அமைப்புகளுக்கும் மக்களின் மத்தியிலுள்ள சிந்திப்போருக்கும் உண்டு. முக்கியமாக ஊடகங்களுக்குண்டு. ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதே கவலையும் வெட்கமும்.

ஊடகவியலாளர்களும், புத்திஜீவிகளும் நல்லரசு தமிழர் விவகாரத்தில் முனைப்புடன் செயல்படுகின்றது என்றும் தமிழர் தரப்புத்தான் போதிய அக்கறை காட்டவில்லை என்பது போல சித்தரிக்கின்றார்களே?

அப்படியல்ல. "கூட்டரசாங்கம்" தமிழர் விவகாரத் தில் அல்லது சிறுபான்மைத் தேசிய இனங்களின் விடயத்தில் என்னவகையில் முன்னேற்றகரமாகச் செயற்பட்டுள்ளது ? என்று உங்களிடம் கேட்கிறேன். குறைந்தபட்சம் செய்யக் கூடிய அரசியல் கைதிகளின் விடுதலை, படைக்குறைப்பு, சீரான புனர்வாழ்வு, காணிகளை விடுவித்தல் போன்ற விடயங் களையே முறையாகச் செய்யவில்லை. இதற்கப்பால் அரசியல் ரீதியாக இனமுரண்பாட்டைத்தீர்ப்பதற்கான முயற்சிகளிலும் விசுவாசமாகவும் முன்னேற்றமாகவும் நடக்கவில்லை. இதையெல்லாம் எப்படி நியாயப்படுத்த முடியும்?

இந்த நிலையில் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. மக்களை ஒன்றிணைத்து தீவுக்கான முயற்சிகளை, போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. தீர்வைக் காணும் முகமாக உள்நாட்டிலும் வெளியுலகிலும் அணுகுமுறைகளை உருவாக்கிச் செயற்படவில்லை என்பதெல்லாம் உண்மையே.

தவிர, கூட்டரசாங்கத்தைக் குறித்து தமிழர் தரப்பு வேறுவிதமாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறது.

தமிழர் தரப்பு எப்படியாக சொல்லிக்கொண்டு இருக்கின்றது?

நல்லாட்சி பற்றி இரண்டு விதமான பரந்த அபிப்பிராயங்கள் தமிழர்களிடத்தில் உண்டு. ஒரு தரப்பினர், நல்லாட்சியை "ஏமாற்று வித்தை" என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இவர்கள் எல்லாவற்றையும் எதிர்ப்பாகவும் சந்தேகமாகவுமே நோக்குகிறார்கள். நல்லாட்சியைப் பற்றிய சந்தேகத்தின் விளைபொருள்தானே தமிழ் மக்கள் பேரவை. மற்றும் வடக்கு மாகாணசபையின் தீர்மானங்கள்.

இன்னொரு தரப்பினர் இந்த ஆட்சியில் நம்பிக்கை வைத்து இணைந்து செயற்படுவோர். மக்களுடைய ஆதரவும்

தேர்தலின் மூலம் இவர்களுக்கே கிடைத்திருக்கிறது. தங்களுடைய நடவடிக்கைகளைக் குழப்பாமல் இருக்க வேண்டும் என்று இந்தத் தரப்பு (தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு) கேட்கிறது. எல்லாவற்றுக்குமான பரி காரத்தை (மைத்திரி - ரணில் மற்றும் மலையக, முஸ்லிம் தரப்பினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என எல்லாம் கூட்டிணைந்த) இந்த அரசாங்கம் செய்யும் என்று நம்புகிறார்கள்.

நாட்டுக்கு வெளியிலும் இந்த இரண்டு நிலைகளும் உள்ளன.

**கடந்துவந்த போராட்டப்பாதையானது ஈரோஸ் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தவிர்ந்து மலையகத்தமிழரை ஏன் உள் வாங்கியிருக்கவில்லை?**

அவையவை கொள்ளும்பாத்திரத்தின் அளவே எதுவும்.

**இந்தப்பதிலை தந்திரோபாயப் பின்வாங்கல் என்று எடுக்கலாமா?**

இல்லை. எப்படி இது தந்திரோபாயப் பின்வாங்க லாக அமையும்? தமிழ்த்தேசியம் குறுகலான அடிப்படை வாதப் பண்புகளை அதிகமாகக் கொண்டிருந்ததன் விளைவே பிற சமூகங்களின் மீதான கரிசனைக்குறைவுக்குக் காரண மாகியது. இது மலையகத் தமிழர்களை மட்டுமல்ல, முஸ்லிம் களைக்குறித்த குறைபாட்டு அக்கறைக்கும் பொருந்தும். எனவே தான் தமிழர்களும், தமிழ்த்தேசியமும் மேலும் மேலும் பலவீனமடையும் நிலையுள்ளது.

**தமிழ் நவீனக் கவிதைக்கான பிரதிகளை புரிந்து கொள்ள முடிய வில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை முன் வைப்பவர்கள் பற்றி உங்களுடைய புரிதல் எப்படியாக இருக்கிறது?**

இந்தப் பிரச்சினை புதிய கவிதைகளுக்கு மட்டும் உரியதல்ல. ஏனைய பிரதிகளுக்கும் பொருந்தும். மட்டுமல்ல, அரசியலுக்கும், பண்பாட்டு நடவடிக்கைகளுக்கும் உரிய ஒன்று. புதிதாக வரும் ஒன்றை உடனடியாக ஏற்றுக் கொள்ளும் மனம் பலருக்கும் ஏற்படுவதில்லை. இவர்கள் பயிலும் ஆர்வமில்லாத, அறிவியலை, இயற்கையின் விதியை, பரிணாமத்தைப் பற்றிய அக்கறைகளற்ற சோம்பேறிகள் என்பேன்.

**வாசகனுக்கு புரியாத படைப்புகளை கொடுக்காத படைப்பாளியால் யாருக்கு என்ன லாபம்?**

படைப்பென்பது புதிது. புதிது என்றால் புதிரும் மடமமும் புதுமைகளும் அத்றகான கற்பனையும் நிச்சயமாக இருக்கும். எழுத்தாளரோ படைப்பாளியோ பழகிப்போன இலக்கியப் பண்டங்களை உற்பத்தியாக்கி விற்கும் கொம்பனிகளை வைத்துக் கொண்டிருப்பதில்லை. அதில் லாபத்தை நோக்கமாகக் கொண்டு அவர்கள் இயங்குவது மில்லை. தங்கள் எழுத்தின் மூலம் பல்வேறு விதமான வாழ்க்கை முறைகளை வாசகர்களுக்கு அறிமுகமாக்குகிறார் கள். பல பண்பாடுகளை. பல மனநிலைகளை. பலவிதமான காட்சிகளையும் காலங்களையும் நிலப்பரப்புகளையும் இன்னும் தீராத காதலையும் துயரையும் சமூக ஊடாட்டங் களையும் சிக்கல்களையும் என எண்ணற்ற கோலங்களையும். வெவ்வேறு உலகங்களை. வெவ்வேறு வண்ணங்களை.

இது வாசர்களுக்காக அவர்கள் படைத்தளிக்கும் கொடை. இதைப் பயிலாதிருப்பது எவ்வளவு இழப்பு? ஓவியம், சிற்பம், இசை, நாடகம் என்று எத்தனை அருமையான படைப்புகள்....!

எதையும் புரிந்து கொள்ள வேண்டுமானால் முயற்சியும் பயிற்சியும் தேவை. எதுதான் முயற்சியின்றி விளைவாகும்? அறிதலும் புரிதலும் வாழ்வின் கலையே. மனித அடையாளமே அதுதான்.

**அப்படியானால் இலக்கியத் தரப்படுத்தல்கள் என்ன காரணத்துக்காக வந்து கொண்டிருக்கின்றன? இதனால் படைப்பாளியானவன் உளச்சிக்கல்களை எதிர்கொள்கின்றான் அல்லவா?**

முதலில் "படைப்பாளியானவன்" என்பதைத் திருத்திக் கொள்வோம். படைப்பாளி அல்லது படைப்பாளர் என வைத்துக் கொள்ளலாம். இருபாலாருக்குமுரியதாக.

இலக்கியத்தில் தரப்படுத்தல் என்பது நுண்மையான ஒன்று. அது உணர்வும் அறிவும் கலந்த ஒரு பொறிமுறை. இதை விமர்சனம் சற்றுத்தூக்கலாக அறிவு சார்ந்து அணுகுகிறது. ஒரு படைப்பின் தரம் என்பது அதனுடைய மொழிதல் முறைகள், அதனுடைய உள்ளடக்கம், அது அந்தச் சமூகத்திலும் அதற்கு வெளியிலும் உண்டாக்கும் புரிதல்கள், அதன்வழியான விளைவுகள், அது பண்பாடாக அந்த மொழியிலும் அந்தச் சமூகத்திலும் அதற்கு அப்பால் பொது வெளியிலும் மாறும் விதம் எனப் பலவிதமானது.

தவிர எதற்கும் தரமும் நல்லது என்ற அடிப்படையும் அவசியம். பொதுவாகவே, தரமில்லாத பொருட்களுக்கு உபயோகமோ மதிப்போ இல்லை. அப்படியிருந்தாலும் அவை நீடிப்பதுமில்லை. உரிய தேவையைப் பூர்த்தி செய்வது மில்லை. மிகக் குறைந்த விலையுள்ள 10 ரூபாய்க்கு வாங்குகின்ற கீரையிலேயே நீங்கள் தரத்தைத்தான் பார்க்கிறீர்கள். அது முற்றியிருக்கிறதா ? இலைகள் பழுத்திருக்கின்றனவா? வாடியிருக்கா செழிப்பாக இருக்கா? பூச்சி புழு தின்றிருக்கா? இப்படிப் பலதையும் பார்த்தே அதை வாங்குவீர்கள். அப்படித் தான் கலைக்கும் இலக்கியத்திற்கும் உரிய அவதானிப்பும் தரமும் தேவை.

தங்கத்துக்கும் வைரத்துக்கும்தான் தரம் உண்டென் றில்லை.

படைப்பென்பது புதியது. புதுமையானது. புதிய வாழ்க்கையையும் புதிய உலகத்தையும் நமக்குள்ளே விரித்துக் காட்டுவது. இதைச் செய்யாதபோது விமர்சனம் வரும். விமர்சனம் என்பது இலக்கியத்தையும் படைப்பாளியையும் நெறிப்படுத்துவது. அது அறிவுச்செயற்பாடு. இதில் படைப் பாளிக்கு ஏன் உளச் சிக்கல்கள் ஏற்பட வேணும்? இன்னொரு வகையில் சொன்னால் படைப்பாளி சமூகத்தையும் மனிதர்களையும் மனித நடத்தையையும் இயற்கையையும் விமர்சனமே செய்கிறார். அப்படியிருக்கும்போது அவர் மட்டும் தன்னைக்குறித்த விமர்சனங்களிலிருந்து எப்பிடித் தன்னை விலக்கி வைக்கமுடியும் ?

**போரிலக்கியத்தில் கவிதைகளின் பங்கு எப்படியாக இருந்தது?**

சில கவிதைகள் போர்ப்பரணிகளாக இருந்தன. சில போருக்கு எதிராக இருந்தன. போருக்கு எதிராக இருந்த கவிதைகளை தமிழ்ச் சூழல் கொண்டாடியது குறைவு. கவனிக்க வேண்டியது, முஸ்லிம்களாலும் மலையகத்தில் வாழும் தமிழர்களாலும் எழுதப்பட்டவை போருக்கு மாற்றாகவே இருந்தன. அல்லது போரை நீங்கியிருந்தன.


**இறுதிப் போர் முடிவடைந்ததின் பின்னர் வெளியாகிய புனைவுகளும் கதைசொல்லிகளும் ஏற்படுத்திய தாக்கத்தை அல்லது அதிர்வை. கவிஞர்களோ அல்லது அவர்களினூடாக வெளியாகிய கவிதைகளோ பெரிதாகப் பேசப்படவில்லையே?**

அப்படியல்ல. பா. அகிலனின் சமரகவிகள்,

நிலாந்தனின் யுகபுராணம், சேரனின் காடாற்று, றஸ்மியின் ஈ தனது பெயரை மறந்து போனது, திருமாவளவனின் கவிதைகள், பிரதீபாவின் நீத்தார் பாடல், சுகன் கவிதைகள், கற்சுறாவின் அல்லது யேசுவில் அறையப்பட்ட சிலுவை, என்னுடைய பலியாடு, ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள், இரத்தமாகிய இரவும் பகலுடைய நாள், தீபச்செல்வனின் பதுங்கு குழியில் பிறந்த குழந்தை, ஆட்களில்லாத நகரத்தைத் தின்ற மிருகம், சித்தாந்தனின் துரத்தும் நிழல்களின் யுகம் தான விஷ்ணுவின் கறுப்பு ஆந்தைகளின் இரவு எனப் பல கவிதை நூல்கள் வந்திருக்கின்றன. இந்த கவிதைகள் அவற்றின் தளத்தில் அவற்றுக்குரிய வாசகப் பரப்பில் ஊடாடியிருக்கின்றன. தொடக்கத்தில் இவற்றைக் குறித்த உரையாடல்களே இருந்தன.

புனைவுகளும் அ - புனைவுகளும் இன்னொரு தளத்தில் செல்வாக்கைச் செலுத்தியிருக்கின்றன. தவிர எதுவும் எதையும் மிஞ்சியதல்ல. ஆனால், எல்லாவற்றுக்கும் முறையான விமர்சனங்கள் செய்யப்படவில்லை. தவிர, இது உரைநடைகளின் யுகம் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேணும்.

**'மரணத்துள் வாழ்வோம்' கவிஞர்களின் கவிதைத் தொகுப்பானது தமிழர் வாழ்வில் ஆயுதப் போர் முகிழ்ந்த காலத்தைப் பாடு பொருளாகக் கொண்டு கட்டமைத்து வாசகர் மத்தியில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. ஆனால், இறுதிப் போரின் பின்னரான காலங்களின் சனங்களின் அவலங்களை, போராளிகளின் மன உணர்வுகளை பாடுபொருளாக கொண்டு கவிஞர்களின் கவிதை தொகுப்பு இதுவரை வெளியாகாமல் இருப்பதற்கு என்ன காரணமாக இருக்கின்றது?**



நிச்சயமாக அப்படியான தொகுப்புகள் வந்திருக்க வேணும். அப்படி வந்திருந்தால் புதிய நிலைகளை அறிந்திருக்க முடியும். தவிர, இலக்கியம் என்பது வரலாற்று ஆவணமோ சமகால அரசியல் விளக்கமோ இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேணும். "மரணத்துள் வாழ்வோம்" காலகட்டத்தில் பெரும்பாலும் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் அரசினுடைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான மனநிலையோடேயே இருந்தன. அதனால் ஒரு மையத்தை நோக்கிக் குவிந்த மனநிலை இருந்தது. இதை நீங்கள் "மரணத்துள் வாழ்வோம்" கவிதைகளில் காண முடியும். இன்று அப்படியல்ல. இடைப்பட்ட காலத்தின் அரசியல் நிலவரங்களும் நம்பிக்கைச் சரிவுகளும் பல்வேறு மனநிலைகளையும் வேறுபாடான நம்பிக்கைகளையும் உருவாக்கியிருக்கின்றன. பல சிதைவுகளை உண்டாக்கியிருக்கின்றன. ஆகவே இப்பொழுது ஒரு கூட்டுத்தொகுப்பு வருமாக இருந்தால் அது பிரதானமாக மூன்று வகையான அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட வகையான நம்பிக்கைகளையும் மனநிலைகளையும் கொண்டிருக்கும். ஒன்று அரச பயங்கரவாதத்தையும் சிங்கள இனவாதத்தையும் எதிர்ப்பதாக. மற்றது நடந்த போராட்டத்தையும் போரையும் மறுபரிசீலனை செய்யும் மானுட விழுமியம் தழுவியதாக. மற்றது இரண்டுக்கும் இடைநிலை ஊடாட்டமுடையதாக. இதைவிட வேறு வகையிலும் அமையக் கூடும். இருந்தும் குட்டி ரேவதியினால் போரின் முடிவுக்குப் பின்னர் ஒரு தொகுதி கடுமையான முயற்சியெடுத்துக் கொண்டுவரப்பட்டது. அதற்கான கவனத்தை துயரத்தைத் தூக்கும் தமிழர்கள் கொள்ள வேண்டும்.

இடைப்பட்ட காலத்தில் "காலம் எழுதிய வரிகள்" என ஒரு கூட்டுத் தொகுதி வந்திருந்தது. அரச பயங்கரவாதத்தை அனுபவங்களை இந்தக் கவிதைகள் வெளிப்படுத்தின. இதே காலப்பகுதியில் புலிகளால் ஏற்பட்ட அபாய நிலைகளை மையமாகக் கொண்டு "மீசான்கட்டை மீது எழும் பாடல்கள்" என்றொரு தொகுதி முஸ்லிம் கவிஞர்களின் மூலம் வெளியாகியிருந்தது என்பதும் இங்கே குறிக்கவேண்டியது.

**இலங்கை மூன்று அந்நிய நாடுகளால் ஆளப்பட்டது வரலாறு. ஆனால் உங்கள் வேட்டைத்தோப்பு, மற்றும் செங்கை ஆழியானின் கடல் கோட்டை தவிர்ந்து போர்த்துக்கேய, டச்சு, ஆங்கிலேய காலத்து புனைவுகள் அதிக அளவு வெளியாகாமல் இருப்பதற்கு காரணம்தான் என்ன? இதனால் இளைய தலைமுறையினராகிய எமக்கு அவர்களது பண்பாட்டு விழுமியங்கள் எதுவுமே தெரியாமல் போனது கொடுமையில்லையா ?**

வேறு சிலரும் வரலாற்றை மையமாக வைத்துத் தங்கள் புனைவை எழுதியிருக்கிறார்கள். முக்கியமாக முல்லைமணி, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, முல்லைக்கோணேஸ் இப்படிச் சிலர் இன்னும் உண்டு. நீங்கள் குறிப்பிடுவதைப்போல வரலாற்றை மையப்படுத்தி எழுதப்படும் புனைவுகள் நம்மிடையே குறைவுதான். அதற்கான காலம் இனி வரலாம். எதுவும் முடிந்து விட்டது என்றில்லை. இனித்தான் எல்லாமே என்று நம்புங்கள்.

> "தலைமைகளைக் கேள்விக்குட்படுத்துவதும் விமர்சிப்பதும் எதிரிக்கு வாய்ப்பாகி விடும். ஒற்றுமையைக் குலைத்துவிடும்" என்ற மோசமான - தப்பித்தலுக்கான கற்பிதம் தமிழ்ச்சூழலில் உண்டு. இந்த எண்ணம் பேரழிவின் வழிப்பாதையாகும்.

**கடந்த சில வருடங்களாக ஈழத்து எழுத்துப் பரப்பில் வெளியான கதைகள் மற்றும் நாவல்களை பற்றி அவைகள் வெளியாக முன்னரே அளவுக்கு மீறிய எதிர்பாப்புகளை வாசகர்களுக்கு 'பிரபலங்கள்' எனப்படுவோர் பொதுவெளியில் வாசகர்களுக்குக் கொடுக்கின்றனர். ஆனால் படைப்புகள் வெளியாகிய பின்னர் வாசகன் அந்தப்படைப்பை வாசிக்கும் பொழுது ஏமாற்றத்துகுள்ளாகின்றான் .இத்தகைய போக்கானது எந்தவகையில் நியாயமாக உங்களுக்குத் தெரிகின்றது?**

தேர்ந்த வாசகருக்கு இதெல்லாம் ஒரு பொருட்டே யல்ல.

தவிர, எதையெல்லாம் யாரையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு இப்படிக் கேட்கிறீர்கள் என்று புரியவில்லை. இது வணிக யுகம். மற்றது வாசிப்புக்கு எதிரான காட்சி ஊடகங்களின் காலம். இதனால் புத்தக விற்பனையும் வாசிப்பும் ஒறுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்குரிய வாசகத் தூண்டலுக்கான முயற்சிகள் தவிர்க்க முடியாதவை. இதில் வணிக உத்திகள் பயன்படுத்தப்படுவது காலத்தின் விளைவு.

ஆனால், நீங்கள் சொல்வதைப்போல முன்னபிப்பிராயங்கள் வாசகரையும் வாசிப்பையும் திசைதிருப்பி விடக்கூடிய அபாயமும் உண்டு.

**இன்றைய தமிழ் நவீன இலக்கியம் பற்றி உங்களுடைய பார்வைதான் என்ன?**

மகிழ்ச்சியைத் தருகிறது. புதிய சாத்தியங்கள் அதிகரித்திருக்கின்றன. எண்ணற்ற வடிவங்கள். பல புதுமைகள். வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமான தருணங்கள். ஆனால், இதைக் கொண்டாடக்கூடிய வாசிப்புச்சூழல் இல்லை என்பதே வருத்தம்.

**எப்படியான மகிழ்ச்சியை அது உங்களுக்குக் கொடுக்கின்றது?**

எண்ணற்ற புதுமைகள் நிகழும்போது மகிழ்ச்சி இயல்பாக உண்டாகுமே. அதுதான். அங்குமிங்குமாக எழுச்சிகளும் உரையாடல்களும் வெளிப்பாடுகளும் நிகழ்ந்து கொண்டிருப்பதால். எல்லாம் பன்முக வெளிப்பாட்டின் களமாக இருப்பதால்.

**தமிழ் நாட்டில் உள்ள பதிப்பகங்களுக்கு ஈடாக ஈழத்திலே பதிப்பகங்கள் தோன்றமுடியாத சூழலுக்கு அடிப்படையிலான தடங்கல்கள் தான் என்ன?**

முன்னர் போர். ஆனாலும் அதற்குள்ளும் பல புத்தகங்கள், பிற வெளியீடுகள் வந்தன. புலிகளிடத்திலும் புலிகளுக்கு வெளியிலும் பதிப்பு முயற்சிகள் ஓரளவுக்கிருந்தன.

இப்பொழுது அதைவிடப் பொருத்தமானதொரு சூழல் உருவாகியிருக்கு. திட்டமிட்டு, ஒத்துழைத்துச் செயற்பட்டால் நிறையச் சாதிக்கலாம்.

தமிழ்ப்பதிப்புத்துறைக்கு என்றொரு சிறப்பான முறையும் வரவாற்றுப் பங்களிப்புமுண்டு. உ.வே. சாமி நாதய்யர், சி.வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் என்று இந்தப் புள்ளிகள் ஒரு தொடக்க காலம் என்றால், பின்னர் அவற்றிலிருந்து பல புள்ளிகள் விரிந்து உருவாகியிருக்கின்றன. பதிப்பகங்கள் பண்பாட்டின் அடையாளமே. நீண்டகாலத்துக்குப் பின்னர், ஈழத்திலும் பதிப்புத்துறை பன்முகம் கொண்டதொரு பண்பாட்டு மலர்ச்சிக்குரிய எத்தனங்களைக் கொள்ள முயற்சிக்கிறது. இதில் மெல்ல மெல்ல நாமும் செயற்பட்டு வருகிறோம். இதைத் தொழில் முறையாக்கும்போது வெற்றியும் சாத்தியங்களும் உண்டாகும்.

**எப்படியான திட்டமிடல் ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கின்றீர்கள் ?**

சீரான தொடர்பாடல், முறையான ஒழுங்கமைப்பு, சிறந்த பதிப்பாக்கம், முறைப்படுத்தப்பட்ட விநியோகம், பரந்த அறிமுகம், கூரான விமர்சனம், புத்தகம் வாங்க வேண்டும் என்ற பண்பாடு அல்லது சிந்தனை என்ற தொடர் நிகழ்ச்சிகளும் புத்தகக் காட்சி, வாசகர் பெருக்கத்தை ஊக்கல் எனவும் பல தளங்களில் விரியும் இது.

இதற்கு உலகெங்கும் உள்ள தமிழ் வாசகர்களும் புலம்பெயர் படைப்பாளிகளும் ஊடகங்களும் அரச மற்றும் பொது அமைப்புகளும் ஒத்துழைக்கலாம். ஒத்துழைப்பர் என்ற நம்பிக்கையும் உண்டு.

**இன்னும் ஊர்களில் சாதி அடையாளங்களும் பிரி வினைகளும் ஏற்ற இறக்கங்களும் அப்படியேதான் உள்ளன. அரசாங்கப்பாடசாலைகளிலேயே சாதி ஒடுக்குமுறையும் ஓரங்கட்டல்களும் நடக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிகழும் சாதிய நுண்ணரசியல் பகிரங்கமானது. மறுக்கவே முடியாத ஒன்று.**

**ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்தவர்களை ஒருவிதமான அந்நியத் தன்மையுடன் நாட்டிலிருப்பவர்கள் அணுகுவதை அண்மையில் சமூக வலைத்தளங்களினூடாக அவதானிக்க முடிந்தது .இத்தகைய மன நிலையை நடைபெற்று முடிந்த போரின் உளவியல் பாதிப்பு என்று எடுத்துக் கொள்ளலாமா?**

இந்த மாதிரியான நோக்கு நிலை இப்போதல்ல, முன்னரும் இருந்தது. இடங்களின் வேறு பாடல்ல இதற்குக் காரணம். மனங்களின் வேறுபாடே. ஆனால், இது அவசிய மற்ற ஒன்று. இன்று உலகம் ஒன்றிணைந்துள்ளது. தவிர, யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பண்பாட்டின் குழந்தைகள் இப்படி வேறுபடுத்திப் பல்லிழிப்பது நல்லதல்ல. அதே வேளை வசதியான புலங்களுக்கு நகர்ந்தோர் வசதியற்ற நிலத்திலிருப்போரை நகைத்தலும் பணித்தலும் முறையல்ல.

**வன்னி மண்ணிலேயே உங்கள் வாழ்க்கை பலவருடங்களாக ஓடிக் கொண்டிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் பேர வலம் முடிவடைந்து ஏழு வருடங்களைக் கடந்து விட்ட நிலையில் வன்னிச் சனங்களது இருப்பு தற்பொழுது எப்படியாக இருக்கின்றது ?**



முடிவற்ற துயரத்தில் சிக்கியுள்ளது. பிள்ளைகள் படிக்கச் செல்லாமல் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகிறார்கள். தொழில் இல்லை. பேயாட்டம்போடுகிறது வறுமை. பெண்கள் தங்களுடைய உடலை விற்பதைத் தவிர, வேறு கதியில்லை என்ற அளவில் பல கிராமங்கள் உள்ளன. போரிலே காயப்பட்டவர்களும் உடல் உறுப்புகளை இழந்தவர்களும் வாழ வழியற்றிருக்கிறார்கள். போராளிகளாகச் செயற்பட்டவர்கள் கைவிடப்பட்டிருக்கிறார்கள். ஆதரவற்ற சிறுவர் இல்லங்கள் பெருத்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாதமும் இந்த இல்லங்களில் சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டு போகிறது. போருக்குப் பிறகு இந்த எண்ணிக்கை குறைந்திருக்க வேணும். ஆனால், போர்க்காலத்தை விட இப்பொழுதே எண்ணிக்கை கூடிச் செல்கிறது. புலம்பெயர்ந்த மக்கள் இந்தச் சிறார் இல்லங்களுக்குப் பணத்தை அள்ளிக் கொடுக்கிறார்கள். சிலர் புதிய சிறார் இல்லங்களை உருவாக்குகிறார்கள். அப்படியென்றால் ஆதரவற்ற சிறார்களின் பெருக்கத்தை நாம் விரும்புகிறோமா? நிச்சயமாக இது தீர்வல்ல. இது சரியுமல்ல. இவர்கள் தங்கள் பிள்ளைகளை இந்த மாதிரி இல்லங்களில் விட்டு வளர்ப்பார்களா?

இதற்குப் பதிலாக சனங்கள் தொழில் செய்து வாழக் கூடிய வாய்ப்புகளை உருவாக்கினால், அதன் மூலம் உழைப்பும் வருவாயும் கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரோடு, வீட்டோடு வளர்ந்து படிப்பர். சமூகம் சீராகச் சிறப்பாக

இயங்கும். இதுதான் தேவை. ஆனால், அப்படி நடக்க வில்லை. பதிலாகச் சிறார் இல்லங்களை நடத்துவதும் பலருக்கு லாபமீட்டக்கூடிய தொழிலாகி விட்டது.

போருக்குப் பிந்திய சமூகத்தை ஒழுங்கமைப்பதி லும், மீள் நிலைப்படுத்துவதிலும் அரசாங்கமும் சரி, தமிழ் தரப்பிலுள்ள அரசியலாளரும் சரி, பொது அமைப்புகளும் சரி, புலம்பெயர்ந்த நாடுகளில் செயற்படுவோரும் சரி முறையாகச் செயற்படவில்லை. பதிலாக கோயில்களையும் தேவாலயங்களையும் விகாரைகளையும் கட்டுவதிலேயே எல்லோருடைய குறியும் இணைந்துள்ளது. மனிதாபி மானத்துக்கும் கருணைக்கும் மாறான செயல் இது. மடமையும் அநீதியும்.

**மனதில் எவ்வளவோ வடுக்கள் இருந்தாலும் இரண்டு சிங்களக்கட்சி களை தமிழர்களாகிய நாங்கள் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தியிருக் கின்றோம். தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் ஆயுதப்படைகளின் பிரசன்னமானது சமகாலத்தில் எப்படியாக இருக்கின்றது ?**

நீங்கள் குறிப்பிடுவது ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி என்ற இரண்டையுமே. இப்பொழுது, ஆட்சியில் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்திருக்கின்றன. இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் அபூர்வமான நிகழ்ச்சி. இதற்குத் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ்பேசும் சமூகங்கள் இணைந்து ஆதரவளித்திருக்கின்றன.

ஆனால், படைகளின் பிரசன்னத்திலிருந்து ஏனைய விவகாரங்கள் வரை அத்தனையும் வழமையைப்போலவே - மாறாக்கொள்கையாகவே உள்ளது. இன்னும் சரியாகச் சொன்னால், தற்காலிக முகாம்கள் நிரந்தரப்படை முகாம் களாக மாறிக் கொண்டிருக்கின்றன. அதற்கான கட்டுமான வேலை பிரமாண்டமான அளவில் நடக்கிறது. இதைக் கண்டும் காணாதிருக்கின்றனர் "தமிழ் அரசியற் பங்காளிகள்". அவற்றுக்கிசைவான ஊடகங்கள். அப்படியே பொதுத் தளமும். மாற்றத்தைப் பற்றிப் பேசியவர்கள் இப்பொழுது உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**படையினர் தொடர்ந்தும் இருப்பதற்கான தேவை அல்லது காரணம் என்னவாக இருக்கின்றது ?**

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அரசும் படையும் படை விலக்கலை விரும்பவில்லை. மற்றது தமிழ்த்தேசிய அரசியலைப் பேசுவோரின் அணுகுமுறை களும் நிதானமில்லாத பேச்சுகளும்.

படையினரைப் பொறுத்தவரை இப்பொழுது அவர்கள் எட்டியிருக்கும் நிலை மிகப் பாதுகாப்பானது. இன்று தமிழ்ப்பிரதேசங்களில் மிகச் சாதாரணமாகவே படை அதிகாரிகள், அதிலும் உயர்நிலை அதிகாரிகள் திரிகிறார்கள். மாலைவேளைகளில் உடற்பயிற்சிக்காகத் தனியாகவே நடக்கிறார்கள். முன்னர் அப்படியல்ல. மிகப்பெரிய பாதுகாப்பு ஏற்பாடுகள், கவசங்கள் எல்லாம் இருந்துமே பாது காப்பற்ற நிலையில் மரணத்தைத் தழுவிக்கிடந்தவர்களுக்கு இன்றைய இந்தச் சுதந்திர நிலை மிகப் பெரிய வாய்ப்பு. அதை அவர்கள் இழக்க விரும்பமாட்டார்கள். ஆகவேதான் அவர் கள் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளை, படை முகாம்களை, கண்காணிப்பை, விவரம் திரட்டுவதை எல்லாம் தொடர்ந் தும் செய்கிறார்கள். மீண்டும் அவர்கள் மரணத்தைத் தழுவிக் கிடக்கவும் மரணத்தில் மண்டியிடவும் விரும்பவில்லை.

மேலும் படையினரின் உளவியலே வேறு. அது அரசியலுக்கு அப்பாலானது. இலங்கையில் அரசியற் தரப்பை யும் விட அதிக பலமுடையது படையும் புலனாய்வுமே. அது தனக்கு எது சரி, எது தேவை என்று படுகிறதோ அதையே செய்யும். அதை மிஞ்சக்கூடிய அரசியல் ஆளுமை இலங்கை யில் இதுவரையில் இல்லை. அப்படியான ஒரு ஆளுமை வந்தால்தான் மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

மறுவளத்தில் போர் முடிந்த பிறகும் படையினர் தொடர்ந்தும் இருப்பதற்கான தேவையைத் தீவிர தமிழ்த் தேசியவாதிகள் உருவாக்குகின்றனர். இவர்கள் இந்தியாவை யும் பிற மேற்குலக நாடுகளையும் துணைக்கிழுக்கும்போது அரசாங்கத்துக்கும் சிங்களவர்களுக்கும் எதிராகப் பிரகடனங்கள் செய்யும்போது அவர்களுக்கு அச்ச உணர்வே மேலிடுகிறது. "மீண்டும் நெருக்கடிகள் தங்களுக்கு உண்டானால்… ?" என்ற அச்சம் சிங்களத்தரப்பை எச்சரிக்கை அடைய வைக்கிறது. போதாக்குறைக்கு தமிழ்நாட்டில் ஈழ ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுவோரின் வீரப் பிரகடனங் கள். இவையெல்லாம் சிங்களத்தரப்பைக் கலவரமூட்டும் சங்கதிகள். ஏற்கனவே சிங்கள வரலாறு தமிழ்நாட்டினுடைய ஆதிக்கத்தினால் உண்டான அச்சுறுத்தலை தன்னுடைய உளவியலில் கொண்டிருக்கிறது. இதெல்லாம் சேர்ந்தே படைகளை விலக்காமல் தொடர்ந்தும் நிலைகொள்ள வைக்கின்றன. ஆனாலும் எல்லாவற்றையும் மீறி, மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும். அதற்கான காலம் கனிய வேணும்.

**மலையகத்து இலக்கிய சூழலானது சமகாலத்தில் எப்படியாக இருக்கின்றது ?**

தவச்செல்வன், பாலமுருகன், மல்லியப்பு சந்தி திலகர், லெனின் மதிவானம், வே. தினகரன். எட்டியாந் தோட்ட கருணாகரன், லுணுகுலை சிறி, இப்படி புதியவர்கள் அங்கிருந்து எழுதுகிறார்கள். ஆய்வு, விமர்சனம் என்ற துறைகளில் சரவணகுமார் போன்றவர்கள் உள்ளனர். புதிய முனைப்புகள் நிறைய உண்டு.

**மலையகத்தமிழர்கள் எந்தவிதத்தில் யாழ்ப்பாணத்தமிழர்களால் பயன் பெற்றிருக்கின்றார்கள் ?**

கல்வி, மருத்துவம் ஆகியவற்றை மலையகத்தில் யாழ்ப்பாணத்தவர்களே கடந்த நூற்றாண்டில் செய்தனர். இதில் கணிசமானளவு பங்களிப்புண்டு. அதேவேளை அந்தச் சமூகத்தை அவர்கள் அடிமைப்படுத்துவதிலும் பின்னிற்க வில்லை.

**அண்மையில் பேராசிரியர் மு நித்தியாநந்தன் எழுதிய 'கூலித்தமிழ்' எத்தகைய தாக்கத்தை மலையகத்தில் ஏற்படுத்தியது ?**

கூலித்தமிழ், மலையக வரலாற்றுக்கும் அந்தச் சமூகத் துக்கும் முக்கியமானதொரு விழிப்புணர்வுப் பங்களிப்பு. நேற்றையின் படிக்கல்லில் ஏறி இன்றையின் பீடத்திலும் நாளையின் சிகரத்திலும் ஏறிக்கொள்வதற்கான வாய்ப்பை நித்தி உண்டாக்கியிருக்கிறார். ஒரு முக்கியமான அடை யாளத்தை மலையக வரலாற்றுக்கு நித்தி உதவி யிருக்கிறார்.

**ஈழத்தில் மலையகத்தமிழர்கள் நடத்தப்பட்ட விதத்தை கூலித்தமிழ் விபரிக்கின்றது .சமகாலத்தில் தமிழகத்தில் இலங்கையர்கள் நடாத்தப் படும் விதத்தை ஒப்பிடும்பொழுது உளவியல்ரீதியான கணக்குத் தீர்த்தல் என்று எடுத்துக்கொள்ளலாமா ?**

தமிழகத்தில் உள்ள இலங்கைத்தமிழர்கள் கவனிக்கப்படாதிருப்பதற்கும் இதற்கும் சம்மந்தமில்லை. மட்டுமல்ல, அங்கே அகதிகளாக இருப்பவர்களில் அநேகர் இந்திய வம்சாவழியினராக இலங்கை வந்து, தென்னிலங்கை வன்முறைகளால் வடக்கிற்கு இடம்பெயர்ந்தவர்கள். பின்னர் வடக்கின் நிலைமைகளால் இந்தியாவுக்குப் பாதுகாப்புத் தேடிச் சென்றவர்கள். ஆகவே இவர்கள் ஒருவகையில் இந்தியவுக்கு - தமிழகத்துக்கு உறவுக்காரர்கள்.

கிராமிய வாழ்க்கை முறையையும் இறுகிய குடும்ப பின்னணிகளையும் கொண்ட ஈழச்சமூகமானது இன்று இயந்திர வாழ்வில் தன்னை தொலைக்கின்றது என்பதனை என்னால் அவதானிக்க முடிந்தது .இதற்கு ஏதுவானகாரணிகள் எதுவாக இருக்க முடியும் ?

எதனாலும் கரையாத பழைய கல்லாகத்தானே ஈழத்தமிழ்ச்சமூகம் மாற்றங்களுக்குட்படாமல் இருக்கிறது என்பதே என்னுடைய அவதானம். தவிர, இயந்திரகதியான வாழ்க்கை என்பது உலகளாவிய விளைவு. அதில் எதுவும் தப்பிவிடமுடியாது.

தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு கிழக்கில் சாதியமானது மாறி வரும் உலகமயதலில் நீர்த்துப் போய் உள்ளதாக எண்ணுகின்றீர்களா ?

அப்படியான சுகமான எந்தக் கற்பனைகளுக்கும் இடமில்லை. தவிர, இந்தக் கேள்வி சாதிமான்களைக் கேட்கவேண்டியது. அவர்கள்தான் இதற்கான பதிலைச் சொல்ல வேண்டியவர்கள். சாதிமான்களே சாதியைப் பராமரிக்கிறார்கள். ஆகவே நீங்கள் அவர்களிடம் கேளுங்கள். எதற்காக இன்னும் சாதி தேவை ? என்று. எதற்காக சாதியைப் பேணுகிறீர்கள் ? என. சாதியை விட்டொழிக்க முடியாமலிருப்பது ஏன் ? என்று.

உங்கள் பார்வையிலே சாதிமான்கள் என்பவர்கள் யாராக இருக்கின்றார்கள்?

சாதியை இன்னும் அழியவிடாமல், அதை நுட்பமாகப் பராமரித்துக் கொண்டிருப்போர். அதைப் பராமரித்துக் கொண்டே சாதி இல்லை என்றும் அதைத் தாங்கள் பார்ப்பதில்லை என்றும் அழிச்சாட்டியம் செய்து கொண்டிருப்போர். என்னுடைய பார்வையில் என்றில்லை. சாதிய வேறுபாடுகளினால் தினமும் அவமானங்களையும் நெருக்கடிகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் அனைவரும் இப்படித்தான் சொல்வார்கள். இது யதார்த்தம். கேவலமான கொடிய அனுபவம்.

ஈழத்திலே நீர்த்துப் போயுள்ள சாதீயத்தை புலம் பெயர்ந்தவர்களே ஊதிப்பெருப்பிக்கின்றார்கள் என்ற விமர்சனம் பொதுவெளியில் உண்டு உங்களது அவதானிப்பில் இது எப்படியாக இருக்கின்றது ?

தவறு. ஈழத்தில் சாதியம் நீர்த்துப்போயுள்ளது என்பதற்கு என்ன ஆதாரம்? இல்லாத ஒன்றை எவர், எங்கிருந்து, எப்படித்தான் ஊதிப்பெருப்பித்தாலும் அது பெருக்காது. தங்காது. இருக்கின்ற ஒன்றை எப்படி மறைத்தாலும் அது கூடியகெதியில வெளியே தலையைக் காட்டி விடும். தவிர, இதைப்பற்றி எத்தனையோ பேர் பேசி விட்டார்கள். இன்னும் இந்தக் கேள்வியா?

சரி, பதில் சொல்லித்தான் ஆகவேணும் என்றால், எந்த ஊரில் சாதி இல்லை என்று சொல்லுங்கள்? சாதியத்தைக் கடந்தவர்களாக வாழ்க்கை முறையில் எத்தனை வீதமானவர்கள் இருக்கிறார்கள்? அத்தகைய பண்பாட்டுப் புரட்சி இந்த மண்ணிலே நடந்திருந்தால், அவற்றை ஆதார மாக முன் வையுங்கள்.

சாதித்தொழில்கள் என்று அடையாளப்படுத்தப் பட்ட எந்தத் தொழிலையும் மற்றச்சாதிகள் என்று சொல்லப்படுகின்றவை எவையும் செய்யத்தயாராகவில்லை.

இன்னும் ஊர்களில் சாதி அடையாளங்களும் பிரிவினைகளும் ஏற்ற இறக்கங்களும் அப்படியேதான் உள்ளன. அரசாங்கப்பாடசாலைகளிலேயே சாதி ஒடுக்குமுறையும் ஒரங்கட்டல்களும் நடக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிகழும் சாதிய நுண்ணரசியல் பகிரங்கமானது. மறுக்கவே முடியாத ஒன்று. அதிகம் ஏன், சாதியத்தைக் கடப்பதற்கான ஒரு மார்க்கம் என நம்பப்பட்ட கிறிஸ்தவ மதத்தில் கூட சாதிய அதிகாரமே உள்ளது. இதுவரையில் வடக்கிலே ஒடுக்கப்பட்ட சமூகப்பின்புலத்திலிருந்து ஒரு ஆயர் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை. ஆனால், அதிகமான கிறிஸ்தவ மதகுருக்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

ஊரை விட்டுப்போனவர்கள், புலம்பெயர்ந்து பன்மைத்துவப் பண்பாட்டு நாடுகளில் சாதிய ரீதியில் வாழ்வது, அந்த அடிப்படையிலேயே, தங்கள் பிள்ளைகளுக்கான திருமணத் தேர்வுகளைச் செய்வதிலிருந்து பல வகையில் இது செழிப்பாக உள்ளது. ஆகவே ஊரிலே சாதி மறையக் கூடிய நிலையிருந் தாலும் நீங்கள் சொல்வதைப்போல இந்த இந்த வகையினர் அதை அனுமதிக்கமாட்டார்கள்.

வடபுலத்தின் நன்நீர் நிலைகள் சுன்னாகத்தில் இருக்கும் மின்சார நிலையத்தால் மாசடைந்ததாக சொல்லப்படுவது பற்றி என்ன சொல்கின்றீர்கள் ?

இது ஒரு பகிரங்கமான குற்றச்சாட்டு. இந்தப் பேராபத்தைச் சமூக விஞ்ஞானிகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் தெளிவாகச் சொல்லி வருகிறார்கள். இது தொடர்பான ஆய்வுகளும் நடந்திருக்கின்றன. கழிவு ஒயில் பிரச்சினை குடிநீரைப் பாதித்திருப்பது உண்மையே. ஆரம்பத்தில் இதை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாணசபை இப்பொழுது மறுத்துரைக்கிறது. இந்தத் திடீர் மறுப்புப் பலரையும் சந்தேகம் கொள்ள வைத்துள்ளது. இதன் பின்னால் தாரளமான ஊழல்கள் சம்மந்தப்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தண்ணீருக்கான போராட்டம் நடந்து கொண்டே யிருக்கிறது. கழிவு ஒயிலுக்கு அப்பால் நிலத்தடி நீர் மாசடைந் திருப்பது பெரிய பிரச்சினை. நிலத்தடி நீர்மாசடைந் திருக்கும் பிரச்சினை மிக ஆழமானது. அது யாழ்ப்பாணத்தை வேறு விதமாக்கக்கூடியது.

யாழ் பல்கலைக்கழகம் பற்றிய உங்கள் மதிப்பீடும், அண்மையில் அது கொண்டுவந்த ஆடைக்கட்டுப்பாடு பற்றிய சுற்று நிருபமும், அதன் தொடரான மீள்பெறுகையும் அதன் பின்னர் கலைப்பீட மாணவர்களினால் ஆடைகட்டுப்பாடு பற்றி விடப்பட்ட ஏற்றுக்கொள்ளல் அறிக்கை பற்றிய உங்கள் எண்ணப்பாடு எப்படியாக இருக்கின்றது ?

பல்கலைக்கழகம் கவனிக்க வேண்டிய, செய்ய வேண்டிய காரியங்கள் பல உண்டு. அதையெல்லாம் செய்யாமல் இந்த மாதிரிப் பயனற்ற விழல்களில் விழுந் தெழும்புவது துக்கமே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பாழடைந்த ஒன்று. புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. ஆனால், கட்டிடங்களை அல்ல. ஆடைக்கட்டுப் பாட்டு விசயம்கூட ஆச்சரியப்பட வேண்டிய விசயமல்ல. அவர்கள் அப்படித்தான் சிந்திப்பார்கள். பானையில் உள்ளதே அகப்பையில் வரும்.

அப்போ யாழ்ப்பாணத்தில் புத்திஜீவிகள், சமூக சிந்தனையாளர்கள் இல்லவே இல்லை என்கின்றீர்களா ?

மாற்றங்களை உண்டாக்க வல்ல சிந்தனை, செயல் என்றவகையில் உள்ள ஆளுமைகள் யாருமில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழ்ச்சூழலிலேயே இன்று அப்படியானவர்கள் இல்லை.

கருணாகரனுக்கான இலக்கிய அரசியல்தான் என்ன ?

அப்படியொன்றில்லை. வாழ்க்கையை மையப் படுத்திய, விடுதலைக்கான அரசியல் சார்ந்த இலக்கியம் உண்டு. அதைக் கடந்ததும் உண்டு. வரையறைகள் எதுவுமில்லை. ●

# பூகம்பமாய்ப் பலித்துவிடும் பெருங்கனவு

## (சந்திரலேகா கிங்ஸ்லியின் கவிதைகள் பற்றிய அறிமுகக் குறிப்புகள்)

இலங்கைப் பெண் கவிதை வரலாற்றில் மலையகப் பெண் கவிதைகள் தனித்துவமான சமூக, பண்பாட்டு, அரசியல் பின்புலங்களைக் கொண்டுள்ளன. மலையகப் பெண் கவிதைகள் பெருந்தோட்டப் பொருளாதார உற்பத்தி உறவுகளையும் அவ்வுற்பத்தி உறவுகள் தோற்றுவிக்கின்ற வாழ்க்கை முறைகளையும் அடிப்படையாகக் கொண்டவை. இவற்றோடு, 1990 களில் தமிழ்ச் சூழலில் முக்கியத்துவம் பெறத் தொடங்கிய பெண்ணியக் கருத்துநிலைகளும் மலையகப் பெண் கவிதைப் பரப்பில் சிறப்பிடம்



பெறத்தொடங்கியன. இலங்கையில் பெண்ணியக் கருத்துநிலைகளைத் தேசிய ரீதியில் முன்னெடுத்த பெண்ணியவாதிகளும், இடதுசாரிகளும் மலையகப் பெண்கள் குறித்தும் பேசியும் எழுதியும் வந்துள்ளனர். இதன் காரணமாக மலையகப் பெண்கள் மத்தியில் பெண்ணியச் சிந்தனைகளும், பெண்ணியக் கோட்பாடுகளும் அறிமுகமானதோடு, பெண்ணியம் சார்ந்து இயங்குகின்ற இயக்கநிலைப்பட்ட செயற்பாட்டாளர்களையும் தோற்றுவித்தது. இவ்வகையான ஒரு சமூகப் பின்புலத்தில் மேற்கிளம்பிய பெண் கவிஞையாகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் சந்திரலேகா கிங்ஸ்லி விளங்குகின்றார்.

சந்திரலேகா கிங்ஸ்லியின் கவிதைகள் தாயகம், ஊடறு, தேட்டம், கலையருவி, புதுவசந்தம் முதலான சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இக்கட்டுரை சஞ்சிகைகளில் வெளிவந்த அவரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்டது. அவ்வகையில் அவரது "கிருசாந்திகளும் கிருமினல்களும்", "ஆரியவதிகளும் ஆணிகளும்", "அகலிகையே முனிவனும் கல்லானான்", "நாளை ஒரு நாள்", "இவைகள் கதைகள் - முடிவல்ல", "அது வரை", "வலிமை", "நீண்ட கனவு", "கற்கள் - கவண்கள் - தாவீது", "மனுசி", "தீர்ப்பு", "இன்னும் இருக்கின்றது பூமி" முதலான கவிதைகள் அதிக கவனத்துக்குரியவை.

சந்திரலேகா கிங்ஸ்லின் கவிதைகள் பல்வேறு பொருண்மைகளில் இயக்கம் கொள்கின்றன. ஆணாதிக்கச் சமூகச் சூழலில் பெண் என்ற பால்நிலைப் பாரபட்சம் எவ்வெவ் நிலைகளில் காட்டப்படுகின்றன என்பதும் இனத்துவ அரசியலின் பிற்போக்குத் தனங்களை வெளிப்படுத்தும் அதேவேளை ஒடுக்கு முறைகளுக்கெதிரான எதிர்ப்புக்குரலாக அவரது கவிதைகள் எவ்வாறு அமைகின்றன என்பதும் விரிவாக நோக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

இவற்றோடு, மலையகத்தின் தொழிற்சங்க அரசியலின் பிற்போக்கு அம்சங்களையும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற இனவாத அரசியலின் குரூரத்தையும் மிகத் தீவிரமாக விமர்சிக்கும் கவிதை

களைத் தனித்து ஆராயவேண்டியது அவசியமாகும்.

மலையக இலக்கியப் பரப்பில் பெண்ணியச் சிந்தனைகளைக் கவிதைகளுடாக வெளிப்படுத்தியவர் களுள் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஒருவர். ஆண்களால் கட்டமைக்கப்பட்ட எல்லா வகையான வரையறைகளி லிருந்தும் பெண் விடுதலை பெறவேண்டும் என்பதை மிக அழுத்தமாகவே அவரது கவிதைகள் வெளிப் படுத்துகின்றன. குடும்ப, சமூக, தொழில்நிலைகளில் காட்டப்படும் பால்நிலை பாரபட்சத்துக்கு எதிரான குரலாகவே அவரது மனுசி, வலிமை, இன்னும் இருக்கிறது பூமி முதலான கவிதைகள் அமைந்துள்ள.

சந்திரலேகா கிங்ஸ்லியின் "வலிமை" என்ற கவிதை தலைமுறைகளுக் கிடையிலான இடை வெளியைக் காட்டுகிறது. சமூக மாற்றத்துக்கேற்ப பெண் பற்றிய நோக்குநிலையும் மாறவேண்டும் என்பதைப் பதிவுசெய்கின்றது அக்கவிதை. எல்லா அடக்கு முறைகளிலிருந்தும் பெண் விடுதலை பெறு வாள் என்ற நம்பிக்கையை விதைப்பதாகவும், பெண்ணை வலிமைப்படுத்துவதாகவும் புதிய சிந்தனையை உடையவளாகவும், அதிகாரப் பூட்டுக் களை உடைத்தெறியும் ஆற்றல் உடையவளாகவும் அக்கவிதை எடுத்துரைக்கிறது. அக்கவிதை வருமாறு:

நான் என் பூட்டியின் சாயலல்ல
என் பாட்டியின் பிம்பமல்ல
என் அம்மாவின் அச்சுமல்ல
நான் புதிய படைப்பு
என் சிறகுகள் வலிமையானவை
என் சிறகுகள் மிக வலிமையானவை
என் சிறகுகள் மிகமிக வலிமையானவை
என் வார்த்தைகளில் துப்பாக்கியுமுண்டு
பூட்டுக்களை உடைத்தெறிந்த
புதிய சிந்தனை விதைகள்
எனக்குள் உண்டு
நிசியிருட்டைக் கிழித்துக்கொண்டு
ஓங்கிய அந்த அதிர்வில்
சர்வ அலங்காரமும் சரிந்துப் போயின
விடுதலைக்கு வித்திட
வேகமாய் விரைந்துப் போனாள்
வீதி அவளுக்கென்று விசாலமானது.

"இன்னும் இருக்கிறது பூமி" என்ற கவிதை யிலும் ஆண்களின் அதிகார முகம் உடைக்கப்படு வதைக் காணலாம். பெண்ணின் ஒவ்வொரு அசைவும், அவளது நடமாடும் வெளியும் ஆண்களால் தீர்மானிக் கப்படுவதை எதிர்ப்பதாகக் கவிதை அமைகிறது.

நினைவில் இருப்பதெல்லாம்
ஒவ்வொரு பொழுதும் மாறி மாறி வரும்
ஏச்சுகளும் பேச்சுகளும்
இழிவான வார்த்தைகளும்
இழுத்துக் கோணும் முகங்களும்
வார்த்தை வழுக்கி விழுந்தாலும்
பழி போடும் பாவங்களும்
எப்பொழுதும் வஞ்சகம்
வாசலில் நிற்கு மென்ற வக்கிரமும்
சுதந்திரமாய் சுகங்களைக்கூட
சுமக்கமுடியாத ரணங்களும்
கனவுகளைக்கூட கட்டவிழ்த்து
ரசிக்கமுடியாத ரணங்களும்
இன்னும் நீண்டு போகின்ற அவைகளும்
..........................................................
பெண்ணே எதையும் இழந்துவிடாதே
இன்னுமிருக்கிறது பூமி
எல்லைக்கோடு வரை
உன் கோசங்கள் ஒலிக்கட்டும்
உன் போராட்டங்கள்
நெருப்புப் பூக்களாய் பூக்கட்டும்
உன்னால் தானே
இன்னும் இந்த பூமி
இப்படியழகாய் இருக்கிறது.

"உன் போராட்டங்கள் நெருப்புப் பூக்களாய்ப் பூக்கட்டும்", "பெண்ணே எதையும் இழந்துவிடாதே இன்னுமிருக்கிறது பூமி", "உன்னால் தானே இந்த பூமி இப்படியழகாய் இருக்கிறது" முதலான கவிவரிகள் கவிதைக்கு மேலதிக அழுத்தத்தைக் கொடுக்கின்றன. ஆண்களின் ஒடுக்குமுறைக்கெதிரான பிறிதொரு கவிதையாகவே மனுசி என்ற கவிதையும் அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கவிதையிலிருந்து ஒரு பகுதி வருமாறு:

..........................................................
சட்டையை இறுக்கிக்கொண்டு
மரக்கையால் காயப்படுத்தினாயே
அந்தத் தழும்புகள் கேட்கின்றன?
நீயும் கொஞ்சம் ஆதிக்கத்தால்
அமுக்கமாட்டாயா...? என்று
சீ... வேண்டாமென்றேன்
என் சிந்தனைகள் என் செயல்கள்
என் நினைவுகள் என் உத்திகள்
என் கனவுகள் என் நிஜங்கள்
என்னுடைய நான் இதமான மென்மை
என் கோபங்கள் என் பலம்...
எல்லாமே இப்படியே...
இருந்தப்படி இருக்கட்டும்
எழு என்ற பொழுது எழவும்
இரு என்ற கணத்தில் இருக்கவும்
நானென்ன மாடா?
இல்லை மனுசி...

இக்கவிதை சமூக வெளியில் மட்டுமல்ல குடும்ப அமைப்புக்குள்ளும் பெண் அடக்குமுறை இடம் பெறுவதை அடையாளப்படுத்துவதோடு, அதற்கெதி ரான எதிப்புக் குரலாகவும் அமைகிறது.

சந்திரலேகா சிங்ஸ்லியின் "அகலிகையே முனிவனும் கல்லானான" என்ற கவிதையும் புதிய கருத்தியலை வெளிப்படுத்துகின்றது. அகலிகை பற்றிய தொன்மக் கதைமரபுகள் பல உள்ளன. அத்தொன்மக் கதைமரபுகளை நவீன சமூகத் தேவைக்கேற்ப மறு வாசிப்பும் மறுபடைப்பும் செய்தவர்கள் பலர். சந்திர லேகா கிங்ஸ்லி அகலிகையாக படிமமாக்கும் பெண்

இக்காலத்துக்குரியவள். ஒவ்வொரு காலத்திலும் பெண் என்ற போர்வையில் பெண்ணைக் கல்லாக்கும் அரசியல் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றது. புராண காலத்தில் கல்லாக்கப்பட்டவளுக்கும் நவீன காலத்தில் கல்லாக்கப்பட்டவளுக்கும் பெரிய வேறுபாடு இல்லை. ஒவ்வொரு காலத்திலும் இயக்கம் கொண்ட நுண்ணரசியலே காரணம் என்பதை பதிவுசெய்வ தாகவே அகலிகையே முனிவனும் கல்லானான் என்ற கவிதை விளங்குகின்றது. இக்கவிதையில் கவிஞர் படிமமாக்கியுள்ள முனிவனும் சமகாலத்துக்குரிய மேட்டிமைச் சக்தியாகவே அமைந்துவிடுகின்றது. அக்கவிதை வருமாறு:

..........................................

இருநூறு ஆண்டு கடந்தும்
கக்கூஸ் இல்லாமல் செத்துப்போகும்
தேயிலை மண்ணின் பாட்டாளிக் கூட்டம்
எட்டடி காம்பிராவுக்குள்
புணர்ந்தும் வாழ்ந்தும் செத்துப்போன போதும்
ஓட்டுவாங்கிக் கொண்டவர்கள் மாத்திரம்
இராசாக்களாய்ப் பூமி உலா வந்த போதும்............
மொத்தமாய் மனிதர்களைக் கொன்று குவித்தவன்
மனிதர்களை நாய்களாய்
முள் வேலிகளுக்குள் அகதிகளாய் ஆக்கிவிட்டு
ஏறாத சிங்காசனங்கள் எல்லாம் ஏறி
ஏமாற்றும் வித்தை காட்டி
விந்தைகள் பல செய்த போதும்
காணாது நிற்கும் முனிவா
நீ அகலிகையை மட்டும் ஏன் நோக்கினாய்?
அதிகாரமும் பணபலமும்
முனிவன் உன் கண்களை முற்றுகையிட்டதோ?
அகலிகையின் சிந்தனைகள்
ஆக்ரோசமாய் நிமிர்ந்த போது
முனிவனே நீ கல்லாகிப் போனாய்
முனிவனே நீ கல்லான செய்தி
இனி எந்தப் புராணத்தில் வரும்?

இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு ஆயுதப் போராட்டமாக வடிவங்கொண்ட போது அதிகளவு பாதிக்கப்பட்டவர்களாகப் பெண்களே விளங்கினர். அரசப்படைகளின் ஆதரவோடு மிகக் கொடூரமான பாலியல் துஷ்பிரயோகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பெண்கள் கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் எனச் சிங்களப் இனவாதிகளின் வன் முறைகள் நீண்டுகொண்டே சென்றன. ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்ற பகுதிகளிலும் அதற்கு வெளியிலும் பெண்கள் வன்முறைக்கு ஆளாகினார் கள். இவ்வகையான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பல பெண் கவிஞர்கள் கவிதைகளை எழுதினர். அவ்வாறு எழுதப்பட்ட கவிதைகளுள் கவிஞர் கலாவின் கோணேஸ்வரிகள், விநோதினியின் கிருஷாந்தி முதலான கவிதைகள் தனித்துவம் மிக்கவை. இவ்வகையான கவிதைகளோடு இணைத் துப்பார்க்கக் கூடியதாக சந்திரலேகா கிங்ஸ்லியின் கிருசாந்திகளும் கிருமினல்களும், நாளை ஒரு நாள், தீர்ப்பு முதலான கவிதைகளும் விளங்குகின்றன.

கிருசாந்திகளும் கிருமினல்களும் என்ற கவிதை அரசப்படையினரின் பாலியல் வன்முறைகளை அம்பலப்படுத்துவதாகவும் அவ்வன்முறை அரச ஆதரவோடு எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றது என்பதையும் வெளிப்படுத்தும் அதேவேளை அவ்வன்முறைக்கு எதிரான உரத்தக் குரலாகவும் அமைகிறது.

ஜனநாயகம் என்ற பெயரில்
கொடுமைகள் மட்டும்
அரங்கேற்றப்பட்ட மண் அது
வன்முறை மாத்திரம்
வழக்காகிப்போன காலமது
மனிதனின் ஒவ்வொரு அங்க அசைவையும்
புலன் விசாரணை செய்து
பதிவு செய்து கொண்டு வேவுபார்த்த
வேடிக்கையான பொழுதுகள் அவை
எது அந்த மண்ணில்
இதமாக எல்லாம் ஆக்கிரமித்து
வலை வீசிச் சங்காரம் செய்த ஆட்சியது.

கிருசாந்தியும்
அங்கு தேவையாக உலா வந்தவள்
காக்கிச் சட்டையுடன்
ஆட்சி அதிகாரத்தைக்
கட்டவிழ்த்து விட்டவர்களின் கண்களில்
ஆயுதப்பரிகாரிகளின் நெஞ்சங்களில்
பெண்ணென்னும் பெயர் புகுமுன்
அங்கங்களின் ஆகர்சிப்பு
நுழைந்து நுரைதள்ளிப்
பசி அவர்களை பாதி மிருகமாக்கியது
கண்களில் காமருசி
தேவதைகளைச் சாப்பிடுமளவு முறுக்கேறிப்போனது
கிருசாந்திகள் மண்ணில்
இழிவுப் பண்டமென ருசி பார்க்கப்பட்டார்கள்
ஓ கிருஷ்ண பரமாத்மாக்களே
நல்லூர்க் கந்தர்களே
நாராய்ப் பிழியப்பட்ட அபலைகளின் நெஞ்சத்தை
விலையே சொல்லப்படாமல்
விலைமாது போல் வீணாக்கப் பட்டாள்
காமப் பிசாசுக்களின் கண்களுக்கும்
அதிகார வர்க்கத்தின் ஆயுதம் ஏந்திய மகான்களுக்கும்
நீதியின் விலை சொற்பமானது
கிரிமினல்கள் இரட்சகர்கள் ஆக்கப்பட்டார்கள்
பாவம் கிருசாந்திகள் மட்டும்.

"நாளை ஒரு நாள்", "தீர்ப்பு" முதலான கவிதைகளிலும் பாலியல் பலாத்காரத்துக்கெதிரான எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலிப்பதை அவதானிக்கலாம். கவிஞரின் ஆத்திரமும் ஆவேசமும் நாளை ஒரு நாள் கவிதையில் வீச்சோடு வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

இற்றை நாள்
இதயம் மரத்துப் போன பின்னும்
உன் நினைவு
என்னை அலைக்கலித்தது

காமுகர்கள் உன்னைக் கண்டபடி
மொய்த்துக் குதறியதாய் - செய்தி
பத்திரிகைகள் பரபரத்தன
நாங்கள் கைகோர்த்து
ஆக்ரோஷமாய்க் கத்தினோம்
பாலியல் பலாத்காரம்
பாலியல் பலாத்காரம்
.................................
உன் உணர்வுகள் நைந்து போயின
உன் சவ்வுகள் உடைந்து போயின
உன் கனவுகள் நொருங்கின
உன் காத்திருப்புகள் கருகிப் போயின
யாரும் உன்னைக்
கண்டு கொள்ளவேயில்லை
...........................................
மேய்ப்பர்கள்
செம்மறிகளைத் தின்று தீர்ப்பது பூமிக்கு புதிதல்ல
நம் மண்ணுக்கும் கூட
உறங்குகின்ற எரிமலைகள்
சீக்கிரமே வெடிக்கட்டும்
அவன் நஞ்சுண்ட கண்டனானாலும்
சாம்பலாவான் - சாவான்
செத்துப் போவதற்கு முன் ஒரு செய்தி....
காமுகனே உனக்கும்
நாளை பெண்கள் பிறப்பார்கள்.

"தீர்ப்பு" என்ற கவிதையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு எதிரான பிறிதொரு கவிதையாக உள்ளது. சிட்டுக் குருவிகளாய் பறந்து திரியும் குழந்தைகளைக்கூடப் பாலியல் பலாத்காரம் செய்யும் கொடுமையைச் சாடுவதாகவே இக்கவிதை விளங்குகின்றது.

சிட்டுக்குருவியாய்
உலாவந்த தேவதையின் சிறகுகளை
பிய்த்து... பிய்த்துப் பிரித்து
தூக்குக் கயிறாக்கிய துஸ்டனே
மூன்று முரட்டு ஆண்மையின்
கோரப்பிடியில்
அந்த ரோஜா இதழ் உதிர்ந்து போனதா?
பூத்து பூசைக்கு போகுமுன்
பூவுக்குள் பூகம்பம் புகுத்திய பொல்லாதவர்களே.

"கிருசாந்திகளும் கிரிமினல்களும்", "நாளை ஒரு நாள்", "தீர்ப்பு" முதலான கவிதைகள் முன்னிறுத்துகின்ற அரசியல் பார்வை புறநிலையானது. இலங்கைப் பெண் கவிதை வெளியில் அரசப் படைகளின் வன்முறைகள் குறித்து வெளிவந்த பல கவிதைகள் தமிழ்த் தேசியவாதக் கருத்துநிலையின் பின்புலத்தில் அமைந்தவை. தமிழ்ப் பெண்கள், சிங்களப் பெண்கள் என்றவகையிலான இனத்துவப் பார்வை பல பெண் கவிஞர்களிடையே இருந்தது. இவ்வகையான இனத்துவ அரசியல் பார்வை அற்றவர்களில் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஒருவர் என்பதை அவரது கவிதைகள் பிரதிபலிக்கின்றன. வன்முறைகளுக்கு ஆளாகின்ற பெண்கள் அனைவரினதும் ஒருமித்த குரலாகவே அவரது கவிதைகள் அமைந்துள்ளன. இலங்கைப் பெண் கவிதைப் பரப்பில் சிங்கள அரசப் படையினரின் பாலியல் வன்முறைகள் குறித்து எழுதப்பட்ட கவிதைகளுள் சந்திரலேகா கிங்ஸ்லியின் இக்கவிதைகள் பொருளாலும் அதனை மொழிப்படுத்திய விதத்தாலும் சிறப்பிடம் பெறுகின்றன எனலாம்.

இலங்கைப் பெண்களில் கணிசமானவர்கள் வறுமையின் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டு வேலை செய்பவர்களாக இருக்கின்றனர். வறுமையின் காரணமாகச் சொந்தக் குடும்பத்தை விட்டுச் சென்றவர்கள் படும் துயரங்கள் அதிகம். தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காய்ச் சென்றவர்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையே தொலைப்ப வர்களாகவும் மாறிவிடுகின்றனர். பெற்றோரின் அரவணைப்புக் கிடைக்காமல் அவர்களது பிள்ளைகளும் திசைமாறிப் போய்விடுகிறார்கள். பெற்றோரின் பாதுகாப்பில் இல்லாத குழந்தைகள் பாலியல் ரீதியான துஸ்பிரயோகத்துக்கும் ஆளாகிவிடுகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பெண்களுக்கு வீட்டு உரிமையாளனின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிடுகின்றது. நிறைவேற்றாத சந்தர்ப்பத்தில் அவளது உயிருக்கும் ஆபத்து உருவாகின்றது. வீட்டு வேலைக்கு என ஏமாற்றி அவளைச் சுயதேவைகளுக்காகப் பயன்படுத்துகின்ற கொடுமையும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. வேலைக்கென அழைத்து அவளை வைத்து வியாபாரம் நடத்தப்படுகின்றது. வீட்டு எஜமானின் விருப்புக்கு இணங்காத பெண்களின் உடம்பில் ஆணி அடிக்கும் அளவுக்குக் கொடுமைகள் நடைபெறுகின்றன. இவ்வகையான பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு கவிதைகளை எழுதியவர்களுள் சந்திரலேகா கிங்ஸ்லி மிக முக்கியமானவர். அவரது ஆரியவதிகளும் ஆணிகளும் என்ற கவிதை அவ்வகையில் குறிப்பிடத்தக்கது. மலையகப் பெண்கள், முஸ்லிம் பெண்கள், சிங்களப் பெண்கள் என்றவகையிலான இனத்துவச் சட்டகம் எதுவுமின்றி இன எல்லைக்கடந்த பெண்களின் ஒருமித்த குரலாக ஒலிக்கும் கவிதையாகவே ஆரியவதிகளும் ஆணிகளும் என்ற பின்வரும் கவிதை அமைகின்றது.

மனித வர்க்கத்தின் பரிணாமத்தில்
உழைப்பின் கடைசிச் சொட்டு இரத்தமும்
விலையாக்கப்படவே
இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்.
.....................................................
ஆகவே ஆரியவதிகள்
வெளிநாடு செல்ல வேண்டும்
உடல் பூராவும் சூடுபட வேண்டும்
துடைப்பத்தால் அடிபட வேண்டும்
கக்கூஸ் கழுவி நாற வேண்டும்
காமப்பிசாசுகள் பிய்த்துச் சாப்பிட வேண்டும்
அராபியர்களின் ஏழு அங்குல... காயப்பட்டும்
வீட்டுச் சின்னப்பிள்ளைகள் முகத்தில்
காறித் துப்பியும்
எஜமாட்டி கேவலமாய்க் கூப்பிட

வீட்டிற்கு வந்த விருந்தாளிகள்
சிறீலங்காப் பணிப்பெண் என்று
விடுமுறைக்காய் அழைத்துச்செல்வர்
இன்னொருவன் கூத்தடிக்குஞ் சாமங்களில்
இவள் கண் விழித்தே இருக்க வேண்டும்

.............................................

ஆரியவதிகளுக்கு ஆணியடிப்பது என்பது
ஏசு நாதருக்கு ஆணி அடித்தது போல்
அத்தனையொன்றும் பிரசித்தமானதல்ல.

சந்திரலேகா கிங்ஸ்லியின் அதுவரை, இவைகள் கதைகள் - முடிவல்ல, நீண்ட கனவு முதலான கவிதைகள் பெண் என்ற அடையாளத் துக்கும் அப்பால் இனத்துவம், இனவாத அரசியல், ஒடுக்குமுறைகள் முதலானவை பற்றிப் பேசுகின்றன. பெண்ணியக் கருத்துநிலை என்ற சட்டகத்துக்குள் மட்டும் அவரது கவிதைகள் இயக்கம் கொள்ளவில்லை. ஒடுக்குமுறைகள் எங்கெல்லாம் இடம்பெறுகின் றனவோ அதற்கு எதிரான தர்ம ஆவேசமாகவே அவரது பெரும்பாலான கவிதைகள் விளங்குகின்றன எனலாம். அவரது கவிதைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுகள்:

ராஜா சிவப்பு மேலங்கியுடன்
சிம்மாசனமேறி
கோலோச்சுகின்றான்
மிகவும் சந்தோசக் களிப்பு திண்டாடுகிறான்.
மனிதர்கள் மட்டும் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.
பெரும் யுத்தகளம்
நீண்டகாலம் அதே யுத்தகளம்
காலடியில் செல்கள், தலைக்குமேல் கிபிர்கள்
கிளைமோர்.... குண்டு வெடிப்புகள்
அதே யுத்தகளம்..... எதுவும் மாறவில்லை
மனிதர்கள் மட்டும் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

.............................................

ஜீவகாருண்யம் - பௌத்த மதத்தில் அதிகம்
புத்தமதம் பூசிக்கப்படும் பூமி
ஆதற்கான அடையாளங்கள்?
இரத்த ஆறுகளா?

......................)........................

நாளை நானும் என் ஜனங்களும்
சுனிலும், சுபையரும், சுப்பிரமணியமும்
ஒரே புதைக்குழியில்
புதைக்கப்பட்டு விடுவோம்.......
ராஜா சிவப்பு மேலங்கியுடன்
சிம்மாசனமேறி
கோலோச்சுவான்
மனிதர்கள் மட்டும் இருக்கமாட்டார்கள்.

இக்கவிதையில் வரும் ராஜா, சிவப்பு மேலங்கி முதலான தொடர்கள் குறியீடகளாய் விரிகின்றன. பௌத்த மதத்தின் ஜீவகாருண்யம் அரசியலில் எவ்வாறெல்லாம் சிதைக்கப்படுகிறது என்பதையும் அதிகாரத்தில் இருப்பவர்களது இனத்துவப் பார்வை எவ்வாறு ஒட்டுமொத்த சமுதாயத்தையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறது என்பதையும் இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

அதுவரை, நீண்ட கனவு ஆகிய இரண்டு கவிதைளும் ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தையும் சமத்துவமான சமூக வாழ்வையும் வலியுறுத்தவனவாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

.............................................

எழுது எழுதிக்கொண்டேயிரு
மகத்துவமான மானுடம்
ஒடுக்கப்பட்டு

.............................................

ஓட ஓட துரத்தப்பட்டு
சின்னஞ் சிறியனாய் அடக்கப்பட்ட
அனைத்தும் விடுதலை பெறமட்டும்
நீ...
பாடு பாடிக்கொண்டேயிரு
இதயமில்லாமல் ஊனப்பட்டுப் போன
மரக்கட்டைகள்
மீண்டும் எழும்பி மானுட வாழ்வை
தேடும்வரை...பாடு...
போர்க்களப் பறைகள் ஒயும்வரை
மானுட நேயமற்ற மனங்கள்
சாகும்வரை நட நடந்து கொண்டேயிரு.

என்று எது வரை என்ற கவிதையிலும்,

உணர்வுடன் உதிரத்துடன்
வாழ்வின் அர்த்தங்களிலிருந்தும்
எதிர்பார்ப்புகளிலிருந்தும்
அடக்கி ஒடுக்கப்பட்ட ஆத்திரங்களுடன்
இதயத்துக்குள் எரிமலையின் கனவு
எப்பொழுதும் நிஜமாகி நிற்கின்ற நீண்ட பெரும்
நிஜக் கனவு
புதிரான பூமியைப் புரட்டிப் போடும் கனவு
இந்தக் கனவைச் சொல்லுவதும் வெல்லுவதும் கூடப்
போராட்டக் கனவு எப்பொழுதாவது
பூமியை பிளந்து, புதிர்களைக் கடந்து
பூகம்பமாய்ப் பலித்துவிடும் பெருங்கனவு.

என்று நீண்ட கனவு என்ற கவிதையிலும் சமத்துவமான சமுதாயம் ஒன்றின் அவா மேலோங்கி இருப்பதைக் காணமுடிகின்றது.

சந்திரலேகா கிங்ஸ்லி ஒரு சமூகச் செயற் பாட்டாளர். சமூக அசைவை உன்னிப்பாக அவதானித்து வருபவர். இதனால் அவரது கவிதைகள் பெரும்பாலும் புறவுலகு பற்றியதாக அமைந்துவிடுகின்றன. பெரும்பா லான ஈழத்துப் பெண் கவிதைகள் அகவுலகு பற்றியன வாகவே இருக்கின்றன. சந்திரலேகா கிங்ஸ்லி புறவுலக வாழ்வை அதற்கேவுரிய சமூக, தத்துவார்த்தப் பின்புலத் தோடு பார்ப்பதனால் அவரது கவிதைகள் பெறுமதி வாய்ந்தவையாக விளங்குகின்றன. அவரது கவிதை களின் எடுத்துரைப்புமுறை என்பது ஒற்றைப்படையான தாகவே அமைந்துவிடுவதை அவதானிக்கமுடிகின்றது. அவரது கவிதைகள் பன்முகத்தன்மையை நோக்கி நகரும் போது அவர் மேலும் கவனிப்புக்குள்ளாகும் கவிஞையாகத் திகழ்வார். அவரது கவிதைகள் தொகுப்பு வடிவம் பெறும்போது மலையகப் பெண் கவிதைப் பரப்பிலும், இலங்கைப் பெண் கவிதைப் பரப்பிலும் அதிக முக்கியத்துவம் பெறும் என்பதில் எந்த ஐயமுமில்லை. ●

கே.ஆர். டேவிட்

# குயிலுக்கும் ஒரு கூடு வேண்டும்

குயிலின் வருகையை எதிர்பார்த்து காகம் காத்திருக்கிறது.

குயிலிடமுள்ள பலவீனமான நடவடிக்கையை குயிலுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்ற சமாதான உணர்வைத் தவிர, கள்ளனைப் பிடிக்கின்ற கபட உணர்வு காகத்திடம் இருக்கவில்லை.

ஏறத்தாள ஐம்பது வருடகால முதுமை கொண்ட அந்த வேப்ப மரத்தின் நடுப்பகுதியில் இலைகள் அடர்த்தியாகவுள்ள ஒரு கிளையில் அதன் கூடு அமைந்துள்ளது. அந்தக் கூட்டுக்குள் காகத்தின் முட்டைகளோடு குயிலின் முட்டைகளும் இருப்பதைக் காகம் இன்று கண்டு கொண்டது. காகத்தின் கூட்டுக்குள் காகத்திற்குத் தெரியாமல் குயில் வந்து முட்டை இட்டுவிட்டது. காகத்தின் கூட்டுக்குள் குயில் வந்து முட்டை இடுகின்ற செயல் இன்றுதான் நடந்ததல்ல என்பதையும், இது குயில்களின் மரபுவழிச் செயற்பாடென்பதையும் காகம் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறது. இதனால் காகம் குயிலின் செயலைப் பார்த்து ஆச்சரியமோ, கோபமோ கொள்ளவில்லை.

ஆனால் குயிலின் தன்னிச்சையான அந்தச் செயலைக் காகத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

காகத்தின் கூடு... அது காகத்தின் வீடு... காகத்தின் இருப்பு... தனது வம்ச விருத்திக்காக தன்னால் கட்டப்பட்ட கூட்டினுள் குயில் தன்னிச்சையாக வந்து அதிகார தோரணையில் முட்டை இட்டுவிட்டுப் போன அந்தச் செயற்பாடு ஒரு அத்துமீறல் செயற்பாடாகவே காகம் பார்க்கின்றது.


இந்தக் கூட்டைக் கட்டுவதற்காகக் காகம் எடுத்த முயற்சிகளையும் கஷ்டங்களையும் காகத்துக் குத்தான் தெரியும். காகத்துக்குக் கைகள் இல்லை... கால்களும், சொண்டும் மட்டுந்தான் உண்டு... ஒவ்வொரு சுள்ளிகளாகக் கௌவி வந்து இக்கூட்டைக் கட்டுவதற்கு எத்தனை முறை பறந்திருக்கும்...? இந்தக் கூட்டைக் கட்டுவதற்கு இந்தக் காகத்திற்கு யாராவது கற்பித்தார்களா... அல்லது செய்தார்களா...?

காகம் தனது சொந்த முயற்சியாலேயே இந்தக் கூட்டைக் கட்டியது...

ஒவ்வொரு உயிரும் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கின்ற சம்பவங்களின் நீட்சியில் வம்ச விருத்தி என்பது மிக முக்கியமான காலப்பகுதியாகும். இந்தக் காகம் தனது தேவைக்காகக் கட்டிய கூடிது...

அந்தக் கூட்டுக்குள் குயிலின் முட்டைகள்...

வழமை போன்று தனது முட்டைகளுடன் குயிலின் முட்டைகளையும் அடைகாத்துப் பொரிப்பதில் காகத்துக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை... ஆனால் மரபு என்ற இந்தச் செயலினுள் உள்ளடங்கியிருக்கும் குயிலின் அத்து மீறல் உணர்வைத் தான் காகத்தினுள் ஏற்றுக்



கொள்ளமுடியவில்லை.

குயிலின் வருகைக்காக காகம் காத்திருக்கிறது..?

குயில் வருகின்றது... வந்த குயிலின் கூட்டுக்கு அருகில் உள்ள கிளையில் அமர்ந்து அங்குமிங்கும் பார்க்கின்றது... கூட்டுக்குள் காகம் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்ட பின் கூட்டுக்குள் இறங்கி ... தனது இறக்கைகளைப் பரப்பி அமர்ந்து முட்டை இடுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்துகின்றது...

காகம் இலைகளுக்குள் பதுங்கியிருந்து குயிலின் நடவடிக்கைகளை அவதானிக்கிறது.

குயில் முட்டை இட்டுவிட்டு... முட்டை இட்டதால் ஏற்பட்ட அடிவயிற்று எரிவைத்தனிப்பதற் காக அந்தக் கூட்டின் மீது சாவகாசமாய் அமர்ந்திருக்கிறது...

மறைந்திருந்த காகம் பறந்து வந்து...குயிலுக்கு எதிராகக் கூட்டின் மறுபக்கத்தில் அமர்கின்றது...

குயிலுக்குப் பெரும் அதிர்ச்சி...

காகத்தின் கண்களில் சாந்த உணர்வு... குயிலின் கண்களில் மிரட்சி உணர்வு...

“இது நான் எனக்காகக் கட்டிய கூடு...” காகம் மிக அமைதியாக ஆரம்பிக்கின்றது.

“இது உனது கூடுதான் என்பது எனக்குத் தெரியும்...” பார்வையை மறுபக்கம் திருப்பியபடி குயில் வேண்டாவெறுப்பாகக் கூறுகிறது.

நாங்கள் எங்களுக்காகக் கட்டிய கூட்டுக்குள் நீங்கள் வந்து முட்டையிடுவது சரியானதா” காகம்

மிகவும் அமைதியாகக் கேட்கின்றது.

"நம்மவர்கள் எதைச் செய்து வந்தார்களோ அதைத்தான் நானும் செய்தேன்..." குயில் எந்தத் தயக்கமுமின்றிப் பதில் கூறுகின்றது.

காகம் சிரிக்கின்றது.

"என்ன சிரிக்கிறாய்..." குயில் கோபமாகக் கேட்கின்றது.

"நம்மவர்கள் எதைச் செய்தார்களோ அதைத் தான் நானும் செய்கிறேன் என்று நீ கூறியதை நான் மறுக்கவில்லை. ஏனென்றால் நம்மவர்கள் தங்களின் கூட்டுக்குள் உங்களின் முட்டைகளையும் அடைகாத்து உங்களின் இனவிருத்திக்கு உதவியிருக்கின்றார்கள். புரியாதவொரு காரணத்தால் நீங்களும் செய்திருக் கின்றீர்கள். அதே போல புரியாதவொரு காரணத்தால் நம்மவர்கள் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

"பாரம்பரியமான வழியில் நாங்களும் போகா மல் புதியதொரு பாதையை நாம் தெரிவு செய்தால் என்ன? அதைத்தான் நான் உங்களிடம் கேட்கின்றேன்." காகம் சூசகமாகவும் அமைதியாகவும் கேட்கின்றது.

குயில் கேள்விக்குறியோடு காகத்தைப் பார்க்கின்றது.

"நண்பா நமக்கு மூத்தவர்கள் செய்ததையே நாங்களும் செய்து கொண்டு தொடர்ச்சியாக நாங்கள் அவமானப்படுவதைவிட நமக்கு முன்னால் இருக்கின்ற இன்னுமொரு பாதையில் நமது வாழ்க்கையைக் கொண்டு போனால் என்ன?" காகம் இப்படிக் கூறிவிட்டுக் குயிலின் முகத்தைப் பார்க்கின்றது.

"நீ கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை." குயில் சிவந்த தன் கண்களைச் சுருக்கியபடி கூறுகின்றது.

"பாரம்பரிய நடவடிக்கையால் ஏற்பட்ட தாக்கம் உங்களுக்கு மட்டுமல்ல, நம்மவர்களுக்கும் உண்டு.

நாம் நம்மை மாற்றிக் கொள்ளாதவரை நமக்கென்று எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை." காகத்தின் அடிவயிற்றிலிருந்து வார்த்தைகள் பிரவேசிக்கின்றன.

"காகங்கள் தங்களுக்கென்று ஒவ்வொரு கூடு கட்டுவது போல் குயில்களும் தங்களுக்கென்று ஒவ்வொரு கூட்டைக் கட்டிக் கொண்டாலென்ன..." காகம் இப்படிக் கூறிவிட்டு குயிலின் முகத்தைப் பார்க்கின்றது. கூறு குறிப்பாகப் பார்க்கின்றது...!

இது நடக்காது? நடக்கும் நீங்களும் நாங்களும் சேர்ந்து நடத்திக் காட்டுவோம். காலங்காலமாக எங்களின் கூடுகளுக்குள் அத்துமீறி நுழைவதும் சொந்த மாக ஒரு இல்லறம் இல்லாமல் அலைவதும் உங்களுக்கு கேவலமில்லையா? நீங்களும் நாங்களும் ஒரே இனத்தை சார்ந்தவர்கள் உங்களுக்கும் எங்களுக் கிடையில் உடலால் மட்டுமல்ல உருவத்தாலும் ஒற்றுமையுண்டு. மொழியால் மட்டும் நாம் வேறுபடுகின்றோம்.

நீங்கள் கூவுகிறீர்கள்... அது உங்கள் மொழி நாங்கள் கரைகின்றோம்.. அது எங்கள் மொழி ஐக்கிய உணர்வுக்கு... இனம், மொழி, பண்பாடுகள் என்றுமே தடையாக இருந்ததில்லை. அதே ஐக்கிய உணர்வினால் ஒரு இனமோ அல்லது மொழியோ அல்லது பண்பாடுகளோ தங்கள் அடை யாளங்களை இழந்து போனதற்கான எந்த வரலாறும் இதுவரை இல்லை.

நாங்கள் சேர்ந்து வாழ்வோம் நாங்கள் எங்கள் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்வோம். உங்களுக்காக கூட்டை நாங்கள் கட்டித் தருகிறோம். இப்படிக்கூறிய காகம் உயரப் பறந்து அந்த மரத்தின் உச்சிக் கொப்பில் போய் அமர்ந்தது.

கரைகின்றது உச்சஸ்தாயில் கரைகின்றது. இப்படி அந்தக் காகம் என்றுமே கரைந்ததில்லை. சில நிமிடங்களில் அட்ட திக்குகளிலிருந்தும் காகங்கள் வந்து சேர்ந்து விட்டன. காகங்கள் கூட்டின் மீதிருந்த குயிலையும் அழைத்து வந்த காகம் தனக்குப் பக்கத்தில் இருத்திக் கொள்கின்றது.

காகங்களும் குயிலும் ஒரே கொப்பில்.


காகக் கூட்டங்கள் மத்தியில் பெரும் அமைதி.

இதுவரையில் அந்தக் குயிலுக்கும் தனக்குமிடையில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் விளக்கிய காகம் நாங்கள் தான் இந்தக் குயிலுக்கு ஒரு கூடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கின்றது.

காகங்கள் மத்தியில் பெரும் அமைதி சில நிமிடங்களில் அக் கூட்டத்தில் இருந்த அண்டங் காகங்கள் எழுந்து பறக்கின்றன. அவர்கள் எங்களால் தங்களை அண்டங்காகங்களாக உயர்த்திக் கொண்டவர் கள் இனிமேல் எங்கள் மத்தியில் அண்டங்காகங்கள் தேவையில்லை. அவர்கள் போகட்டும் நண்பனாகி விட்ட இந்தக் குயிலுக்கு ஒரு கூடு வேண்டும். அதை நீங்கள் தான் கட்டிக்கொடுக்க வேண்டும். காகம் கூறி முடிக்கின்றது.

அமர்ந்திருந்த காகங்கள் எழுந்து அட்ட திக்கு களிலும் பறந்து சுள்ளிகளைக் கொண்டு வருகின்றன. அந்தக் காகக்கூட்டுக்குப் பக்கத்திலே குயிலுக்கும் ஒரு கூடு கட்டப்படுகின்றது. சில நாட்கள் சென்றிருக்கும். அந்த மரத்தில் எத்தனையோ காகக்கூடும் எத்தனையோ குயில்க் கூடுகளும் காணப்படுகின்றன. ●

## நூல் அறிமுகம்




நூல் - இலங்கை வாழ் தமிழ் மக்களின் வரலாறும் வாழ்வியலும்

ஆசிரியர் - கா.தவபாலன்


வெளியீடு - ஜீவநதி

பக்கம் - 84

விலை - 250/-

பிரதேசவாரியாக இலங்கைவாழ் தமிழர்களின் பண்பாடுகள், இயல்புகள், சமூக பழக்க வழக்கங்கள், பிரதேசச் சிறப்புகள், பிரபலமான இடங்கள், அரசியல் அமைப்புகள் பற்றி பேசும் நூல்.

# யாக்கோபு 1:15



அவள் கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை! தன் வாழ்க்கைப் பயணத்தின் நடுவில் இப்படியொரு சோகம் நிரந்தரமாய் நிகழுமென்று, அந்தச்சோகச் சம்பவம் நடைபெற்று, நாட்கள் பலவாகிவிட்டபோதும், அதன் நினைவுகள்... இன்னமும் அவளுக்குள் எரிகொப்பளங்களாய் வேதனைபடுத்திக் கொண்டிருந்தன.

அவளால் அந்நிகழ்வை மறக்க முடிய வில்லை. மன்னிக்கவும் முடியவில்லை. எவராலும் மன்னிக்கக் கூடிய சம்பவமும் அல்ல அது.

அம்மா, தம்பி, தங்கை யாவரும் நிலத்தில் கிடந்த அந்தக்காட்சியும்... அவனது கயமைத் தனமும்... அவளால் மறக்க முடியவில்லை மன்னிக்கவும் மனம் உடன்படவில்லை.

அவள் இப்போது தனிமரமாகி விட்டாள். உறவினர்களது உதவிக்கரமும் மெல்ல நலிவடைந்து செல்வதை உணர்ந்து கொள்ளமுடிகிறது அவளால்.

"திருமணம் முடிந்து வாழா வெட்டியாக வாழ்வதை விட, வாழ்க்கை பூராகவும் கன்னியாகவே யிருந்து, காலத்தைக் கடத்தி விட்டிருக்கலாம்...."

விரக்தியின் உச்ச வெளிப்பாடாக அடிக்கடி அவளுள் எழுகிறது எண்ணங்கள்.

விவசாயத் தொழிலாளியான தந்தை... உளவல்லமை குறைந்த தாய்... படிப்பை முடித்துவிட்டு தொழிலுக்காக காத்திருக்கும் தம்பி...... உயர்தர வகுப்பில் படிக்கும் தங்கை.... அனைவரும் இப்போது அவள் அருகில் இல்லை. எல்லாமே அவளுக்கு கனவு போலக்காட்சியளிக்கிறது. நேற்று நடந்த நிகழ்வு போலவும் தோற்றமளிக்கிறது.

"எங்கள் குடும்பம் ஏன் இப்படி சிதைவடைந்து போனது...? இதற்குக் காரணம் யார்....? நானா....? அன்றி எனது சாதகப் பலனா...? அல்லது விதியின் பழியா....? அப்படி விதியின் பழி யெனின் பழி தீர்த்தவனின் பழிக்கு பரிகார பலன் எது?

விடை காணமுடியாத வினாக்கள் ஒவ்வொன்றையும் பிரசவித்துக் கொண்டிருந்தது அவளது மனம்.

ஆரம்பத்தில் அவளுக்கு அவளது தந்தை திருமணம் நடத்தி முடிக்கும் காரியத்தில் ஈடுபடத் தொடங்கிய போது, சாஸ்த்திரியார் கூறிய வார்த்தைகள்... அவள் மனதில் விரிகின்றன.

"பிள்ளைக்கு சாதகத்தில் தோஷம் இருக்குது. கொஞ்சம் இழுபடத்தான் செய்யும். முயற்சி செய்யுங்கோ. எங்கையாவது ஒன்று சேராமலா போகும்...."

சாஸ்த்திரி கூறியது போல்,எங்கேயோ இருந்து வந்த "ஒன்று" அவளுடன் சேர்ந்து சில வருடங்கள் குடும்பம் நடத்தியபின், அக்குடும்பத்தைச் சிதைத்து விட்டுச் சென்றிருக்கிறது.

அவளது சாதக தோஷத்திற்கான பரிகாரங்கள் அனைத்தும் கோவில்களில் நிவர்த்தி செய்யப்பட்டு, பொருத்தம் நூற்றுக்கு எண்பத்தாறு வீதம் சரியென்று சாஸ்த்திரிமார்களால் கூறப்பட்ட பின்புதான், அவளது தந்தை இத்திருமணத்தை நடாத்தி வைத்தார்.

"சாஸ்த்திரங்கள் ஒரு நாளும் பொய்யா காது.. எனக்கு வந்தவன் சரியில்லை! அவனொரு மிருகம்! காமவெறியன்...."

இப்படித்தான் அவள் இன்று வரை நினைத்துக் கொண்டிருக்கிறாள். நினைவுகளை மனதிலிருந்து அகற்றவும் முடியவில்லை; அந்த நினைவுகளால் வாழ்க்கையில் நிம்மதியுமில்லை அவளுக்கு. அந்த நினைவுகளால் வாழ்க்கையில் நிம்மதியுமில்லை அவளுக்கு.

முதன் முதலாக அவன் பெண் பார்க்க வந்த பொது அவளைப் பிடித்திருந்தாலும், வந்திருந்த யாவருக்கும் தேநீர் கொண்டு வந்து உபசரித்த அவளது தங்கை மீது திரும்பிக்கொண்டது அவன் பார்வை!

வந்த காரியம் குறித்து எல்லோருக்கும் திருப்தி. பேரம் பேசல்கள் எல்லாம் புறோக்கர் மூலம் பேசித் தீர்த்தாயிற்று. திருமண நாளும் குறிக்கப்பட்டு விட்ட நிலையில், புறோக்கர் வந்தார் ஒருநாள் அவளது வீட்டிற்கு ஒரு விபரீதச் செய்தியோடு.

"மாப்பிள்ளைக்கு உங்கட குடும்பத்தை நல்லாப் பிடிச்சுக்கொண்டு விட்டுது. ஓம்.... எண்டு சொன்ன வார்த்தையை மாற்றாமல், அவர் உங்கட ரண்டாவது பிள்ளையைக் கட்டிக்கொள்ள ஆசைப் படுகிறார். அவருக்கு அவளையும் பிடிச்சிருக்குது"

அம்மா அழத்தொடங்கி விட்டாள். தம்பியும் தங்கையும் சினத்தகிப்பில் சிக்குண்டு நின்றார்கள். அவளோ மனம் இறுகிய நிலையில்... ஒதுங்கி நிற்க, அப்பா பேசத் தொடங்கினார். புறோக்கரைப் பார்த்து.

"புறோக்கர் நீர் என்ன வந்து சொல்லுறீர். இதென்ன சினிமாப் படம் எண்டு நினைச்சிட்டீரோ? பொருத்தம் பார்த்தது ஒருத்தியை; கட்டுறது இன்னொருத்தியையா....? மனசைப்பாராமல், குணத்தை விரும்பாமல் உடம்பைப் பார்க்கிற உதவாக்கரைகள் எங்கள் வீட்டிற்கு தேவையில்லை . நீர் போகலாம்..."

புறோக்கருக்கு எரிச்சலாக இருந்தது. அப்பா மீது அல்ல; அவன் மீது

பொடியனின் போக்கு பிழையெனத் தெரிந்தாலும், பொருளாதார ரீதியாக அப்பா கஷ்டப்படும் நிலையில், பிள்ளைகளில் யாராவது ஒரு பெண்ணைக் கட்டிவைக்கச் சம்மதிப்பார்..... என்ற எண்ணத்தில், அவர் அப்பாவை அணுகியிருந்தார்.

பொடியனுக்கு தாய், தந்தையில்லை. தகப்பன் வழி உறவினர் ஒருவரின் தயவில் வளர்ந்து இளைஞனாகிய போது... அவன் ஒரு தனியார் நிறுவனத்தில் உயரதிகாரிக்கு இரண்டாம் நிலையில் பணிபுரிவதாக புறோக்கர் அப்பாவிடம் கூறியிருந்தார்.

ஒரு நாள் காலை... அப்பா தன் தோட்டத்தில் உள்ள புகையிலைக் கன்றுகளுக்கு தண்ணீர் இறைப்பதற்குச் செல்ல ஆயத்தமாகிய போது. .... ஒழுங்கைக் கேற் திறக்கும் சத்தம் கேட்கிறது. அப்பா திரும்பிப் பார்க்கிறார். கேற் வாசலில் நிற்பவனைக் கண்டதும் அவருக்கு அதிர்ச்சி! கேற் வாசில்ல நின்றவன் மெல்ல அவரருகில் வந்து நின்றான்.

"உங்களோடை ஒரு விடயம் கதைக்க வேணும். நீங்கள் விரும்பினால் சரி. இல்லாவிட்டால் நான் திரும்பிப் போறன்"

சில கணங்கள்... மனத் தடுமாற்றத்துடன் நின்றார் அப்பா.

பின், தன் மனநிலையைச் சரிபடுத்திக்கொண்டு, அவனை அழைத்து வீட்டின் முன் விறாந்தையில் அமரச்செய்துவிட்டு, தானும் ஒரு கதிரையின் உட்கார்ந்து கொண்டார்.

வந்தவன் அப்பாவின் முகத்தை ஏறிட்டு நோக்கக் கூச்சப்படுவதையும், சொல்லவந்த விடயத்தைக் கூறுவதற்கு தயங்குவதையும் அப்பா கண்டார். அவரின் பார்வை அவன் மீது நிலைத்திருக்க, அதிகரிக்க தொடங்கியது அவனுக்குள் மனக்குழப்பம்.

"புறோக்கர் சொன்ன அதே விடயத்தை அவன் சொல்வானாகில், முகத்தில் அறைந்தாற் போல் பதிலைக்கூறி வெளியில் அனுப்புவம்..." என அப்பா மனதுக்குள் நினைத்துக்கொண்டிருக்கையில், அவன் தன் மௌனத்தைக் கலைத்து, அப்பாவுடன் உரையாடத்தொடங்கினான்.

"அண்டைக்கு புறோக்கர் வந்து ஒரு விடயத்தைச் சொல்லியிருப்பரென நினைக்கிறேன். அது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்று அறியமுடிந்தது. நான் அப்படிச்சொன்னதற்காக உங்களிட்டை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுறன். எனக்கு சேருகிற இணை லட்சணமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதால அப்படிக் கேட்டுப்போட்டன் உங்களுக்கு இதில விருப்பமிருந்தால் மேற்கொண்டு செயற்படுங்கோ. இல்லாவிட்டால் விட்டு விடுங்கோ. பிரச்சினையில்லை...." கூறிவிட்டு அவன் எழுந்து போய் விட்டான்.

அப்பா யோசிக்க ஆரம்பித்தார்

புறோக்கரிடம் கூறிவிட்ட வார்த்தைகளுக்காக, வீடு தேடி வந்து மன்னிப்புக் கேட்ட அவனது பண்பு இப்போது அவருக்குப் பிடித்திருந்தது. இளம் வயசு. சபலபுத்தி இருக்கத்தான் செய்யும். கட்டிக்கொடுத்து விட்டால் திருந்திவிடுவான். அவளுக்கும் சாதகத்தில் தோஷம் வேற இருக்குது. இந்தப் பொடியனை விட்டால்....?

அப்பாவின் யோசனை கடுமையாக இருந்தது. அவர் தன் குடும்பத்தில் உள்ள சகலரோடும் மனம் விட்டுக் கதைத்தார். காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும்.... என்ற மன ஆறுதலோடு திருமணத்துக்கு சம்மதம் கூறிவிட்டார்.

அவனுக்கும் - அவளுக்கும் திருமணம் முடிந்து மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. அவளது உடலில் எந்தவித மாற்றங்களும் தென்படாதது குறித்து அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கவலையாக இருந்தது. அதுபற்றி அம்மா அவளிடம் விளக்கம் கேட்டபோது, அவளது பதில்..... அம்மாவுக்கு திருப்தி தரவில்லை. நாளடைவில் தனது மகளின் முகம் மகிழ்ச்சியற்று வருவதையும், மருமகன் வீட்டிற்கு வருவதைக் குறைத்துக் கொண்டு.... தற்போது நிரந்தரமாக

வீட்டிற்கு வருவதை நிறுத்திக்கொண்டதையும் கண்ட அம்மாவுக்கு, அவர்களது குடும்ப வாழ்க்கை குறித்து வலுக்கத்தொடங்கியது சந்தேகம்

ஒரு நாள் வலுக்கட்டாயமாக அவளிடம் விளக்கம் கேட்டாள் அம்மா.

இதற்கு அவள் கூறிய பதில்...

தாங்கள் அனைவரும் ஏமாற்றுப்பட்டு விட்டதை அம்மாவால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அப்பாவிடம் விடயத்தைக்கூறிய போது மனம் பேதலித்துப் போனார். நம்பிக்கெட்டுப்போனதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை நினைத்து... நினைத்து... அதுவே நாளடைவில் அவருக்கு மன அழுத்தமாகி... ஒருநாள் பொழுதுசாயும் வேளை திடீரென இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டார்.

அப்பா மறைந்ததும்..... மருமகன் அவர்களது வீட்டிற்கு வரத்தொடங்கினான். அவன் வரும் நாளில், அவனைத் தட்டிக்கேட்க யாருமில்லாத நிலையில், அவ்வீடு பெரும் களேபரமாகக் காட்சியளிக்கும். அக்கம் பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள் அவனது நோக்கமறிந்து அவனை அசிங்கமாக பார்க்கத்தொடங்கினார்கள். அவன் யாருடைய பார்வைகளையும் விமர்சனங்களையும் தன் கவனத்தில் எடுக்கவில்லை. அடிக்கடி வந்து அவர்களை மிரட்டத்தொடங்கினான்.

விடயமறிந்த புறோக்கர் ஒரு நாள் அவர்களது வீட்டிற்கு வந்தார்.

அவள் அவனது கயமைத்தனத்தை கூறினாள்.

"கலியாணம் முடிஞ்சு மூண்டு மாசம் கழிஞ்ச பின்பு, அவர் என்ர தங்கச்சியைக் கட்டித்தரச் சொல்லி என்னோடை ஒரே ஆய்க்கினை. நான் மாட்டன் எண்டு சொல்லிப்போட்டன். பிறகு இஞ்சை வாறதைக் குறைச்சவர். அப்பா செத்தாப்பிறகு இப்ப வரத் தொடங்கியிட்டார். வந்து கரைச்சல் குடுக்கிறார். அவளைக் கட்டித்தரட்டாம். இல்லாட்டிக் கொலை செய்வனெண்டு பயமுறுத்துறார்...."

கண்களில் இருந்து நீர்வழிய... கூறி முடித்தாள் அவள்

புறோக்கருக்கு என்ன பதில் கூறுவ தென்பது தெரியவில்லை. அவளை அனுதாபத்தோடு பார்த்தார். அவனை அந்தக்குடும்பத்திற்குள் கொண்டு வந்ததற்காக மனம் வருந்தினார். இறுதியாக.... பொலிஸில் முறைப்பாடு கொடுக்கும்படியும், சாட்சி தேவைப்பட்டால், தான் அதற்கு உதவி செய்வதாகவும் கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

அவர் போய் ஒருவாரத்தின் பின்பு அவளைத்தேடி அவன் வந்திருந்தான் ஒரு மூர்க்கத்தனமான வெறியோடு! வழக்கம் போல அந்த வீட்டில் கூச்சலும் குழப்பமும் நிறைந்து கொண்டன. அயலவர்கள் அதைப்பெரிதாக கவனத்தில் எடுக்க வில்லை. அது அவர்களின் குடும்பப் பிரச்சினை... என ஒதுங்கியிருந்தார்கள்

இருந்தாற் போல் அவலக்குரல்கள் மிகுந்த தொனியாக ஒலிப்பது கேட்டு ஒருசிலர் அங்கு விரைந்தார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி... அவர் களும் மனம் அதிர்ந்து குரல் எழுப்பத் தொடங்கினார் கள். ஊரின் ஒரு பகுதி திரண்டு வந்தது அந்த வீட்டிற்கு.

அம்மா, தங்கை, தம்பி அனைவரும் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்க.... அவள் மட்டும் பலத்த வெட்டுக்காயங்களுடன் குற்றுயிராய்....

தகவலறிந்த பொலிஸ் அவனைத் தேடிப்பிடித்து விசாரணைக்குட்படுத்தியது. அவள் வைத்தியசாலையில் நீண்ட நாட்களின் பின்பு இருந்து விட்டு வெளியே வந்தாள் மிகுந்த உளத்தாக்கத்துடன்

"மெய்யே! உந்தவெறியனுக்கு உப்பிடியுமொரு எண்ணப்பாடு இருந்ததாமே...?"

"பாவம்! அந்தப் பெட்டை. இப்ப தனிச்சுப்போய் நிற்குது.."

"உந்த வேலைக்கு "கோர்ட்" தூக்கிலதான் போடுமெண்டு உங்கை சனம் சாதி பறையுதுகள்..."

"சனம் சாதி பறையுறமாதிரித்தான் நடக்கப்போகுது போலக்கிடக்குது..."

ஊர் முழுவதும் அலை மோதத் தொடங்கிய விமர்சனங்கள்... கருத்துக்கள்.... கண்டனக்குரல்கள்...

அவள் இப்பொழுது தனித்து விடப்பட்ட ஜீவனாய்.... தான் வாழ்ந்த இல்லத்துக்குள்ளிருந்து, தனது சாதக தோஷத்தை நினைத்தபடி.... தனது உறவுகளைப் பிரிந்த கவலையில் அழுதபடி..... நீதிமன்றின் தீர்ப்புக்காக காத்திருந்தபோது


ஒரு நாள் -

பத்திரிகைகளில் வெளிவந்த முன்பக்க தலைப்புச்செய்தியை பார்த்து பரபரப்பாகியிருந்தது ஊர்!

முக்கொலை வழக்கின் குற்றவாளிக்கு மரணத்தண்டனை! நீதி மன்றம் தீர்ப்பு!

> இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக்கோபு -1:15)

## நூல் அறிமுகம்




நூல் - நினைவுக்குறிப்புகள்
ஆசிரியர் - அ.யேசுராசா
வெளியீடு - அலை
பக்கம் - 136
விலை - 300/-

ஜீவநதியில் அ.யேசுராசா அவர்களால் எழுதப்பட்ட நினைவுக்குறிப்புகள் என்னும் தலைப்பிலான 15 கட்டுரைகளின் தொகுப்பு நூல். இந்நூலில் தனது அனுபவங்கள், இலக்கிய நிகழ்வுகள், இலக்கியக் குழுறுபடிகள், சினிமா என பல்வகை விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

## பேசும் இதயங்கள்

ஆசிரியர்
ஜீவநதி
அன்புடையீர்

1

ஜீவநதி 93இல் சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய ““கள்” பெற்ற சிறுவாழ்வு” என்ற குறிப்பில் “கள்” விகுதி சேரும் போது மெய்யெழுத்து எப்பொழுது மிகையாக ஒலிக்கும் என்பதற்குச் சில விளக்கங்கள் தந்துள்ளார்.

இனிப்புக்கள், பாக்குக்கள், நாக்குக்கள், வாக்குக்கள், பொச்சுக்கள் என்றவாறு எழுதின் பொருள் திரியும் என்பதாலேயே அவ்வாறு எழுதல் தவறு என அவர் சுட்டுகிறார். அதே வேளை, அவர் ஏற்புடையன எனக் கூறும் பாக்கள், ஈக்கள், மாக்கள், பூக்கள் என்பவற்றில் அதேவாறான பொருள் திரிதல் நிகழ்வதை ஏற்று அவற்றை அவர் வேறுவிதமாக நியாயப்படுத்துகிறார்.

இனிப்புக்கள் என எழுதல் தவறென்பதற்கு அவர் தருங் காரணம் அது “இனிப்பான கள்” என விளங்கப்படும் என்பதே என நாம் ஏற்றால், இனிப்புக் களை என எழுதலில் அப் பிரச்சனை இல்லாமையால் அவ்வாறு எழுதல் ஏற்புடைத்தாகுமா?

தமிழ்ப் புணர்ச்சி விதிகள் ஒலியியல் அடிப்படை யானவை என்பது கூடப் பொருந்தும் என நினைக் கிறேன். ஒவ்வொரு சொல்லிலும் மெய்யெழுத்து மிகையாக ஒலித்தலாற் பிரச்சினை வருமா என ஆராய்ந்து விதிகளை வகுத்தல் கடினம். எனவே ச.சீ.உ. அவ்விடத்து நன்னூலாரின் விதியையுங் கூறியிருப்பின் பயன் மிகுந்திருக்கும்.

விதிகள் பொதுத் தன்மையுடையன. எனினுங், குறிப்பான சூழ்நிலைகள் விலக்குகளை அனுமதிக்கும். அனைத்தினும் மேலாக, மொழியின் சமூக நடைமுறை யின் முன் இலக்கணம் பணிவதையும் நாமறிவோம்.

தொல்காப்பியத்தையோ நன்னூலையோ சான்றுகாட்டி இலக்கணச் சரிபிழைகளை விவாதிக்கும் காலம் பெரிதும் மலையேறி விட்டது. எனினும் புதிய வற்றைப் புகுத்துகையில் மரபை ஏற்காவிடினும் மரபை அறிந்து அதை மறுப்பது தகும் என்பது என் எண்ணம். மரபினின்று விலகலும் ஏதோ ஒரு ஒழுங்கிற்குட்பட்டு நிகழும் தேவையைக் கட்டுரையாளர் ஏற்பாரென நம்புகிறேன்.

தனது வாதத்தின் போக்கில், “தையல் சொற் கேளேல்” என்ற ஔவை மொழியைப் பெண்ணின் சொற் கேளேல் என விளங்குகிறார். தையல் என்பது இங்கு பொதுப்படப் பெண்ணையன்றி மனைவியைக் குறிக்கிறது என்றே நினைக்கிறேன். இது பெண்களை இழிவுபடுத்துவது என்பதை ஏற்கும் அதே வேளை, அதனுள் மிகையாக வாசிப்பது கேடு எனவுங் கூற வேண்டுகிறேன்.

2

தி. கோபிநாத் யாழ் நூலக எரிப்பை வெறும் அரசியல் நிகழ்வாகக் காண்பதுடன் அவ்வெரிப்பால் ஒரு இழப்புமில்லை எனவுங் கூறியமை வியப்பளிக்கிறது. முன்னேறிய மேற்குலக நாடுகளிலும் பல ஆசிய நாடு களிலும் பழைய சுவடிகளைப் பொன்னெனப் பேணுவது ஏனென அவர் அறியார் போலும். நூலகம் என்பது புத்தகக் குவியலல்ல. அது ஒரு ஆவணக் காப்பகமு மாகும். நாம் போலியானதொரு தொழினுட்ப மயக்கத் துள் நம்மை இழக்கிறோமென அஞ்சுகிறேன். தொல் பொருள்கள் பற்றி நம் சமூகத்திலுள்ள அசட்டை எவ்வகை யிலும் தொன்மையான நூல்களின் அழிப்பையோ பேணாமையையோ புறக்கணிக்க நல்ல காரணமாகாது.

அண்மையில் என் மனைவி, யாழ் பல்கலைக் கழகத்துக்கு அன்பளிக்க வேண்டி, ஏறத்தாழ 80 ஆண்டு கள் பழைய சேதப்பட்ட சில நூல்களைச் செம்மைப் படுத்தத் தேசிய நுலகத்துக்குக் கொண்டுசென்றார். அவை ஒன்றும் தேடரிய நூல்களல்ல. எனினும் அங்கிருந்த அலுவலர் இவற்றை ஏன் எங்களுக்குத் தர மாட்டீர்கள் என்று கெஞ்சாத குறையாகக் கேட்டதாக அறிந்தேன்.

தமிழர் தம் தொன்மை பற்றிப் பெருமைப்படுவர். ஆனால் அதை மதிக்க அறியார் என்ற முடிவுக்கு வர அஞ்சுகிறேன்.

–சி.சிவசேகரம்

### பொழியாப் பெருமழை

பிறை தேடிக்கிடந்த முன்னிரவில்...
ஆதிகால ஞாபகங்கள் நிரவிக்கிடந்த
உனக்கும் எனக்குமான வெளியில்...
நானுமிருந்தேன்
நிலைத்த இருப்பை
உணர்த்திக் கொண்டே
நீயுமிருந்தாய்

பாதங்களின் கனத்தில் மூச்சுமுட்டும்
சிறுபுல்லாய்த்
திகைத்துத் திணறி
வார்த்தைகள் தேர்ந்து நிமிர...

பசிய வனத்தின் வாசனையாய்
என்னைத் தனிக்கவிட்டு
கடந்து போயிருந்தாய்
நீ
பொழியாப் பெருமழையாய்!

ஜென் யாழினி சதீஸ்வரன்




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.